உ

சிவமயம்.

# கதிர்காமபுராணம்.



இது

யாழ்ப்பாணத்து வதிரி

வித்துவான்

ஸ்ரீமத். சி. நாகலிங்கபிள்ளை அவர்களால்

இயற்றி,

பருத்தித்துறை

சரஸ்வதியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1932.

விலை சதம் 75.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்.

# கதிர்காம புராணம்.

இது

யாழ்ப்பாணத்து வதிரி

வித்துவான்

## ஸ்ரீமத். சி. நாகலிங்கபிள்ளை

அவர்களால் இயற்றி,

பருத்தித்துறை

சரஸ்வதியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1932.

விலை சதம் 75.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படலங்களின் அட்டவணை.


| விஷயம். | | | பக்கம். |
|---|---|---|---|
| அபகீர்த்திமுத்திபெறுபடலம் | ... | ... | எஎ. |
| அவையடக்கம் | ... | ... | ச. |
| ஆற்றுப்படலம் | ... | ... | ரு. |
| கடவுள்வாழ்த்து | ... | ... | க. |
| கதிர்காமகிரிப்படலம் | ... | ... | ருரு. |
| கதிர்காமசைலமான்மியப்படலம் | ... | ... | எஉ. |
| சூரபன்மன்வதைப்படலம் | ... | ... | சஉ. |
| தாரகன்வதைப்படலம் | ... | ... | உஎ. |
| திருநகரப்படலம் | ... | ... | கங. |
| திருநாட்டுப்படலம் | ... | ... | கூ. |
| திருமணப்படலம் | ... | ... | கூ0. |
| திருவவதாரப்படலம் | ... | ... | உஉ. |
| தேவர்கலிவலிவென்றபடலம் | ... | ... | கூஉ. |
| நைமிசப்படலம் | ... | ... | ககூ. |
| பாவதீபன்அருள்பெறுபடலம் | ... | ... | அகூ. |
| புராணவரலாறு | ... | ... | ந. |
| மாதர்அருள்பெறுபடலம் | ... | ... | கூஎ. |
| மீட்சிப்படலம் | ... | ... | கூஅ. |
| வணிகர்தனம்பெறுபடலம் | ... | ... | சுச. |
| வழிநடைப்படலம் | ... | ... | நஎ. |
| விநாயகர்காப்பு | ... | ... | க. |
| வேட்டுவக்கள்வர்அருள்பெறுபடலம் | ... | ... | அச. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்.

# சிறப்புப் பாயிரம்.

புலோலி, ஆரியதிராவிடமஹாபண்டிதர்

## பிரமஸ்ரீ. ம. முத்துக்குமாரசுவாமிக்குருக்கள்

அவர்கள் இயற்றியவை.

ஆசிரியவிருத்தம்.

சீர்வளர் செல்வ விலங்கைமா தேசஞ் சேர்கதிர் காமநற் றலம்வாழ்
பேர்வளர் கருணைக் கந்தவேள் சரிதம் பெட்புட னியாவரு முணர
நேர்வளர் தமிழாற் கதிர்காம புராண நிலவுபேர் வழங்குற வமைத்தான்
கூர்வளர் மதியா ளுகலிங் கப்பேர் குலவுசீர் வித்துவான் றானே. (க)

முந்தியா மாரி யந்தமி ழாசான் முகமினி தாய்ந்துணர் நிபுணன்
சந்தியா நியமஞ் சிவார்ச்சனை யாதி தகவுற வியற்றிடுஞ் சைவன்
இந்தியா விலங்கை யெங்கணும் பலரு மினிதுபா ராட்டுசா துரியன்
புந்தியாற் பலநூற் கேள்வியான் மிக்கோன் புகல்புரா ணம்வகுத் தவனே.

ஆரிய பாஷை சோதிட்கா மப்பேர் அரைபுகழ் பெற்றநித் தலமே
போரில்வந் தெதிர்க்கு மவுணரை வீட்டிப் புகலுறு மமரரைக் காக்க
நேரியல் கருணைக் கந்தவேள் வந்து நிலவிவாழ் பாடிவீ டிதுவே
கூறிய மதியா லித்தல புராணங் குணமுளா ரினிதுநா வேரே. (ங)

கலியுக வாத ரென்றுபேர் வழங்கு கந்தவே ளருள்வளர் சரிதம்
மலியுமன் புடனே படிப்பவர் கேட்போர் மாண்பொடு [illegible] கெடுத் துரை
மெலிவறு செல்வ வாழ்வதிர்க் காயுண் மிகுசுக மேவியிங் கமர்ந்து [ப்போர்
பொலிவுறு நித்த முத்திமேன் மேவு புண்ணிய ராவது நிசமே. (ச)

யாழ்ப்பாணத்து நவிண்டில்

## பிரமஸ்ரீ. சு. கனகசபாபதிக்குருக்கள்

அவர்கள் இயற்றியவை.

கொற்றவேற் குமரன் மேவுங் குலக்கதிர் காம மேன்மை
சொற்றதொல் வடநூ னோக்கிச் சுருக்கறப் புராண மாக
உற்றசெந் தமிழிற் பாடி யுதவென வன்பர் வேண்டக்
கற்றவர் மதிக்கு மாற்றாற் கவின்பெறக் கழறி னனே. (க)

அன்னவ னேவ னென்னி லணியுறு மல்வாய் தன்னின்
முன்னுறு மழவ ராய முதலிய தினக ரப்பேர்
மன்னிய வுடையார் பாரார் மதித்தகந் தப்ப ராமம்
மின்னிய வுடையார் மேன்மை மிகுகதிர் காம வள்ளல். (உ)

ஆர்தகை மணியஞ் சேவ மமைந்திடு மியவு ளாரும்
வேந்தரும் விழைகந் தப்ப வேளொனும் மணிய மின்றோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாந்தரு வழியிற் சின்னத் தம்பிமுற் றவத்திற் றந்தோன்
யாந்தளஞ் சென்னி யாவர்ப் பணிவுடன் சபரி செய்வோன். (௩)

துங்கவா ரியத்து மின்சொற் றலங்குறு திராவி டத்துந்
தங்குமன் னூல்க ளாய்ந்த தாமகல் புலவ னானோன்
பங்கம தில்லாச் சீரோன் மதியன சாந்த முள்ளோன்
பொங்கு தேங் குவளையந்தார் புனை தரு புயத்தி னானே. (௪)

குலனரு ளாதி யாகக் கூறிடு மிலக்க ணங்கள்
நலனுற வமைந்தோன் நன்பா னண்ணிடு மாண வர்க்குப்
புலனுற நூல்க ளென்று மம் புகட்டுறு மோச னானோன்
றலனுறச் சைவ வாய்மைச் சற்பிர சங்கஞ் செய்வோன். (௫)

செந்திவா ழிறைவ னான சின்மய வடிவே லன்பான்
முந்தியே யாகி நோற்று முழுதருள் படைத்துத் தூய
புந்தியோ னாகி யாரும் புரிந்திடு வித்து வானா
வந்ததோ மோதரப்பேர் வள்ளற னனுச னானோன். (௬)

பரமதம் பாற்றும் வெற்றிப் பண்டித ரத்ந மென்றே
திரமுற வெவரும் பேசுந் திறம்பெறு குரிசி லானோன்
கரவக லகத்தோன் யாருங் கண்ணென நயக்கு நீரான்
மரபினி லுயர்ந்தோ னாகி மண்ணிடை யொளிரு மாண்போன். (௭)

போற்றுறு மிந்தி யாவிற் புண்ணிய தலங்க ளெங்கும்
வீற்றுவீற் றிருந்த பன்னூல் வித்துவ சமுகம் வெஃகச்
சாற்றுறொன் னூலி னுற்றைத் தகவுற விரித்த நீரான்
மாற்றுயர் பசும்பொ னாகு மதித்திடு மருமை வாய்ந்தோன். (௮)

வரம்பெறு தேவி கோட்டை வைசிய திலக னான
திரம்பெறு மிலக்கு ணப்பேர் திகழ்ந்திடு வள்ளல் பேணுந்
தரம்பெறு தாவா லிந்தத் தரைபுகழ் வதிரி தன்னிற்
பரம்பெறு மில்ல றத்தைப் பண்புட னடாத்து வோனே. (௯)

வாய்ந்தநற் குணக்குன் றென்ன வசுமதி யுறைவோர் யாரும்
ஆய்ந்துகொண் டறைய நின்ற வன்புசேர் தகைமை யாளன்
காய்ந்துதீப் பவங்க டம்மைக் கடிந்திடு பரிச முள்ளோன்
ஏய்ந்தவ மில்லா நாக லிங்கனும் புலவ னேறே. (௧௦)

---

நவிண்டில்

## பிரமஸ்ரீ சு. சிவானந்தபாரதிகள்

### இயற்றியவை.

---

தேவொன்று மாரியஞ் செந்தமிழ் நூல்பல தேர்ந்துணருங்
கோவொன்று பண்டிதன் கங்கா குலமுறை கொண்டவனும்
மாவொன்று செல்வ வதிரி நகர்தனில் வாழ்பவனும்
பாவொன்று நர்வுடைச் சீரிய னின்னும் பகர்ந்திடினே. (௧)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்.

# சிறப்புப் பாயிரம்.

புலோலி, ஆரியதிராவிடமஹாபண்டிதர்

## பிரமஸ்ரீ. ம. முத்துக்குமாரசுவாமிக்குருக்கள்

அவர்கள் இயற்றியவை.

ஆசிரியவிருத்தம்.

சீர்வளர் செல்வ விலங்கைமா தேசஞ் சேர்கதிர் காமநற் றலம்வாழ்
பேர்வளர் கருணைக் கந்தவேள் சரிதம் பெட்புட னியாவரு முணர
நேர்வளர் தமிழாற் கதிர்காம புராண நிலவுபேர் வழங்குற வமைத்தான்
கூர்வளர் மதியா னுகலிங் கப்பேர் குலவுசீர் வித்துவான் றானே. (க)

முந்தியா மாரி யந்தமி ழாசான் முகமினி தாய்ந்துணர் நிபுணன்
சந்தியா நியமஞ் சிவார்ச்சனை யாதி தகவுற வியற்றிடுஞ் சைவன்
இந்தியா விலங்கை யெங்கணும் பலரு மினிதுபா ராட்டுசா துரியன்
புந்தியாற் பலநூற் கேள்வியான் மிக்கோன் புகல்புரா ணம்வகுத் தவனே.

ஆரிய பாஷை சோதிட்கா மப்பேர் அரைபுகழ் பெற்றறித் தலமே
போரில்வந் தெதிர்க்கு மவுணரை வீட்டிப் புகலுறு மமரரைக் காக்க
நேரியல் கருணைக் கந்தவேள் வந்து நிலவிவாழ் பாடிவீ டிதுவே
கூரிய மதியா லித்தல புராணங் குணமுளா ரினிதுநா வேரே. (ங)

கலியுக வரத சென்றுபேர் வழங்கு கந்தவே ளருள்வளர் சரிதம்
மலியுமன் புடனே படிப்பவர் கேட்போர் மாண்பொடு பிணிக்கெடுத் துரை
மெலிவறு செல்வ வாழ்வதிர்க் காயுண் மிகுசுக மேவியிங் கமர்ந்து [ப்போர்
பொலிவுறு நித்த முத்திமேன் மேவு புண்ணிய ராவது நிசமே. (ச)

யாழ்ப்பாணத்து நவிண்டில்

## பிரமஸ்ரீ. சு. கனகசபாபதிக்குருக்கள்

அவர்கள் இயற்றியவை.

கொற்றவேற் குமரன் மேவுங் குலக்கதிர் காம மேன்மை
சொற்றதொல் வடநூ னோக்கிச் சுருக்கறப் புராண மாக
உற்றசெந் தமிழிற் பாடி யுதவென வன்பர் வேண்டக்
கற்றவர் மதிக்கு மாற்றாற் கவின்பெறக் கழறி னானே. (க)

அன்னவ னேவ னென்னி லணியுறு மல்வாய் தன்னின்
முன்னுறு மழவ ராய முதலியே தினக ரப்பேர்
மன்னிய வுடையார் பாரார் மதிக்குதகந் தப்ப ராமம்
மின்னிய வுடையார் மேன்மை மிகுகதிர் காம வள்ளல். (உ)

ஆந்தகை மணியஞ் சிவ மநைந்திடு மியுவு ளாகும்
வேந்தரும் விழைகந் தப்ப வேளெனும் மணிய மின்றோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாந்தரு வழியிற் சின்னத் தம்பிமுற் றவத்திற் றந்தோன்
பாந்தளஞ் சென்னி யானைப் பணிவுடன் சபரி செய்வோன். (௩)

துங்கவா ரியத்து மின்சொற் றலங்குறு திராவி டத்துந்
தங்குமன் னூல்க ளாய்ந்த தாமகல் புலவ னானேன்
மங்குத லில்லாச் சீரோன் மதியன சாந்த முள்ளோன்
பொங்கு தேங் குவளையந்தார் புனைதரு புயத்தி னானே. (௪)

குலனரு ளாதி யாகக் கூறிடு மிலக்க ணங்கள்
நலனுற வமைத்தோன் றன்பா னண்ணிடு மாண வர்க்குப்
புலனுற நூல்க ளென்றும் புகட்டுறு மோச னானேன்
றலனுறச் சைவ வாய்மைச் சற்பிர சங்கஞ் செய்வோன். (௫)

செந்திவா ழிறைவ னான சின்மய வடிவே லன்பான்
முந்தியே வைகி கோற்று முழுதருள் படைத்துத் தூய
புந்தியோ னாகி யாரும் புரிந்திடு வித்து வானா
வந்ததா மோதரப்பேர் வள்ளற னனுச னானேன். (௬)

பரமதம் பாற்றும் வெற்றிப் பண்டித ரத்ந மென்றே
திரமுற வெவரும் பேசத் திறம்பெறு குரிசி லானோன்
கரவக லகத்தோன் யாருங் கண்ணென நயக்கு நீரான்
மரபினி னுயர்ந்தோ னாகி மண்ணிடை யொளிரு மாண்போன். (௭)

போற்றுறு மிந்தி யாவிற் புண்ணிய தலங்க ளெங்கும்
வீற்றுவீற் றிருந்த பன்னாள் வித்துவ சமுகம் வெஃகச்
சாற்றுதொன் னூலி னற்றைத் தகவுற விரித்த நீரான்
மாற்றுயர் பசும்பொ னாக மதித்திடு மருமை வாய்ந்தோன். (௮)

வரம்பெறு தேவி கோட்டை வைசிய திலக னான
திரம்பெறு மிலக்ம ணப்பேர் திகழ்ந்திடு வள்ளல் பேணுந்
தரம்பெறு தரவா லிந்தத் தரைபுகழ் வதிரி தன்னிற்
பரம்பெறு மில்ல றத்தைப் பண்புட னடாத்து வோனே. (௯)

வாய்ந்தநற் குணக்குன் றென்ன வசுமதி யுறைவோர் யாரும்
ஆய்ந்துகொண் டுரைய நின்ற வன்பசேர் தகைமை யாளன்
காய்ந்துதீப் பவங்க டம்மைக் கடிந்திடு பரிச துள்ளோன்
எய்ந்தவ மில்லா நாக லிங்கனாம் புலவ ரேறே. (௧௦)

---

நவிண்டில்

## பிரமஸ்ரீ சு. சிவானந்தபாரதிகள்

இயற்றியவை.

தேவொன்று மாரியஞ் செந்தமிழ் நூல்பல தேர்ந்துணருங்
கோவொன்று பண்டிதன் கங்கா குலமுறை கொண்டவனும்
மாவொன்று செல்வ வதிரி நகர் தனில் வாழ்பவனும்
பாவொன்று நாவுடைச் சீரிய னின்னும் பகர்ந்திடினே. (௧)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னும் பெரும்புகழ்ச் சின்னத்தம் பிப்பெயர் மாபிது
மின்னுந் தவந்தனிற் றந்தொளிர் சேய்மதி மிக்கவனும்
பன்னும் பதிசிவன் பூசை முறைப்படி பற்றினொடு
துன்னும் மனுமொழிச் தென்றும் புரிவோன் றுகடபவே. (௨)

மண்ணிற் பொலியும் பரம்பரை யாகிய மந்திரபோன்
விண்ணிற் களுலும் மதியன சாந்த விளக்கமுளோன்
கண்ணிற் கவினும் மணியென யார்க்குங் களிதருவோன்
பண்ணிற் சிறக்கும் பழமறை யந்தணர் பாலன்பனே. (௩)

கற்றவர் போற்றும் பிரசங்க மாரி களுலுமுகில்
நற்றவர் மெச்சு நடுநீதி நின்றொளிர் நாயகனுங்
கொற்றவர் போற்றும் வடதேய மாந்தருங் கொண்டுமகிழ்
பெற்றவன் நாகலிங் கப்பெயர் கொண்ட பெருந்தகையே. (௪)

சீரோங்கு மிங்கிவன் செந்தமிழ்ப் பாவாற் சிறப்புடைய
பாரோங்கு மெய்ம்மைக் கதிர்காம மான்மியம் பாடினனால்
ஏரோங்கு மிந்தப் புராணத்தைக் கொள்பவ ரேற்றமுறத்
தாரோங்கு வேலவன் றண்ணருள் பாலிப்பன் றுன்மிகவே. (௫)

---

தும்பைநகர்

## பிரமஸ்ரீ. சிவ. சதாசிவகுரு

அவர்கள்கூறியவை.

பண்பூத்த தமிழ்வேதப் பாடல்புனை பரசிவன்றன் பருப்பதத்தின் மங்கை யோடுங், கண்பூத்த பெருங்கருணை கனிபொழிந்து நகைகாட்டிக் களிகூர்ந்து முத்த மாடு, மெண்பூத்த வாறுமுகத் தேவுமகிழ் கதிர்காம புராணமெனு மிந்நூ றன்னைத், தண்பூத்த வதிமதுரச் செந்தமிழால் யாத்துலரு தகுதியுடை விருத்த மாக்கி. (௧)

பாரோங்கு வளவீழ நன்னாட்டு யாழ்ப்பாண வதிரிநகர் வாச பூபன், பேரோங்கு வேளாள குலத்தோன் றல்சைவநெறி பிறழா தந்தி மிக்கான், சீரோங்கு சடைமுடியான் கழலிணைகள் துதித்தருகிப் பூசைசெயும் நிகரிலாதோன், ஏரோங்கு நாகலிங்க பிள்ளையா மியற்பெயர்சேர் திலகுவித்வ திலகன் றுனே. (௨)

கருக்குழியி லெலமைவிழா தெடுத்தாட்கொண் டேகருணை மழைசொரிந்து காட்டா நின்ற, மருக[illegible]மழ்பூங் குழல்வள்ளி மணவாளன் கதிர்வேல [illegible]மலரடியிற் சாத்த லுற்றுன், சருக்கரையோ கற்கண்டோ முப்பழமோ [illegible]கோ சாருமிவை யொன்றாய்க் கூட்டி, யிருக்குமெழிற் சுவையோ மெய்ச் சிவஞானச் செழுஞ்சுவையோ விதன்சுவையென் றியம்பு வீரே, ()

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறை சரஸ்வதியந்திரசாலையதிபரும்,
பஞ்சாங்க கணிதருமாகிய

## பிரமஸ்ரீ. சோ. வைத்தியநாதசாஸ்திரிகள்

சொல்லியது.

சிந்தைகொள் ஈழத் தோங்குதக் கிணத்துத் திகழ்கதிர் ...
செந்தமிழ் மொழியிற் றெள்ளிய நடையிற் றேங்கவி ...
னந்தளிர் மலர்க்கா வதிரியின் வித்வா னருமதி நாகலிங் ...
யர்தமில் சீரு நீடிய வாழ்வு மாமுறை யோதிடு பவர்க்கே.

---

... வதிரி, பண்டிதர்

## பிரமஸ்ரீ. ச. முத்துக்குமாரசுவாமி ஐயர் அவர்கள்

இயற்றியது.

கண்ணகன் ஞாலத்து நண்ணிவா ழுயிர்கட்
ககத்தினி லமைந்திடும் மிகுத்தபே ரிருளை
நீக்குதற் பொருட்டா நீக்கமி லிறைவன்
அருளிய விரண்டு பெருநூ லவற்றுண்
மறையி னங்கமா வறைதரு புராண
நூலவை பலவுள் மேலாங் காந்தத்துத்
தக்கிண கைலாய மிக்கநன் மான்மியம்
விதியுளிக் கொண்ட கதிர்கா மத்தின்
உத்தம காதையைப் பத்திய ரூபமாய்த்
தருகென வுரைத்த பெரும்பொருள் கொண்டு
தமிழ்தெரி மாண்பினர் அமிழ்தெனப் போற்ற
இயற்றினன் யாவனென் றியம்புதுங் கேளீர்
கல்வியா மழையை நல்விருந் தென்ன
மக்கண் மனமெனும் மிக்கநன் னிலத்தில்
என்றும் பொழிந்திடும் நன்றிசேர் மேகம்
பத்திமை மிகுந்த வித்துவ சிரோமணி
பங்கமில் நாக லிங்கப் பேர்
தரித்திடப் பெற்ற குரிசி லுனே.

---

அல்வாய்ச்சைவப்பிரகாசவித்தியாசாலை

## ஸ்ரீமத். க. சின்னத்தம்பி உபாத்தியாயரவர்கள்

இயற்றியவை.

உலகின் மேற்படு மீழமண் டலமென வுரைக்குந்
தலம தாகிய விலங்கையிற் சார்ந்ததென் றிசையாம்
இலகு மாதல மாகிய தேவரு மேத்தப்
பலனை யீவது மாணிக்க கங்கைபா லதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருது கின்றமா கலியுக வாதனுங் கந்த
னுருவ மாயம ரியர்திர வருட்பிர காசந்
தருவ தன்பரின் ஞானநேத் திரந்தனைக் குருவாய்
வருவ தற்புதச் செயலது நிகழ மன்னியதே. (உ)

இன்ன வாகிய சிறப்புக ளமைவுற விளைந்த
தென்ன லம்பெறு கதிரைமா நகர்மகி மைகளை
மன்னு யிர்க்குழா மறிந்துவந் தித்திட மதித்துப்
பன்னு முன்னை நூன் முறைவழாப் பாடுவான் றுணிந்தே. (௩)

நாடும் பத்திய ரூபமாய்ச் சொற்பொரு ணயங்கள்
கூடுஞ் சந்தமு நவரச வகைகளுங் குலவப்
பாடு மன்பருக் கிட்டசித் திப்பயன் பயப்பத்
தேடுஞ் செந்தமிழ் மொழியினுற் சிறந்திடக் கருதி. (௪)

எத்து றுங்கதிர் காமமா புராணநூ லியற்றி
யாத்த யந்திர வச்சினி லினிதுறப் பதிப்பித்
தாத்த னன்பரி னருள்பெற வேண்டுமென் றதனைக்
காத்துத் தோத்திரஞ் செய்திட வெளியிடல் கண்டான். (௫)

அன்ன வன்பெயர் யாதெனி லகிலத்து ளுயர்ந்து
மன்னு புண்ணிய விந்தியா நகரிடை வைகி
உன்ன ருஞ்சிறி நிவாசதிட் சிதனுரைத் தருளப்
பன்னு மாரியக் கலைதெளி பண்டித னேனோன். (௬)

திகழும் வைசிய சிரேட்டனு மரியபுத் திரனின்
மகவு வேன்மயில் வாகனப் புலவனின் புற்றுப்
புகலுஞ் செந்தமிழ் முறைதெளி புலமையின் மிக்கு
விகல மின்றியே போதிக்கு மேன்மைபெற் றுள்ளோன். (௭)

தங்கு ஞானசித் திப்பத்தி ராதிபர் தாமென்
றெங்கு நாட்டிய வினியதா மோதர னுருந்
துங்க முன்னவன் முன்சைவ சித்தாந்த நூல்கள்
சங்கை யின்றிநன் குணர்ந்தசா துரியம துடையோன். (௮)

சுத்த நீடிய வொழுக்கத்திற் சிறந்துள தோன்றல்
நித்த முஞ்சிவ பூசைசெய் நியதியின் வழாதோன்
அத்த னன்னையை மதித்தபே ரன்புடை யறிஞன்
பத்தி செய்சிவ னன்பரைப் பதியெனத் தொழுவோன். (௯)

மதியின் மிக்ககந் தப்பநன் மணியத்தின் மகனும்
நிதியின் மிக்கசின் னத்தம்பி நிலைத்தவப் புதல்வன்
பதியின் மிக்கநல் வதிரியிற் பயில்வுறு மேந்தல்
துதியின் மிக்கா கலிங்கமாந் தூயவித் வானே. (௧௦)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்.

# கதிர்காம புராணம்.

## விநாயகர் காப்பு.

பூமேவு திசைமுகனும் பொறிமேவு திருமாலும்
    புரந்தரனும் பொற்பு வாய்ந்த
தேமேவு மலர்மாலைத் தேவர்களு முனிவர்களுந்
    திகழுமுயர் கணங்க டாமு
நாமேவு மினியதுதி யெடுத்தியம்ப நினைந்தவெலா
    மவரவர்க்கு நன்று நல்குந்
தாமேவு மொருகோட்டு மழகளிற்றின் றுணைமலர்த்தாள்
    சென்னிமிசை யணிந்து வாழ்வாம். (௧)

வேறு.

ஓங்கு தாரகத் தோருரு வாகிய
தாங்கு மைங்கரத் தந்திமு கத்தனை
யீங்கு போற்றுது மிம்ப ருணர்ந்திடத்
தேங்கு தென்கதி ரைக்கதை செப்பவே. (௨)

## கடவுள் வாழ்த்து.

### சிவபெருமான்.

வேறு.

சூரெனு மவுணர் கோமான் றொலைபவுஞ் சுரர்க டாமு
நாரணன் முதலி னோரு நலிவகன் றிடவு நற்றேந்
தாரணி சுடர்வே ருங்குஞ் சண்முகற் றந்த மேன்மைக்
காரண முதல்வ னான கண்ணுதல் கழல்கள் போற்றி. (௩)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உமாதேவி.

வேறு.

நிறைதரு முயிர்தொறு நிலவி மன்னிய
பிறைமுடிப் பிரானிடம் பிறங்கி வைகியே
முறையின்மூ வுலகமு முன்ன ரீன்றிய
விறைவிதன் பதமல ரிதயத் துன்னுவாம். (௪)

## மாணிக்கப்பிள்ளையார்.

ஆரண மறைகளு மமரர் தேவரா
நாரணக் கடவுளு நாடிக் காணொணாப்
பூரணன் பெற்றருள் புனித மாணிக்க
வாரண முகத்தினன் றாள்வ ணங்குவாம். (௫)

## முருகக்கடவுள்.

வேறு.

கலந்திகழ் காங்கே யன்றுறை கந்த வனங்கந்த நாமமா மலையே
வலந்தரு சமனை கண்டகி வடகாந் தாரமோ டியர்வுறு முகந்தை
தலந்தனு ளுயர்ந்த சோதிகா மதல மாமிவற் றெடுசார்ந்து மன்னி
நலந்த ரும்பெரு வரமருள் முருகநா யகன்றிரு வடிபோற்றி. (௬)

## தெய்வயானையம்மை.

செந்திரு மணந்த மாலருள் செல்வச் சிறுமிய ரிருவர்க டம்முட்
சுந்தரி குறவர் பானன்கு வைகத் தூமொழி யமுதமா வல்லி
யிந்திரன் மகளாய்த் தெய்வத யானை யால்வளர்த் தருளிய வம்மை
சுந்தரச் செந்தா மரைப்பதந் தொழுது தொடர்ந்தகுந் தீவினை தீர்
[வாம். (௭)

## வள்ளியம்மை.

வேறு.

பொருப்பர் வாழ்மனைப் புகுந்தவர் புனங்காத்
திருப்ப வேற்குக னிருங்கள வொழுக்கில்
விருப்ப மாய்ப்புணர் விளங்கிழை வள்ளி
திருப்பதாம் புயமலர் சிந்தித்து வாழ்வாம். (௮)

## திருநந்தி தேவர்.

வேறு.

அந்தி வான்பிறை சூடிய வண்ணலை
வந்து வந்து வணங்குஞ் சுரர்களை
யுந்து நற்பிரம் பொன்று தரித்திடு
நந்தி பாதநல முறப் போற்றுவாம். (௯)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவவீரர்.

வேறு.

ஈர வார்மதி யணிபொலஞ் சடையிறை யவனருள் புரிய
வேரு வாவிய குழ்லுமை நூபுர மணியிடைப் பிறந்த
நார வாவியி னளினநேர் நயனியர் நயந்துபெற் றெடுத்த
வீர வாகுவை முதலிய வீரர்தம் மெல்லடி பணிவாம். (௧0)

## சைவசமய குரவர்.

வேறு.

காழிநகர் வாழவந்த கவுணியர்கோன் கழல்போற்றி
வீழிநகர்க் காசுபெறு வித்தகன்ற னடிபோற்றி
வாழிதிரு நாவலர்கோன் வன்றொண்டன் பதம்போற்றி
பாழிதனில் வாழ்வாரை வென்றபிரான் பதம்போற்றி. (௧௧)

## முத்திலிங்க முனிவர்.

வேறு.

அத்தனு யுலகுக் கெல்லா மருந்தவச் சோதி காம
வுத்தமப் பதியி னிங்கா துறைதரு முருகன் பாதஞ்
சித்தமீ திருத்தி யோக சமாதியி லுறைவோ னான
வித்தகன் முத்தி லிங்க முனிவனை வணங்கி வாழ்வாம். (௧௨)

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

# புராண வரலாறு.

பரமனார் பார்ப்ப திக்குப் பகர்ந்தது பரிவி னந்தி
வரமுடன் சனற்கு மார மாமுனிக் குணர்த்த வன்னோன்
அருளுறு வியாதற் கோத வவன்கிடை யாகுஞ்சூதன்
தெருளுட னுண்ணர் மூவர்று தொல்கதை தன்னுண்மாதோ. (௧)

வேறு.

பலர்புகழ் காந்த மாகுநற் புராணம் பகருந்தெக் கிணகயி லாச
நலம்பெறு னொரு மான்மிய மேலா நல்கதிர் காமமா புகழை
யுலகினிற் றமிழை யுணர்வுறு மாந்த ருணர்ந்திடு மாற்றினி னீடிக்
குலவுசெந் தமிழாற் கூறுகே னெஞ்சிற் குலவிய விருப்புடன் மன்னோ. (௨)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்பயன்.

வேறு.

மன்னிய வளங்கள் மிக்க கதிர்காம மாத லத்தின்
பன்னுமான் மியத்தை யன்பிற் படிப்பவர் கேட்போர் யாரும்
இந்நில மகனிற் பன்னு ளிஃபழற் றிருந்து பின்னர்ச்
சென்னியின் மதியஞ் சூடுஞ் சிவன்மகன் பாதஞ் சேர்வார். (௩)

## அவையடக்கம்.

கவையடி வராக வல்லூன் கண்ணப்பன் கனிவா யேறி
யவியெனத் திருக்கா ளத்தி யமலனுக் காணுற் போலக்
குவிதரு மனமொன் றில்லேன் குறைமொழி நிறைசொன் மாந்தர்
செவிபுகிற் கதிர்கா மத்துச் செல்வனுக் கினிய தாமால். (௪)

இருவித வெழுத்து மல்லா வாய்தமுற் குறிலு மீற்றின்
மருவுவல் லெழுத்துங் கூட வன்னமா யெழுதல் போல
விருவித வழக்கு மல்லா வென்கவி கதிரைச் சீரு
மருவிய சபையோ ரன்புங் கூடலான் மதிக்கும் பாவே. (௫)

காவொடு பயிலுஞ் சந்த நயந்தரு பொருளு மேலாம்
பாவொடு பயிற ருனு மிலாதவென் பாட ருனுங்
காவொளிர் கதிர்கா மத்துக் கதையொடு கவிலு நல்ல
பூவொடு சேர்ந்து நாரும் புதுமணங் கமழு மின்றே. (௬)

வேறு.

வேதம துணர்தரு வியாதன் கூறிடச்
சூதமா முனிவரன் சொன்ன நூலினை
லேதுமோர் பயனிலை யின்றமிழ் வாணருக்
காதலிற் றமிழினி லறைதி யாலெனு. (௭)

கந்தனன் பினர்கதிர் காம வுற்சவம்
வந்தனை செய்பவர் வகுத்த சைச்சிரந்
தந்தியான் சாமியி னருளி தாமெனப்
பந்தமார் விருத்தமாய்ப் பாட லாயினேன். (௮)

வேறு.

தென்கயிலை மான்மியத்திற் றெட்டமதாச் செப்படைவிற்
றெரித்த வாற்றுற், றொன்னுனையவடிவேலோன் கொண்டருளும்
பாசறையாக் குலவுசீர்மை, மன்னியநற் கதிர்காம மகிமைவிளக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுமிதன்பேர் மற்றேதென்னிற்; றுன்னியசீர்க் கதிர்காம புராண
மெனத் துதிபெறவே சொல்ல லாமே. (௯)

வேறு.

எண்ணிய கலியிலேயா யிரத்தின்மேன் முப்பத் தொன்று
நண்ணிய காலந் தன்னி னைமவேற் பாற்கு கந்த
புண்ணியக் கதிர்கா மத்தைப் புகழ்ந்திடு புராணந் தன்னைக்
கண்ணிய வதிரிதன்னிற் கட்டுரைத் திட்டேன் யானே. (௧0)

அவையடக்க முற்றிற்று.

ஆ திரு விருத்தம். 22.

# ஆற்றுப்படலம்.

ஓங்கிய புகழோ னை வுயர்மறை வகுத்த மேலோன்
பாங்குட னீழ நாட்டுப் பண்புக ளெலாம் பகர்ந்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டுக் கணியென லாய்வி ளங்குந்
தேங்கிய தெய்வ யாற்றின் சிறப்பியல் சொல்ல லுற்றும். (௧)

நீறணி நிமலன்மேனி போலவெண் ணிறத்த மேகம்
வீறுட னணிய தாகி விண்ணின்மேல் விரைந்து சென்று
மாறிலாக் கடன்மு கந்து மற்றவன் மேனி தன்னைக்
கூறுசெய் தவளுருப்போற் றிரும்பின கொண்மூ வெல்லாம். (௨)

வேறு.

சிவனொளி பாத மலைமிசைச் சேர்ந்து சிறந்தருண் முதிர்
வுறப் பெற்றுச், சிவன்சடை போல மின்னிச்செங் கரத்திற் சேர்
ந்தமேதோர் மேருமா மலையாந், தவர்பாபி லொலிபோன் முழக்கமுண்
டாகித் தவலரும் பல்லுயிர் தம்மாட், டவன்புரி கருணை போல
வா லிக்கண் காக்கியே பொழிந்தன மாதோ. (௩)

அண்டருக் கிடுக்க ணற்றருர் வடிவ மன்றிரண் டாமென
வட்ட, திண்டிற லுடைய சுடர்வடி வேலோன் றெல்புகழ் பரம்
பிய வாபோற், பண்டரு மறைகள் பயிலும்பார்ப் பனர்கைப் படு
முயர் தானமே போல, மண்டிய வெள்ளம் மாநிலம் பெருகி வழி
ந்திடப் பாய்ந்தது மாதோ. (௪)

வேறு.

மணியொடு முத்தும் வாச மருவிய சந்தத் தாருத்
திணிபடு குறடுந் தூபத் திரம்படு மகிலு மார்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிபடு மாணை வெண்கோட் டாரமும் பிறவு மெல்லா
மிணையறு திரைக்கை யானன் கேந்திச்சென் றெறியு மாதோ. (ரு)

குன்றுறை குறவர் மாத ரிடிந்திடு சுண்ணங் கோட்டங்
கொன்றிடு சந்து கோங்கு குங்கும நரந்த நாகந்
துன்றிடு கடுக்கை வேங்கை தூயதோர் கணநல் வெண்ணெ
யென்றிடு பொருள்க ளெல்லா மேந்தியே செல்லு மன்றே. (சு)

அறலை கள்வர்ச் சாடி யாங்குள மதூக நெல்லி
வேறுள பொருளுங் கொண்டு வெம்மை மாற்றி வெள்ளம்
மேமெருடு கலைமா னேகு மெழில்வளர் புறவஞ் சென்று
விரெருடு குருந்து காயா வெறிகமழ் முல்லை சாடி. (எ)

தடம்படு மருதஞ் சார்ந்து தண்பணை வயல்க டோறு
மிடம்படு குளனே வாவி யென்னுமிவ் விடங்க டோறு
மடம்படு கயற்கண் மாத ராடுறுங் கால்க டோறுந்
திடம்படு மோடை தோறுஞ் சென்றுலாய் விளங்கிற் றன்றே. (அ)

மள்ளர்கள் வயலிற் சேர்த்தி மிஞ்சுமா ணிக்க நீத்த
முள்ளுடைக் கைதை வேலி முந்நீரை நோக்கிச் சென்ற
கள்ளவெம் புலனை வென்றோர் கருதுநன் னெறியுய்த் தாலுந்
தெள்ளிய வறிவி லாதோர் செல்வழிச் செல்வ ரன்றே. (சு)

அறம்பொரு ளின்ப மான வறநெறி வழாமற் புல்லித்
திறம்படு முயிர்க ளெல்லாஞ் சிவகதி சேரச் செய்யுங்
குறஞ்சொலு மெயின மாதர் குங்குமச் சேறு நாறு
நிறம்பயி னதியே யென்று விதன்புகழ் நவில லாமோ. (க0)

ஆற்றுப்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் 32.

# திருநாட்டுப்படலம்.

பிறங்கருள் வடிவ மான பிராட்டிமா ரிருவ ரோடும்
அறங்கிளர் குமர மூர்த்தி மகிழ்வுட னமர்ந்து மேவு
சிறங்கிளர் கதிரை யாதி நிகழ்தல நெருங்கக் கொண்ட
திறந்திகழ் மீழ நாட்டின் வளஞ்சில செப்ப லுற்றாம். (க)

கான்றவழ் மலைக்கண் ணாலும் பிரமனுந் தேடிக் காணாத்
தேன்றவழ் கடுக்கை வேணிச் செம்மலை நண்பு கொண்ட
ஆன்றமா நிதிக்கோ மானு மளகையர் வேந்தன் செங்கோ
லூன்றவழ் தாப்பொலிந்த சால்புடைத் தீழ நாடே. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒள்ளிழை யுமையா டன்னை யொருபுடைக் கொண்ட பெம்மான்
வெள்ளநீர்க் கங்கை யிந்து மேற்கொளு மீசன் வைகும்
வெள்ளியங் கிரியைத் தூக்கும் வீரரா வணன்மு னண்ட
வொள்ளிய புகழ்பெற் றோங்கு மொப்பிலா வளத்த நாடு. (௩)

திசைபுகழ் மேரு வின்மேற் சிகரமாந் திரிகூ டத்தோ
டசைவற வமர்ந்த கேதீச் சரதல மருமை வாய்ந்து
வசைதவிர் வுற்ற கந்த மாதன வரைகண் மூன்று
மிசைபெறத் தன்பா[illegible]வப் பெற்றுள வீழ நாடு. (௪)

வேறு.

திருந்துபல் லுயிர்க்குந் திருவடி யளிப்பான் தேவியோர் பாக்குற வெங்கள், பெருந்தகை யீசன் வீற்றிருக் கின்ற பெருமைசேர் கைலைமா மலையிற், பொருந்திய தென்பா லுளதிரி கோணக் குன்றது புனை திரு முடியை, யருந்தவம் புரிந்து பெற்றதே யன்றோ வணிகெழு மீழநன் னாடு. (௫)

உமைதவம் புரிந்த விமயவோங் கலிற்பிங் கலையெனு முயர்வுறுநாடி, யமைதருந் தில்லைத் தலத்தினிற் சுழினை யளிகிள ரிடையதா நாடி, யிமையவர் நாட்டின் மிக்கவீ ழத்தி லிருக்குநல் லியல்புள தானுற், கமைமிகு மதன்பேர் நம்மனோர் வாயாற் கழறவு முடியுமோ வன்றே. (௬)

பெரும்விலை பகரு முத்தொடு மணியும் பெட்புற விளைந்துமேன் மல்கி, விரும்புறத் தக்க தாயமை வுற்றும் விளையுளு னுவித மேவி, யரும்பெருஞ் செல்வர் மேற்றிசை வணிக ராதமேன மரபின ருடைத்தா, யிரும்புகழ் படைத்து மேனிலை யுறுவ திணையிலா வீழநன் னாடு. (௭)

பொறைதன்மேல் வருங்காற் பொறுத்திறை பயப்ப தாய்ப்பசி யுடன்பிணி பகையே, நிறைதரு குழுவுட் பகைமுத லாக நீதியில் குழும்பில்ல தாகிக், குறைவிலா விருநீர் வாய்ந்திடு மோங்கல் கொள்புனல் முதலிய குழுமி, யுறைதரு நகரி யுமுடைத் தாகி யொளிருவ தீழநன் னாடு. (௮)

வேறு.

அங்கமே கலிங்கந் தானு மரியகாம் போச மோடு
பங்கமில் கவுசி கம்மே பழுதறு காசு மீரங்
கொங்குகே ரளகாந் தாரங் குலவிய மகத தேயஞ்
சிங்கள மாள வம்மே மலையாளஞ் சிந்து நாடு. (௯)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருநடம் பாண்டி தேயந் துருபத மவந்தி தேயந்
திருவுறை விதர்ப்ப தேயந் திவ்விய விதேக மாதி
மருவிய தேய மைம்பத் தாறனுண் மாந்தர் போற்றும்
பெருமைகொ ளீழநாடு போல்வது பிறிதொன் றில்லை. (க0)

ஆறிலொன் றிறைதான் பெற்ற வரசனே தருமந் தன்னிற்
கூறிய நீதி யில்லாக் கொடுங்கோன்மன் னவனே யாவான்
மாறிலாக் கடமை பத்தி லொன்றேற்பான் மனுவே யாவான்
றேறுமிவ் வீழநாட்டின் றிறைபத்தி லொன்ற தாமே. (கக)

புண்ணிய வடிவ மான பொருள்கூர்மா ணிக்க கங்கை
நண்ணுமா வலியாங் கங்கை நவகங்கை கன்னி கங்கை
யெண்ணுகா வேரி கங்கை யியம்புறு பாவ நாசங்
கண்ணுமிந் நதிக ளாலே கவினுற்ற தீழ நாடு. (கஉ)

கல்லாறு மாய வாறு கடதீர்த்தங் கோடி தீர்த்த
மெல்லார்பா தாள கங்கை யமுனையே முதலா மெல்லை
யில்லாத தீர்த்த மேவி யினிதுமூழ் கிற்றோர்க் கின்ப
மெல்லாமெய் துவிப்ப திந்த வினையறு மீழ நாடே. (கங)

இந்திரற் கரசை யீந்த விறைவனை மறவா மேகம்
வந்தவ னடியை யேத்தி வழிபடுங் கதிரை யாதி
யந்திலம் பதிக டம்மா லணிபெறு மீழ நாட்டி
னைந்திணை வளந்தொ குத்தே யறிந்தவா றியம்பு கின்றோம். (கச)

## குறிஞ்சி.

அமரர்கள் விரும்பி வாழு மணிபெறு சுவர்க்க மென்னுந்
தமரமோங் கிடநன் மாண்பு தழுவியே விளங்கா நிற்குஞ்
சமரினிற் சூரபன்மற் சாடிய சுடர்கொள் செவ்வேற்
குமரவே ளரசு செய்து குலவுறு குறிஞ்சி மன்னோ. (கரு)

மருந்தினை யுண்ணும் வான மடந்தையர்க் கரிய மார்பர்
திருந்துதங் குலத்து வள்ளிக் கிந்தருள் சிறப்பை யெண்ணி
விருந்தினைச் செய்தல் போல வேலிறை மகிழ வெற்பர்
பொருந்திய விழவு மன்பிற் பூசையும் புரிவ ரோர்பால். (கசு)

அருவரைக் குவட்டி னின்று மளாய்வரு மருவி யாறு
மருவிரு ணிறைந்து சீர்சான் முழைகளு மிருல்கள் விண்டு
பரவுசெந் தேற லெங்கும் பாய்வது மிறடி நற்போர்
விசவுற விரிக்குங் குன்ற வாணர்தங் குழாமு மோங்கும். (கஎ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயிரு ஞாலத் துள்ளார் மகிழ்வுட னுண்ணு நிற்குந்
தேயிலை கோப்பி யென்னுஞ் சிறந்திடு செடிக ளெல்லாம்
பாய்தரு மருவிச் சாரற் பரப்பிடை வளர்ந்து நாட்டின்
மேயதோர் செல்வ மாக்கு மேன்மையை யறியார் யாவர். (கஅ)

செந்தினை யிடியுந் தேனுந் தீஞ்சுவைக் கனியு மூனு
முந்துறு தேனை வார்த்து முதுமரப் பொந்தில் வைத்துச்
சிந்தையி னுவக்கு மானின் றிப்பிய வூனுந் துய்த்துச்
சுந்தரச் சுனைநீ ராடிச் சுகத்துடன் குன்றில் வாழ்வார். (ககூ)

கலியுகக் கடவுளான கந்தவேள் விரும்பி வாழு
மலிதரு வனங்கள் சூழ்ந்த மலைபடு குறிஞ்சி சொன்னோம்
பொலிதரு நிறைந்து வானம் பெய்வதற் கேது வாகத்
தலம்புகழ் முல்லைக் கானின் றிறத்தினைச் சிறிது சொல்வாம். ()

## முல்லை.

விண்ணகத் துறையுந் தேவர் விமலமெய் யுறுப்பில் வாழும்
புண்ணியப் பசுக்கண் மேயும் பொலிவினை யுடைய தாகித்
திண்ணிய தவஞ்செய் மார்க்கர் தேடுநல் விடமாய்க் காக்குங்
கண்ணனைத் தெய்வ மாகக் கொண்டது கவின்செய் முல்லை. (உக)

கூவிளங் குருந்து தூர்வை கொன்றைபு மாவி னைந்து
மேவிய முல்லை தன்னின் மாயவ னிருத்த னெஞ்சிற்
பாவனை செய்து மேலாம் பரசிவன் பாத பூசை
தாவறு மிவற்றாற் செய்யுந் தன்மையை யெண்ணி யன்றோ. (உஉ)

ஆக்கமே துணைவ ரெண்ணி யகலவு மன்னோர் சொன்ன
வாக்கினை நினைந்து மாதர் மன்னுயிர் வாழ்ந்தி ருத்தல்
காக்கின்ற தொழிலா லென்று கண்ணன்பா லன்பு நாளும்
பூக்கின்ற செய்கை தன்னாற் பொலிந்தது விளங்குங் கானம். (உங)

குருந்திணர்க் கண்ணி வேய்ந்து கோக்குல மேய்க்கு மாயர்
விருந்தென விசைக்குங் கொன்றை விரும்புதீங் குழலி னோதை
முருந்தினை நிகர்க்கு மூர லாய்ச்சியர் வெண்மை வாய்ந்து
திருந்திய தயிரு டைக்கு மத்தொலி திகழு மெங்கும். (உச)

வரகொடு துவரை சாமை வளம்படு மவரை மல்கி
விரவுறு வளங்கள் பல்ல விளங்கிய பொலியு மோர்பாற்
பரவுறு சுவைத்தி நெய்யும் பாலொடு தயிரு மோரு
முரவுறு வெண்ணெ யாதி யோங்கிய வனமு மோர்பால். (உரு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்றினோ டாவுஞ் சேவும் பொலிபெருங் கான முல்லை
யொன்றிய மேன்மை தன்னி லென்னுரை செய்தோ நீங்கா
தென்றுநீர் மலிந்து ஞாலத் தெழில்வளர் பொழில்கண் மேவித்
துன்றிய மேன்மை வாய்ந்த மருதத்தின் சிறப்புச் சொல்வாம். ()

## மருதம்.

தருவொடு மணியுஞ் சங்குந் தேனுவும் பதுமங் கானும்
வெருவுறு தேவர் யாரும் விரும்பியே பணியைச் செய்யத்
திருவுமே நிகர்க்க லாகாத் தேவியின் தனம்பாய் மார்ப
மருவிய வேந்தன் காவன் மன்னுறு மருத வேலி. (உஎ)

மருதமென் பதுவுந் தெய்வ மான்மிய முள்ள தென்று
கருதவோ ரிடையூ றில்லை கமழ்தரு சுவையின் பான
மொருவுறுர் செய்வா ராங்க ணுறைவது மரம்பை மேவி
வெருவுரு தமருந் தன்மை வாய்ந்தது மிக்க சான்றும். (உஅ)

கொங்குலாஞ் சந்து தேக்கு காரகிற் குறட்டி னோடு
தங்குமால் கரியின் கோடுந் தழைமயிற் பீலி யின்ன
வெங்கணும் பரந்து செல்ல விருகரை யுடையும் வண்ணம்
பொங்கு வெண் டிரைகள் வீசி மாணிக்கப் பெருநீர் பாயும் (உகூ)

திரைதவழ் களனி கங்கை தீஞ்சுவை யருவி யாறு
கரைதவழ் கனகராயன் கருமைசேர் பறைய னாறு
நுரைதவழ் மாயனாறு நிகரின்மா வலியாங் கங்கை
தரைதவழ் நதிகள் பல்ல தண்ணிய பழனம் பாயும். (௩0)

மொழிபல நதிகள் பாய்ந்து முதுகரை யுடைய நன்னீர்
வழிதர நிறைந்து கட்டுக் குளங்களின் மேவித் தங்கி
மழையிலாக் கோடைதன்னின் மிகுதரு நன்னீர் பாய்ந்து
செழுவள மாக்கி மேலாஞ் செஞ்சாலி விளைக்கு மன்றே. (௩க)

திரைபரந் தெழுந்து வீசுஞ் செழுநதி நீருங் கட்டுக்
கரைபரந் தெழுந்த நன்னீர்க் குளங்களின் புனலும் வாய்க்கா
னிரைபரந் தெழுந்து நீடு நன்மத கினூடு சென்று
தரைபரந் தெழுந்த சாலித் தண்வயல் புகுந்த மன்னோ. (௩உ)

கண்டுறை மதகின் வந்த கருபுனல் வயலிற் செல்லக்
கண்டனர் கருங்கான் மள்ளர் கரையறு மகிழ்ச்சி மேன்மேற்
கொண்டனர் தெய்வம் வாழ்த்திக் கூவிய வோசை தான்போ
யண்டர்க ளுறையும் வானத் தப்புறஞ் சாரு மன்றே. (௩௩)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றொழி பகட்டின் மிக்க விரும்பிடர் நுகத்தைப் பூட்டிக்
கோற்றொழிற் குறிப்பிற் செல்ல மேழிகைக் கொண்டு மள்ளர்
நாற்றிசை மருங்கு மீண்டி காகிள வாளை பாயச்
சேற்றிதழ்க் கமல நன்னீர்ச் செழும்வய லுழுதா ரன்றே. (௩௪)

சேறமை செறுவிற் செந்நெல் வான்முளை தெய்வம் போற்றி
வீறொடு விளைகென் றோதி வித்திடு முழவ ரோர்பா
னூறிது பதமா மென்று பறித்துநாட் செய்வ ரோர்பாற்
கூறிய கடைசி மார்தங் குழாத்தினைக் கொண்டு செல்வார். (௩௫)

உழுதநீள் வயலி விட்ட வொப்பிலா விதைக ளெல்லாம்
பழுதற முளைத்து நாளும் பண்புடன் வளரக் கண்ட
வுழவர்கள் பருவங் கூற வுடன்வளர் களைக டம்மை
முழுவதுங் களைந்த கன்றூர் மொய்குழற் கடையர் மாதர். (௩௬)

சாலிகள் வயலி னோங்கித் தன்னிக ரின்றி மிக்கு
வாலிய வடிவ நீங்கி மெல்லவே பசந்த வாகிச்
சூன்முதிர் பருவங் கொண்டு சுருள்விரி கதிர்க டோன்றிப்
பான்முதிர் தலைவ ணங்கிப் பண்ணையிற் சாய்ந்த மன்னோ. (௩௭)

பிறையுரு விரும்பு கொண்டு பெருவலிக் களமர் கூடி
முறைமையி னரிந்துப் பட்டி முதுதிரள் வரிந்து கட்டி
நிறைதலைச் சுமையிற் கொண்டு நெடுங்களஞ் சென்று சேர்த்துச்
சிறைகுலைத் தெருது பல்ல சூழ்ந்தன மிதிப்பச் செய்வார். (௩௮)

வேறு.

சங்கினின் றும் வெண்மையுறு தாளந்தன்னை யெடுத்தென்ன
வங்களத்தி லடுசெந்நெல் வையகற்றி யினிதாகத்
துங்கமுறு வளியெதிராய்த் தூற்றிநன்கு குவைசெய்து
சிங்கலிலா வளவுபெட்டி சிறந்திடுகை யிற்கொண்டு. (௩௯)

வேறு.

நிறைதர வள்ளை செய்து நிலமன்னர் பாக நீக்கிக்
குறைவிலா வறங்கள் பேணிக் குரவரும் விருந்தும் பண்பி
னுறுசெழுங் கிளையுந் தாங்கி யுவப்புறு குடிக ளோங்கிப்
பிறைவளர் மாட நீடிப் பொலிந்துள பதிக ளெங்கும். (௪0)

கரும்பொடு மஞ்ச ளிஞ்சி கமுகொடு பலவு தெங்கு
விரும்பிய பிறவும் வாய்ந்த மருதத்தின் வளப்பந் தன்னை
யரும்பிய வாசை யாலே யறைந்தன மினிமேற் சொல்வாம்
சுரும்பமர் நெய்தல் புன்னை சார்தரு நிலத்தின்சீரும். (௪௧)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெய்தல்.

வருணனுந் தெய்வங் காப்ப வயங்கிய நெய்த லின்கண்
மருவிய சரக்கை யேற்றி வேறிடஞ் செல்லு நாவாய்
பொருணிறை சரக்கை யெல்லாம் பறிக்கின்ற நாவா யோடு
திருவமர் துறையிற் றங்குந் தோணியு மனந்த மாகும். (௪௨)

மிக்கதோர் ஞாழல் கைதை முண்டக மடம்பு கண்ட
லுருக்கபூம் புன்னைக் கானுந் தோட்டலர் நெய்த லின்ன
வொக்கவே வீசுந் தோறு முற்றநன் மணமுங் கூடிப்
புக்குலா வலினு லங்கட் புன்புலான் மாறு மன்றே. (௪௩)

அரிபடு பவளக் காடு மரில்வலை யுணக்கு முன்றி
லிரைதரு பரவை வாழு மெறிசுறுப் பகட்டின் காடும்
பரவையின் றேவை நாளும் படர்சுறுக் கோட்டிற் போற்றி
விரவுறு சிறப்பும் வாய்ந்து விளங்குறு நெய்த லன்றே. (௪௪)

வலையினை யிழுப்பா ரோதை மீனினை விற்கு மோதை
யுலைதரத் திமிலை யுந்து மோதையும் பொலியு மோர்பான்
மலையென வுயர்ந்த வெள்ளை மணற்றிடாப் பரப்பு நீண்டு
கலகல வொலிக்கும் பெண்ணைக் கானமு மோங்கு மோர்பால். ()

## பாலை.

அங்கியங் கடவு ளுரு மாசுசெய் கானுங் கள்ளிப்
பொங்கெரி மேய்ந்து புல்லும் புலமொடு வறுநீர்க் கூவல்
வெங்கதிர் தெறலாற் காய்ந்து வெறியவா மரமும் பொல்லாச்
சிங்கமேற் கொள்ளுங் கன்னி சிறந்திடு காவல் கொண்டு. (௪௬)

பொருறுதிப் பரல்க ளெங்கும் பரந்துள தாகி யோங்குங்
குரவொடு மராவும் பாலை கோங்கமு மிருப்பை நெல்லி
விரவிய நண்பி னோடு வெறுத்துடன் போனார்க் கேன்ற
புரவுசெய் பாலை தானும் பொலிவுறு மாங்காங் கன்றே. (௪௭)

இன்னவைந் திணையின் செல்வ மியைதரு மீழ நாட்டின்
பன்னரு மியல்பைச் சேடன் பகரினு முற்று தென்ப
ரென்னினி யான்சொ சொற்ற லென்னே வென்பையு முருக்கும் பத்தி
மன்னிய சோதி காம முதுநகர்ச் சிறப்புஞ் சொல்வாம். (௪௮)

திருநாட்டுப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் 80.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநகரப்படலம்.

காசினி வணங்கிப் போற்றக் கண்கண்ட தெய்வ மாகிப்
பேசரு வரங்க ளீந்து பெரியவற் புதங்கள் செய்து
மாசிலா மணிகொ ழிக்கு மாணிக்க நதியின் பாங்கர்த்
தேசமர் கோயின் மேவித் திகழ்குகன் பதங்கள் போற்றி. (௧)

பார்கெழு கயிலை மேரு பருப்பதம் பழனி செந்தூர்
சீர்கெழு குமர கோட்டஞ் செருத்தணி மலையே சிக்க
லேர்கெழு பரங்குன் றெட்டி குடியொடு திருச்சேய் நல்லூ
ரார்கெழு சோமாக் கந்த மணிவளர் சுவேத கானம். (௨)

வாலிய பவானி சங்கம் வேங்கட சயில மின்ன
சீலமார் தலங்க ளுள்ளுஞ் சண்முகற் கினிய தான
மூலமாந் தலமா யெல்லா வளங்களு முகிழ்ப்ப தாயெக்
காலமு மழியா தோங்குங் கதிர்காம தலமா மொன்றே. (௩)

சேயிடை யிருந்து கேட்பிற் செப்பிடிற் சித்தம் வைப்பி
னாயிடை வசித்தல் செய்யி னலகில்பல் பவத்தி னீட்டு
மாயிரு வினையு மாய்த்து வீட்டினை வழங்கு மென்றான்
மேவித் தலத்தின் மேன்மை விளம்பிட வியலுங் கொல்லோ. ()

தேவருக் கிடுக்கண் செய்த சூர்முத றடிய வெண்ணி
யேவரும் புகழும் வேலோ னிருந்தபா சறையே யாகுங்
காவளர் கதிரை தன்னிற் கந்தவேள் வடிவ மூன்று
மேவுத லின்றி ஞான மேனிய னாகி நிற்பான். (௫)

அருவமு முருவந் தானு மருவுரு வென்னு மூன்று
புரிதரு வடிவ மின்றிப் புராணனு யமல னாகி
மருவிய சமய பேத முழுவதுங் கடந்து நிற்பன்
பரவுறு முன்னோன் மேனிப் பண்பினை யுணர்வோர் யாவர். (௬)

அன்னதோர் தன்மை யுள்ளா னருளுருக் கொண்டு நாளு
மன்னிய சோதி காம வளநகர் கோண மூன்று
துன்னிய வீதி பெற்றுத் தோன்றிய தன்மைத் தாகு
மின்னநல் வீதி முன்ன ரிசையுமண் டபமு மொன்று. (௭)

திண்ணிய பவளக் கம்பஞ் சேருற நிறுத்திப் பொன்னாற்
கண்ணிய மணியாற் செய்து கவினுற விளங்குஞ் சோதிப்
புண்ணிய மண்ட பத்திற் போற்றிய தவிசின் மீது
நண்ணிவீற் றிருப்பன் செவ்வே ணங்கைய ரிருவ ரோடும். (௮)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லகங் குடைந்த செவ்வேற் கந்தவேள் கிரியை ஞானஞ்
சொல்லிய விச்சை யென்னுஞ் சத்திக ளான வேலும்
வல்லிய ரிருவர் தாமு மருவிடக் கூடி யொன்றாய்ப்
பல்லுயிர்க் கருளைச் செய்து பரபதம் வழங்கு மன்றே. (௯)

சங்கரன் புதல்வ னான சண்முகங் கொண்ட நாதன்
றங்கிய மண்ட பத்தின் சந்நிதி முன்ன ராகி
நங்கையாம் வள்ளி யென்னு நாயகி கோயி லான
தங்கமண் டபமு மொன்று தூயதாய் விளங்கு மன்றே. (௧௦)

மன்னிய சமாதி யோக மண்டபம் விளங்கும் பாங்க
ரன்னையா முமையின் கோயி லானைமா முகவன் கோயில்
சென்னியின் மதியஞ் சூடுஞ் சிவனுறை தளியி னோடு
மின்னமும் வேறு வேறு மெழிற்றளி பொலியு மாங்கண். (௧௧)

திண்ணிய கழற்கால் வீரன் சார்தரு தளியு மேனை
யண்ணலம் வீர ராஜோ ரமர்தரு தளியு மேவும்
புண்ணிய மறையோர் வாழு மடங்களும் பொலியுந் தென்பாற்
கண்ணிய சைவர் வாழுங் கிருகமும் விளங்கு மேல்பால். (௧௨)

மனங்கவர் திருக்கல் யாண மண்டபம் வடபான் மன்னுங்
கனங்குழைக் கணிகை மாதர் காதலித் துறையு மில்லஞ்
சினமுதல் களைந்து மேலாஞ் சினகரத் தொண்டு செய்வோர்
முனைவனைப் பூசை செய்யு மறையவ ருறையு மில்லம். (௧௩)

வெள்ளிய நீறு பூசி விளங்குகண் மணியும் பூண்டு
தெள்ளிய வெழுத்தா றெண்ணித் திகழ்குக பக்த ரெல்லாம்
வெள்ளமா யீண்டி வந்து விலாப்புடை பருக்க வுண்பா
னள்ளியே யமுத மூட்டு மருந்தவர் மடங்க ளோங்கும். (௧௪)

கருப்பயில் வருத்த மாற்றுங் கருத்தமை யுளத்த ராகித்
திருப்பொலி விழவு தன்னைத் தரிசிக்க வருவோர்க் கெல்லாம்
பருப்புநெய் பொரிய லிஞ்சிப் பச்சடி வகையுஞ் சேர்த்து
விருப்புட னன்ன மூட்டும் வியலிடம் பலவு மோங்கும். (௧௫)

சத்திரங் கட்டி யன்ன தானஞ்செய் திடுகின் றோரு
மொத்தியன் மடங்க ளாக்கி முனிவருக் குதவு வோருஞ்
சித்திரத் தண்ணீர்ப் பந்தர் திகழுற வமைப்போர் தாமும்
பத்தியிற் றரும தானம் பலபல புரிவோர் தாமும். (௧௬)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னவர் பலரு மீங்கே யிருங்கிளை சூழ வாழ்ந்து
துன்னருஞ் சுவர்க்க மேவித் துகளறு போக மூழ்கிப்
பின்னர்நம் முருக னூடற் பேரருட் டிறத்தி னாலே
யன்னவன் குகலோ கத்தை யடைந்துவாழ்ந் திருப்ப ரன்றே. ()

மங்கைசெங் கரத்திற் றோன்று மாணிக்க நதியு மெண்ணில்
பொங்கிய தவங்கள் செய்தே புனிதன்சந் நிதிமுன் செல்லும்
பங்கமில் மன்னர் மன்னன் பகீரதன் றவத்தால் வந்து
கங்கைநற் காசி தன்னிற் கண்ணுதன் முன்பு போல. (௧௮)

சந்தன மரமும் யானைத் தந்தமு மணியும் வீசி
மந்தமாய்ப் படர்ந்து சென்று மற்சமு மாகம தாலுஞ்
சந்ததந் திகழ வோங்கிச் சற்றுமே கலங்க வின்றி
யிந்துவாம் பெயர்பு னைந்த விருங்கடல் சேரு மன்றே. (௧௯)

சங்குசக் கரமுந் தண்டு தாமரை வாளு மேந்தித்
தங்கிய சரமு மேனை யசரமு மாகி யோங்கி
யெங்குமே நிறையு மெண்ணி லுயிர்களுங் காக்கு மாண்மா
னங்கையை மாற்பிற் கொண்ட நாதனை யொக்கு மன்றே. (௨0)

நதியிரு கரையின் பாலு நற்றரு வளர்ந்து சூழும்
பொதிமது வுண்டு தேக்கிப் பிரமர முரன்று சூழ
மதிகவர் குயில்கள் கூவ மஞ்ஞைகள் கவினுற் றாட
முதுபகை யின்றி யங்கண் மதகய முலவா நிற்கும். (௨௧)

வண்டமர் கமல மேலோன் வண்புவி காக்கு மாயன்
பண்டுமுப் புரந்தீ யிட்ட பசுபதி பதினெட் டென்னுந்
திண்டிறற் கணங்கள் சூழத் தேவியர் தங்களோடு
மண்டின ரிருப்பா ரந்த வணிகெழு நதியின் பாங்கர். (௨௨)

நானிலம் புகழும் பாண்டி நாட்டொடு சோழ நாடு
கானகஞ் சூழ்ந்த கொங்கு கோளங் கலிங்க தேசந்
தேனின முரலுஞ் சோலைத் தெலுங்கமா ளவமே வங்க
மானினந் துள்ளி யோடு மகதமே காசி காஞ்சி. (௨௩)

இன்னநன் னாட்டில் வாழ்வோ ரேந்திழை மார்க ளோடு
நன்னிய மத்த ராகி நற்சிந்தை யுடையோ ராகி
மின்னிய கதிரை நாதன் மெய்யருள் கிடைக்கப் பெற்றுற்
றுன்னிய வீட்டி னின்று தூய யாத்திரை செல்வாரே. (௨௪)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயினாற் குகனை வாழ்த்தி வேலவா முருகா வென்பர்
தாயினு மினியா யென்பர் தங்கவேற் கரத்தா வென்றே
யோய்விலர் கதறிக் கூறி யொருவகை நடந்து சென்று
தூயதோர் சோதி காமத் தொல்பதி யடைவர் மன்னோ. (௨௫)

மனமது கதிரை நாதன் மலர்க்கழல் படிந்து மூழ்க
மனைமகார் சுற்றத் தோடு மாணிக்க கங்கை மூழ்கிக்
கனிவுடன் காம வீசன் கழலடி வணங்கிப் போற்றி
நினைவரம் பெற்று வாழ்வர் நீணிலத் தயப்ப மன்னோ. (௨௬)

மண்ணியல் கங்கை யாகு மாணிக்க நதியின் மூழ்கல்
கண்ணியர் புகழ்ந்து போற்றுங் கதிர்காம தலத் திருத்த
லெண்ணியக் காமே சன்ற ரிசனை யெய்தன் முன்னோர்ப்
பண்ணிய தவத்தி னாலே பாரினர் பெறுவர் மன்னோ. (௨௭)

திருநகரப்படல முற்றிற்று.

ஆ திரு விருத்தம். 107.

---

# நைமிசப்படலம்.

பூவிருந்த நான்முகன் பொருக்கெனக் கடாவிய
தாவிருந்த ருப்பைநேமி தங்குநை மிசவனந்
தேவிருந்த செந்தமிழற் றிகழ்ந்துவிண்ணை வர்க்கெலா
மாவிருந்து வைகலும் மகிழ்ந்தளிக்கு மாண்பதே. (௧)

கன்னியந் துழாயணி கடவுள்நான் முகத்தவன்
பொன்னுல களித்திடும் புரந்தரன் முதலினோர்
துன்னியே மகிழ்ந்துவைகு தூயநை மிசவன
மன்னவ ரிருந்தநாடு மாங்கிருப்ப தொக்குமே. (௨)

வேதநான்கை யும்விளம்பு சந்தையு மவற்றைநாடி
யோதுமோதை யுமுயர்ந்த வேள்விதன்னி லும்பருக்
கோதுபல் மனுக்களும் வயின்வயின் குழுமியே
சீதவாரி தித்திறந் தெரிக்குமவ் வனமதே. (௩)

பைங்குசத் தருப்பையும் பலாசபத் திரமுநாளு
மங்கியின் விளைசெய வமைந்தன பலவுமல்கிச்
சிங்கமுங்க ரிபுந்தேனு நீயவல்லி யம்மிவை
தங்குமுட் பகையிலாது தங்குமாண்ப தவ்வனம். (௪)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு.

ஐவகைப் புலப்பகை தணிந்து மூந்தக் கரணமா மரும்பகை தணிந்தும்
மெய்வகை மும்மலப்பகை தணிந்தும் மேவினே னிருந்திடுங் கானி
லுய்வகை யறியா விலங்கினங் தங்க ளுட்பகை தீர்ந்திட லரிதோ
செய்வகை யுணரா வுயிர்களின் றன்மை சேர்த்ததன் றன்மையா மன்றே.

வேறு.

இன்னவளம் பலவுடைய நைமி சத்தி லிருப்பவர்க ளிறைவன் முன்னே
சொன்னவாய் மொழியாய சுயம்பு வென்னுந் தொல்லைமறை தகளிலாமற்
பன்னவருஞ் சத்திரியா தர்க்கே யென்னப் பகர்ந்திடுமா கமங்க ளாதி
நன்னயப்பா னீர்பிரிக்கு மன்னம் போல நன்குணர்ந்தார் பலரா மன்றே.

வானமர்கற் பகநாட்டின் வாழ்வு வேண்டார் வைதண்ட மனைவதியின் வாழ்வு வேண்டார், கானமரும் பதுமநிதி சங்க மாகக் கருதுநிதி களும்வேண்டார் கானம் பாடுக், தேனமருங் கொன்றையந்தா ரீசன் செம்மைத் திருவடிகண் மறவாத தொண்டு பூணற், கானவொர்பற் றேயன்றி வேறு பற்றி னமையாத நெஞ்ச முடைய மேலோர். (எ)

முத்திதனில் விருப்புடையார் முழுமுதலாம்பிரம ஞான முழுதுணர்ந்த நல்லோர் தாமே, புத்திதனி லைம்பொறியின் போக்கை வென்றோர் புகல்யோக நிலைதனராப் புனித முள்ளோர், சத்தியநற் பொறுமையொடு மடக்கஞ் சாந்தந் தண்ணளிமா தயாவுடைய சால்பின் மேலோர், நித்த சுத்த மெய்ஞ்ஞான நிமலன் பாதம் நெஞ்சகலாத் தியானநிலை தெளிந்தீரர். (அ)

இயமநிய மாதனப் பிராண யாமம் மினிய பிரத்தியா காரந் தானுஞ் சயமுறுதா ரணைதியானஞ் சமாதி யென்னுந் தக்கதோ ரட்டாங்கந்தாமேயாகு, நயமமரும் யோகநிலை சாலும் யோகர் நாடுமை வகையாக நவையுறது, பயனுறவேட் கும்பண்பின் மிக்கார் முத்தி பஞ்சாக்க ரம்பயிலும் பற்றுள் ளோரே. (கூ)

வேறு.

என்னபல் பிறப்பு மின்ன லீதலா வினைதொ ழிக்க
மன்னுநல் லுபாய மீசன் மலரடி காண லாகுந்
துன்னுமன் னதற்கு பாயம் விபூதிகண் டிகையின் றோற்றம்
பன்னுமைந் தெழுத்தை யெண்ணிப் பான்புகழ் கேட்ட லென்பார்.

வேறு.

குழுமுனை மிசயா வனத்துறு முனிவர் கோதறு குணக்குன்ற மன்னோர்
பழிதவிர் மகஞ்செய் புனிதமா தவர்கள் பகர்சவு னகமுனி முதலோர்
சுழிபலி திரைக்கோ மதியெனப் புகலுந் தூயநன் னதிக்கரை சேர்ந்து [கம்.
பொழிதரு மதுப்பூங் கொன்றையி வணியனும் புனிதனுக் குகந்திடும் யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண் டென்னு மாண்டினிற் பிறங்கப் பண்ணியே முடிப்ப தொன் ருகு, நன்னய விதியிற் றொடங்கினர் புரிந்தார் நாடிய மகந்தனைக் காண்பான், பின்னுமன் பினர்கள் பெருந்தகைக் முனிவர் பிறங்கிய நீத் தொடு கண்டி, துன்னிய மெய்யர் தொடர்ந்தகா தலினுற் சூழ்ந்தன ரம் முனி வாருள். (கஉ)

வேறு.

செங்கதி ரகத்துப் பொலிந்தென மாசில் செய்யமெய்ஞ் ஞானமும் புறத்துத், தங்கவெண் மதிபூத் தாலென மேலாந் தகைமைசால் விபூதியு முடையோன், துங்கமா ரரைமேன் மாவுரி சிரமேற் றுணர்ச்சடை விள க்கிதுறப் பெற்றுப், பங்கமில் கண்டி பகருரவ கழுத்துப் பகர்சிரம் பாங்க மை காது. (கங)

என்னுமிவ் விடங்க ளெழிலுறத் திருவைந் தெழுத்தினை மனத்தி னிற் கணித்துத், துன்னுமா ணவரின் குழாத்தின ரினிதாய்ச் சூழ்ந்த னர் புடைவர வேதம், பன்னுறு வியாசன் மாட்டுறப் புராணம் பயன் பெறக் கேட்டிடுந் தூயோன், கொன்னுனை வேற்கைக் குமரன்பா லன்பு குலவிய சூதனும் வந்தான். (கச)

வந்தசூ தனைக்கண் டௌமகிழ் முனிவர் மட்டறு மகிழ்ச்சியிற் றிளைத்து முந்துசென் றெதிரே வணக்கம தியற்றி முகமன்கள் பலநன்கு கூறிச் சந்தநீண் மணியா லிழைத்திடு தவிசிற் றகவுறு மன்புட னிருத்திக் கந்தமா மலர்கொண் டருச்சனை புரிந்து கவினுறு பாத்திய முதவி. (கரு)

தத்தம தன்பாற் பணிந்தனர் தாமுந் தயங்குறு சந்திரற் சூழ்ந்து மெத்துறு முடுவின் றிரளினைப் போல மேவின ரருகினி லிருந்தார் சுத்தமா மகத்தின் முடிவிலே மேலாஞ் சுபகதை கேட்குறும் விருப்பாற் கத்துறு திரைசூழ் காசினி மாந்தர் காண்டக வுய்வுறு மாற்றல். (கசு)

மறைவிதிப் படியே மாமகம் புரிவோர் மாசகன் முனிவரா யுள்ளோர் அறைகுவர் சூத முனிவரை நோக்கி யருட்பெரு மாகட லனையாய் மறைகளை வகுத்து நன்றுப கரித்த வாதரா யணமுனி வன்பாற் குறைவிலாப் புராண முழுவதுங் கேட்டுக் கோதற வுணர்ந்தநங் கோவே.

பலவகை யறங்கள் யாவையு முன்னம் பான்மையி னுணர்ந்தநம் பெரியோய் நலமலி புராணம் யாவையு நின்பா னன்குற முன்னமே கேட்டோ நிலமிசை யினிமேற் கேட்பதே தென்று நினைத்திடின் யாதொன்று மில்லை யலகிலாப் பெருமை வாய்ந்துள தாகி யணிபெறு மிருகயி லாசம். (கஅ)

உளவென முன்ன முரைத்தனை நீயவ் வுயர்வுறு மிரண்டினி லொன்று வளமலிந் துளதென் கைலைபா லென்ன வகுத்தனை யங்கதிற் செவ்வேள் பணைத்துறு புகழின் பெருமையைப் பகரும் பகுதியைக் கேட்குறு மாசை யளவுறாக் கடந்தோ டிற்றதங் கதனை யருள்செய வேண்டுமென் றிரந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரிடந் தலமே யோரிடந் தீர்த்த மோரிட மூர்த்தியா யமைதல்
லோரிட முதனிற் சிறப்புற விளங்கும் பகர்ந்தமூன் றும்பொருந் துற்றே
யோரிடந் தன்னிற் சிறந்திருக் கின்ற தெவ்விட முரைப்பினுங் கடம்பந்
தாரணி பெரு...றனியருள் வழங்குந் தானம தியாதென வினவின். ()

எத்தலங் கந்த நாயக னெந்த நாளும்வீற் றிருப்பது தலஞு
தெத்தல மொருவ னுயுரு ளன்பா லோர்முறை யேகிக்கண் ணுற்றுற்
கைத்தல நெல்லி யங்கனி போலக் கருதிரு மைப்பயன் வழங்கு
மெத்தல மயன்மான் முதலி... தேவ ரிறைஞ்சிடப் பொலிவுறு மாதோ. ()

இத்தனை வளங்க ளமைவுறப் பெற்றே யிலங்குறு கூறிய செவ்வேல்
கைத்தலங் கொண்ட கருணையங் கடல்சேர் கருதரு மொருதல நவின்று
லத்தனை நிகர்வா யுன்னையொப் பாரிவ் வகலிடத் தூற்றுளோர் யாவ
ருத்தம மான தேசிகா ஞான வித்தகா வுரைத்தரு ளென்றார். (உஉ)

தவத்துயர் பெருமைச் சவுனகன் முதலாந் தபோதனர் கூறிய மொழியைச்
சிவத்துயர் கருணைச் சூதமா முனிவன் செவியினுன் மகிழ்வொடு கேட்டே
யவத்துய ரகன்ற வகத்தனுய்த் தீரா வருர்பவ வேதனை களையுஞ்
சிவத்தினை யடையச் செய்திடு மிதனைச் செப்புதி யென்றமை நன்று(உங)

என்றுமா முனிவ னிதயத்தி லெண்ணி யினிதுற வுரைத்தருள் செய்வான்
குன்றன முனிவீர் நீவிர்கள் யாருங் குறிப்பொடு வினவிய கொள்கை
நன்றறி வார்க ளியாவர்க்கும் நலமா நவிலருங் கிரவுஞ்ச மாகுங்
குன்றினை யழித்த வறுமுகச் செவ்வேள் குரைகழல் சேர்வழி யாமே.(உச)

விழைவொடு நீவிர் வினையவை வாய்ந்த மேன்மைசா றலமதொன் றுண்டு
பிழைபடு சூரைத் தடிந்தவெம் பெருமான் பீடுறு மனந்தனிற் பிரியங்
...ழைதரு மனைய தலமிது காறுஞ் சாற்றிய தில்லையே தயங்குங்
குழைதரு மனத்தீர் வினவிய வகையாற் கூறுவ மதனையிங் கினியே.(உரு)

வேறு.

மதுமலர் திரைக்கை யேந்தி மாணிக்க கங்கை தானே
கதுமென வழிபா டாற்றப் பொலிதலங் கதிரை யென்பா
ரிதுவலாற் சோதி காம மெனவுமோர் பெயர்வ ழங்கும்
முதுமறை யஞ்சு காம மென்னவு மொழியு மன்னோ. (உசு)

வேறு.

போற்றியமுப் பெயர்க்கேது மொழிவாம் பின்னர்ப் புகலரிய மேன்
மைவாய்ந் தருமையான, வூற்றினிய லமைந்ததோர் காந்தந் தன்னி லோ
தியமா கைலைமான் மியமே நன்கு, சாற்றியதித் தலமேன்மை செப்பு
மாறு தாவில்வே றொருநூலுங் கூறிற்றில்லை, ஆற்றுமைம் பொறிசேரு மந்
தணீரே யறைகுதும்யா மன்புடனே கேண்மி னம்மா. (உஎ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணறுமற் புதநிகழ்தற் கிடம தாகி யிலகுமது போன்மேன்மை
வாய்ந்தே யிர்த, மண்ணதனிற் பிறிதில்லை மற்றதன்றன் மான்மியங்கூ
றுதுந்தொகுத்து வழுவா வண்ணம், புண்ணுலவும் கதிராவடிவேற் புனித
ன் மூன்று புரப்பகையா மமலனுதல் விளங்கு கின்ற, கண்ணினிடை
யாறுபொறி யாகித் தோன்றிக் காமருசீர்க் குழவியாய் வளர்ந்து வைகி. ()

விண்ணவர்சே னைபதியா யிலக்கத் தொன்பான் வீரர்குழாத் தொடுந
ண்ணி மேன்மை பூண்ட, திண்ணியமெய்ப் பூதகணந் தேவர்யாருஞ் சிற
ந்தமருங் கினின்மேவித் திகழ நன்கு, பண்ணியதேர் மிசையேறிக் கை
லை நீங்கிப் பண்டுபரன் பால்வரங்கள் பயிலப் பெற்ற, மண்ணிடைத்தா
ரகன்வைகு மிடமாய் நண்ணு மாயமா புரியடைந்த வகைமை தானும். ()

வேறு.

தாரக னுணர்ந்து சமர்தனைச் செய்யச் சண்முக னவனுடன் மலைந்து
வீரவேற் படையால் விலக்கலோ டவன்றன் வியனுயிர் தன்னைமாய்த் த
வாரமோ டமரர் வள்முறு தேவ கிரியினில் வழிபட மகிழ்ந்து [துவும்
பூரண முதல்வன் வைகுகே தாரம் பருப்பதம் வேங்கடம் பொருந்தி. ()

திருமிக விளங்குங் காளத்தி காஞ்சி திருவண்ணா மலையொடு தில்லை
திருவணங் குறுமா ரூரிடை மருது திருச்செங்கோ டலைகடற் செந்தி
திருவமர் பதிகள் பலவழி பட்டுத் தீதிலா மாணிக்க கங்கை
மருவலர் தம்மை வென்றிடு மாறு மன்னுபா சறையமர்ந் ததுவும். (௰௧)

வேறு.

பாசறை யிருந்த செவ்வேள் பானுவின் பகையி னோடு
மாசறு காட்சி வாய்ந்து மன்னிய சிங்க னென்று
பேசுறு மசுரர் தம்மைப் பிறங்குபோர் தன்னில் வென்று
நாசமில் வரம்பெற் றுள்ள சூரனை நசித்த வாறும். (௰௨)

போர்க்கள மகன்று வேலோன் புண்ணிய வடிவ மான
சீர்க்கதிர் காம மென்னுஞ் சிலம்பினை யடைந்து பூசை
கார்க்குழா மூர்த்தி தானுங் கண்ணனு மயனுஞ் செய்ய
ஆர்க்குமே புரிய செவ்வே லண்ணலங் குறைந்த வாறும். (௰௩)

கடம்புனி தாரோ னந்தக் கதிர்காம கிரியை நீங்கி
கடம்படும் யானை போற்று கன்னியை வதுவை செய்து
தடம்படுந் தணிகைசேர்ந்து சார்ந்தசின் னைளங் குற்று
மடம்படுங் குறவர் மாதை மாமணஞ் செய்த வாறும். (௰௪)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தவெற் பகன்று செவ்வேள் கருணையான் மனைவி மாரோ
டிந்திரன் பிரமன் மாலோ னேனைவா னவர்தம் மோடு
சந்தமா மறைக ளேத்துந் தலத்தினி னாவா யேறிச்
சிந்து[illegible]வக [illegible]ந்து தென்பாற் காங்கேயன் றுறையி றங்கி. (௩௫)

செந்திரு வமர்ந்த கந்த கானத்திற் றேவ ரெல்லாம்
வந்தனை செய்ய நல்ல வரம்பல வழங்கி யப்பாற்
கந்தநன் மலையே சமனை கண்டகி வடகாந் தார
மிந்தநன் மலைகள் வைகிக் கதிர்காமத் திருந்த வாறும். (௩௬)

கானகக் கதிரை வெற்பிற் காமேச னாகி யன்பால்
வானவர் போற்றி செய்ய வள்ளலாய் வைகு மாறுந்
தேனமர் பொழில்சூழ் தெய்வக் கதிரையந் தலத்து மேவி
யானுயி ரகன்ற பொல்லா வபகீர்த்தி வீடு சேர்வும். (௩௭)

வேறு.

கூட்டக வாழ்க்கை வேட்டுவ ரானோர் களொடு கள்ளுக் காமந்தான்
ஈட்டினர் கதிரை யாத்திரை செய்வா ரேந்திழைச் செய்யவாய்க் கூரார்
வாட்டனிக் கண்ணார் வலையினிற் பட்டு மயங்கிய பாதகர்க் கருண்மேம்
பாட்டினி னிலவும் பராபர முதல்வன் பரசதி யளித்திடு பரிசும். (௩௮)

குளக்கோடன் றன்மகனும் பாவ தீபன் சொடுங்கோல னென்னு நாம
னுளக்கோட்டம்பெற்றவிளங்கோமானன்னுலகினிற்கீழொழுக்கமாக
வளக்கொணு தன்செய்வா னழகு சேரு மரிவையர்பின் னுற்ற காம
வளக்குவையான் வந்துதரி சித்த தாலே வான்கதிதான் வழங்குமாறும்.()

வான்கதிர் காமம் வருமிமை யவர்கள் வன்கலி வென்றிடு விதமும்
வான்பொருளிழந்த வணிகர்கள் நல்ல வளம்பெறு தனம்பெற்ற வாறும்
மான்புரை கண்ணா ரருள்பெற்ற வாறு மத்தலத் தின்னமைவுற்ற
மான்மிய மென்று சூதமா முனிவன் தொகுத்தினி துரைத்தனன் மாதோ.

வேறு.

மன்னியநான் மறைத்தவர்கள் மற்றதுகேட் டுளமகிழ்ந்து
பின்னுபுக ழோய்தொகுத்த கதைவிரித்துக் கூறுகெனத்
துன்னுகளிப் பாற்சூத முனிவரன்சொன் னனதனைப்
பன்னுதமி ழானன்கு மொழிபெயர்த்துப் பாடலுற்றேன். (௪௧)

நைமிசப்படலமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 143.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவவதாரப்படலம்.

கற்பனை கடந்த சோதிக் கடவுளே பரனே போற்றி
தற்பரப் பொருளே யான சண்முகத் தேவே நின்றிற்
கற்பக நெடுவே லேவிக் கடவுளர்க் காக்க வந்த
பொற்புறு கதிரை வாழ்வே புண்ணியப் பொருளே போற்றி. (க)

புரமெரிக் களித்த முக்கட் புண்ணிய முதல்வ னை
சிரமிசை மதியஞ் சேர்ந்த செம்மல்பாற் செப்பி ராறு
சரமுடைக் கந்த மூர்த்தி காமரு குழவி யாகிச்
சார்தமைக் காக்க வந்து தோன்றிய சரிதஞ் சொல்வாம். (உ)

முன்னொரு காலந் தன்னின் முதுமறைக் கிழவன் பெற்ற
தன்னிக ரிலாத தக்கன் றனிப்பெரு வேள்வி தன்னை
மன்னிய சிவனா மாதி முதல்வனை யகற்றிச் செய்து
வன்னியி லவியைத் தானு மறுத்தன னில்லை யென்று. (௩)

சிறுவிதி மகத்தைக் காணச் சென்றமா லயனுந் தேவர்
தறுகண ணருந் தக்கன் சிவநிந்தை செய்யக் கேட்டே
யுறுபெரும் பாவஞ் சார வொப்பிலாப் பதவி நீங்கிக்
கறுவுகொள் சூரன் செய்த கொடுமையை யஞ்சி னாரே. (௪)

வேறு.

விண்ணுலக வேந்தனுந்தன் வியனுலகை விட்டகன்று
மண்ணுலகில் வளமலிந்த காழியெனுந் திருப்பதியை
நண்ணுபுகழ் பெருமானை நாடோறும் வழிபடுவான்
புண்ணியன்வாழ் மேருவிற்குப் போயினான் புலவரோடும். (௫)

மேருகிரி தனையடைந்து மாலொடயன் றிசைகாப்போர்
பேருடைய வெகுமுனிவர் பெருமையிலா வானோர்கள்
யாருமொரு மித்திருந்தே யியம்புவா ரென்செய்வோஞ்
சூரனால் யாமடையுந் தொல்லைக்கோ ரெல்லையிலை. (௬)

நனிதுயரக் கடலாழ்ந்து நாமிகவும் வருந்துகின்றோ
மினிநமக்குப் பொறுக்கரிதே யிருங்கயிலை தனிமேவிப்
பனிமதியுங் குளிர்புனலும் படர்சடைமே லணிந்தபரன்
றனிமுதல்வ னிடநமது தளர்வுதனைச் சாற்றுவமால் (௭)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையே சுரர்களெல்லா மிசைத்துவெள்ளி மலைக்கேகி
யெவ்வந்தா னகல்கால மெய்தலினு மிறைவனுறை
தெய்வதக்கோ யிலிற்சேர்ந்து திருநந்தி தேவர்தமை
யவ்விடையே வணங்கினரா யகமெலிந்து கூறுகின்றார். (அ)

வேறு.

நாதனு மமர்ந்த கோயி லையக நந்தி கேண்மோ
சீதமா மதியஞ் சூடுஞ் சிவபிராற் கெமது துன்ப
மோதிநீ யவன் பாலெம்மை யொல்லையில் விடுப்பா யென்று
தேவர்கள் வணங்கி வேண்டக் திருவுள மிரங்கி நந்தி. (௯)

நம்பெரு நாதன் முன்போய் வணங்கியே நவிலு மையா
வும்பர்க ளெல்லா நின்னை வணங்குமா றொருங்கு வந்தார்
நம்பனே யென்று கூற நந்திநீ நல்கு கென்றான்
வம்புலா மலர்ப்பூங் கொன்றை மாலையை யணிந்த பெம்மான். ()

அண்ணலி னாணை தன்னை நந்தியு மருளிச் செய்யப்
பண்ணவர் தாமுங் கேட்டுப் பெண்ணொரு பாகங் கொண்ட
தெண்ணிலா வேணி யண்ணா றிருமுன்பு சென்றே யன்னான்
றண்ணறுந் தாள்ப ணிந்து தாங்கரு மகிழ்ச்சி கொண்டு. (௧௧)

புண்ணியப் பொருளே போற்றி பூரண முதலே போற்றி
பெண்ணொரு பாகா போற்றி பிறையணி சடையாய் போற்றி
பண்ணியன் மறைக ளேத்தும் பராபரா போற்றி முக்கட்
பண்ணவா வடியேஞ் செய்த பிழைகளைப் பொறுப்பாய் போற்றி.

காலனைக் காய்ந்து காலா லொருவனைக் காத்தாய் போற்றி
ஆலமே யமுத மாக வருந்திய தலைவா போற்றி
ஞாலமூன் றினையுங் காக்கு நாதனே போற்றி போற்றி
சூலவெம் படையைக் கொண்ட தோன்றலே போற்றி போற்றி ()

மாற்றரு மசுரர் தம்மால் வருந்துகின் றோமென் செய்வோம்
மாற்றவுங் கில்லோ மந்தோ யாவரைத் துணையாக் கொள்வோம்
மேற்றினில் வருவா யெங்க ளையக நீயே யெம்மைப்
போற்றுதல் வேண்டு மென்னப் புகன்றடைக் கலம்புகுந்தார். ()

இவ்வகை வானோர் யாரு மன்புகொண் டேத்து மெல்லை
மைவரு மிடற்றுப் புத்தேண் மற்றவர் தம்மை நோக்கி
நொவ்வுற லடைந்து வாடுந் தேவரே நும்மை யெல்லாஞ்
செவ்விதிற் காக்கு மாறு சேய்தனை யளிப்போ மென்றான். (௧௫)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றவர் தமக்குக் கூறி யாவரும் வருந்தா வண்ண
மன்றினூர் புரங்கண் மூன்று மழலெழ நகைத்த வண்ண
லுன்றிய விரண்டு மூன்று முகங்கொடு தோன்றி நெற்றி
நன்றுள நாட்ட நின்று நல்கினன் பொறிக ளாறு. (கசு)

மூவிரு சுடரைத் தந்த முக்கண னருகு மெந்த
தேவருள் வாயு வங்கித் தேவர்க டம்மை நோக்கி
நீவிரிப் பொறிக ளாறை நெறியினிற் சுமந்து போகி
யாவரும் புகழுங் கங்கை யாற்றினி லிடுமி னென்றான். (கஎ)

தாங்கினள் கொண்டு சென்று சரவணந் தன்னி லுய்ப்பா
யீங்கிது பணியா மென்றே யிறைவனு மருளிச் செய்ய
வாங்கவ ரிருவர் தாமு மாறையுஞ் சுமந்து சென்று
வீங்குநீர்க் கங்கை யென்னும் வரநதி தன்னி லிட்டார். (கஅ)

அரனருண் முறையை மாற்ற வஞ்சிய கங்கை யென்பாள்
சிரமிசைச் சுமந்து சென்று சரவணப் பொய்கை சேர்த்தாள்
வாமுறு பொய்கை தன்னில் வான்சுட ராறுஞ் செந்தா
மரையிதழ் பொலிந்தே யாங்கு மல்கிய தெனலா மன்றே. (ககூ)

அருவமு முருவு மாகி யநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
யொருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலக முய்ய. (உ0)

உதித்தருள் முருகன் றானு மொண்டொடி யாரன் மாதர்
கதித்துண தனப்பா லுண்ணக் காமரு குழவி யாருய்
விதித்தருள் வடிவங் கொண்டு விளையாடி யங்க ணுற்று
னதித்தலை மிலைந்த நாத னங்கையோ டங்கு நண்ண. (உக)

முண்டக மலர்கள் பூத்து விளங்கிய வாவி தன்னி
லெண்டகு மிரண்டு மூன்று வடிவினை யெய்து மேந்த
லண்டர்க ளுதை னொடு மகிலமீன் றாளை நேரே
கண்டனன் முகம லர்ந்து களித்தன னுளமு மன்னோ. (உஉ)

அந்தநல் லமையந் தன்னி லம்பிகை முகத்தை நோக்கி
யிந்தநின் மகனுஞ் சேயை யெடுக்குதி யெனவி யம்பச்
சுந்தரம் பயின்று மேலாஞ் சேயுரு வாறு தம்மைச்
சந்தநற் கரங்க ளாலே தழுவின ளுலகை யீன்றாள். (உங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகை தழுவிச் சேர்க்க வாறிரண் டென்னுந் தோளு
மம்பக மீரா றுமோரா றருள்பொழி வதனத் தோடு
செம்பது மத்தை நேராந் திருவடி யிரண்டுங் கொண்டான்
வெம்பிற [illegible] நீக்கி விடருள் விமல மூர்த்தி. (௨௪)

கொங்கையி னமுத மூட்டிக் குமரனை யுச்சி மோந்து
திங்களு நதியும் வேய்ந்த செஞ்சடை யமலன் றன்னைப்
பங்கய மனைய தாள்கள் பாங்குடன் வணங்கு விக்கச்
செங்கரங் கொடுதன் சேயைச் சேரமார் போட ணைத்தான். (௨௫)

விடைமிசை யிவர்ந்து மையாண் மேவின ளிடப்பா றன்னி
லிடையினிற் குமரன் மேவ வெல்லொளிக் கயிலை சேர்ந்து
விடையினின் றிழிந்து மாது வேளுடன் சேர்ந்து நண்ணத்
தடைபுல் கடந்து சென்று மந்திரஞ் சார்ந்தி ருந்தான். (௨௬)

இன்னணஞ் சின்னா ளேக விந்திரை கேள்வன் றன்னை
யன்னவா கனத்தன் றன்னை யடைந்தன னிமையார் கோவு
மன்னிய குறைக ளெல்லா மற்றவர் தமக்குக் கூறித்
துன்னினன் கயிலை தன்னிற் றொழுதன னாவ ரோடும். (௨௭)

கரங்களுஞ் சிரமே வேறக் கலங்கிய வுளத்த ராகி
வரங்களுஞ் சிவன்பாற் பெற்றே வருத்தின ரவுணர் தாமு
முரங்களு மிழந்தே யாக்க ளொழிவறு கவலைப் பட்டோம்
பரங்கரு ணையன்பாற் சென்று பகருமா றெமைவி டுப்பாய். (௨௮)

என்றுதங் குறையைக் கூறி யேத்தலு மெழிலார் நந்தி
நன்றிவ ணிருப்பி ரீவிர் நாதன்பா னவில்வே னென்று
பொன்றிகழ் சடிலன் முன்பு போயினன் றொழுது போற்றி
மின்றிகழ் மார்பன் மாக வேந்தனு மடைந்தா னென்றான். (௨௯)

அருளுடன் சிவனு மெந்தை யம்மொழி புகலக் கேட்டுத்
தருகென வருளிச் செய்யத் தாண்மலர் வணங்கி நந்தி
விரைவுடன் திரும்பிச் சென்று வானவர் தம்மை நோக்கி
வருகென் வருள வன்னோர் வணங்கியுட் சென்றா ரன்றே. (௩0)

விடைமிசை வருவான் றன்னை வானவர் யாருஞ் சென்றே
யடிமுறை வணங்கி நின்றா ரவர்தமின் மகவான் றானு
மிடருறு மனத்த னாகி யின்னணங் கூறு கின்றான்
கடுவிட மருந்தி யெம்மைக் காத்திடு கருணை வாழ்வே. (௩௧)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு.

அருந்திறற் சூரனே முதலா மசுரரால்
வருந்தினம் பலயுகம் வன்மையு நீங்கின
மருந்திய வமுதினு லுயிரி ழுந்தில
மிருந்தனம் யாமினி யாது செய்குவம். (௩௨)

ஏற்றெழு வன்னிமே லினிது துஞ்சலாந்
தோற்றிய வெவ்விட மேனுந் துய்க்கலா
மாற்றல ரலைத்திட வந்த வெந்துய
ராற்றரி தாற்றரி தலமிப் புன்மையே. (௩௩)

இனியொரு கணமதே யெனினு மிங்கிவர்
துனிதனைப் பொறுக்கலந் துன்புற் றேவரு
பனிமதி மிலைந்தருள் பகவ னுதவி
னனியருள் சுரந்துநீ நம்மைக் காத்தியால். (௩௪)

வேறு.

என்றனன் பணிந்து கூறி யிந்திரன் பல்காற் றாழ்ந்தே
யொன்றிய வன்பி னோடு வாய்புதைத் தொருபா னின்றான்
கன்றினைப் பிணித்த கந்திற் றேன்றிய கருணை யாளன்
றுன்றிய துன்பி னோடு துதித்திடும் வலாரி தன்னை. (௩௫)

திருமறு மார்பன் றன்னைத் திசைமுகத் தவனை நோக்கி
யொருவுமின் கவலை யும்மை யொறுத்திடு மவுணர் தம்மை
முருகனால் மாய்ப்போ மென்றான் முடிவிலா முக்கண் மூர்த்தி
மருவிய துயர மாய்ந்த தினியெனச் சுரர்ம கிழ்ந்தார். (௩௬)

இகபர முதவு மீச னின்னவா குமரற் கோதுந்
தகுவரை யாளுஞ் சூரன் சிங்கன்றா ரகனே யென்னு
மிகுவரத் தோரை மாய்த்து விண்மக பதிக்கு நல்கி
யகமெலி வகற்று வாயென் றருளவே ளதற் கிசைந்தான். (௩௭)

பன்னிரு கரத்தில் வேலும் பகவன தாணை கொண்டு
பன்னிரு கரத்தும் வாளும் பங்கயங் குலிச மம்பு
மன்னுதோ மரம்விற் றண்ட மணிமழுக் கொடியும் வேலுந்
துன்னிமே யிலங்க மேன்மைத் தூமணித் தேரி வர்ந்தான். (௩௮)

ஓங்கிய தேர்மே லேற வொன்பது வீர ராலே
ராங்கவ னருள்சேர் மாய னிந்திர னிலக்க ரேனோர்
தேக்கிய படையி னோடு சேனைகா வலர்நூற் றெண்மர்
நீங்குத லின்றி யாரு நண்ணினர் நிமலன் பாங்கர். (௩௯)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்றோர் சமயந் தன்னி லாயிரத் திரட்டி யென்னுஞ்
சேனைமா நீத்தம் பாங்கிற் சேவித்து மன்னிச் செல்ல
மானமா வீரர் [illegible]னோர் மற்றையர் யாரு நண்ண
வானவ[illegible]கோர் வெள்ளி வெற்பொரீஇ யவணி வந்தான். (௪௦)

ஐம்முக முடைய சோதி யாறுமா முகமுங் கொள்ள
வெம்மைசேர் நுதற்க ணின்றும் விளங்குறு பொறிக ளான
வெம்முயிர்க் கிறைவன் றோற்ற மியம்பினு மினிமே லன்னோன்
செம்மையி றாரகற் செற்ற செயன்முறை செப்பு வாமே. (௪௧)

திருவவதாரப்படலமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 189.

---

# தாரகன் வதைப்படலம்.

ஒன்றுமாய்ப் பலவு மாகி யுலகுயிர் தோறு மாகி
நின்றுதா னிலவு கின்ற நித்திய னாகி நேரில்
மன்றுளா டியபி ரானார் மகிழின் மதலை யாகுங்
குன்றுசேர் கதிரை மேவுங் குகன்றிருப் பாதம் போற்றி. (௧)

வேறு.

மானமிகு தனிவேலோன் மன்னுயிரை மிகவதைப்போன்
தானவர்தங் குலத்துதித்தோன் சூரனுக்குத் தம்பியானோன்
வானிலவு மதியுரிஞ்சு மதிலுடுத்த திருநகரான்
ஆனதிற லரக்கனுமங் கிருந்திடுநா ளினிலொருநாள். (௨)

நலமிகுந்த செவ்வேளு நானிலமேல் வழிக்கொண்டு
வலமிகுந்த பெரும்பகைவன் வருமதஞ்சேர் கரிமுகத்தன்
தன்மகனை யடைதலுமே தறுகண்மைக் குறட்பூதர்
அலக்கணுற்றுத் தானவர்க ளஞ்சுமா பொருதனரே. (௩)

வேறு.

தாரமர் கொன்றை மாலைத் தனிமுத லளித்த செவ்வேள்
காரகத் தவுண னான கயமுகங் கொண்ட வீரன்
றாரக னென்பான் வைகுந் தனிநக ரதனைச் சார
வீரருட் புகுந்து போரை விளைப்பதை யொற்றர் சொல்வார். (௪)

நந்தம திறைவ கேண்மோ நீத்தமா யிரத்தி ரட்டி
முந்துறு பூத சேனை மொய்த்தன வாகிச் சூழக்
கந்தனென் றொருவன் வந்து கடிநகர் வளைந்து கொண்டா
னுந்துறு பூத வீர ருடன்றமர் விளைத்து நின்றார். (௫)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றலும் வடவைத் தீயி லீபூ தெனு மளக்கர் விழத்
துன்றிய வெழுச்சி மானத் துன்னெனச் செற்றந் தூண்ட
மின்றிக ழரிமா னேற்று வியன்றவி சிருக்கை நீங்கிக்
குன்றுறழ் மகுட மண்ட கோளகை தொடவெ ழுந்தான் (௬)

எழுந்துதன் மருங்கு நின்ற வொற்றரை நோக்கி யிந்தச்
செழுந்திரு நகர்யேல் வந்த சேனையை முளிபுற் கானிற்
கொழுந்தழல் புகுந்த தென்னக் கொல்வனந் தானை முற்று
முழுந்துருள் கின்ற மூன்ன சொல்லைத் திடுதி யென்றான். (௭)

ஒற்றுவ ரவன்சொற் கேட்டே யுடன்விளித் திடலுஞ் சேனை
கொற்றமால் கரியே வாசி குலவுதேர் குழுமிச் செல்லக்
கற்றைவெஞ் சுடர்மேற் றூனை கவிழ்ந்துவீழ் விட்டில் போல
மற்றவ ரிணையில் மன்னர் மன்னனுஞ் சென்றான் மன்னோ. (௮)

பல்லியங் குழுமி யார்ப்பப் படையுட னவுணன் மேவச்
சொல்லிய பூதர் காணூஉச் சீற்றமேற் கொண்டெ ழுந்தே
நல்லவர் தொழுது போற்று நாதனை நன்று வாழ்த்திக்
கல்லொடு கதையே சூலங் கப்பணம் பிறவும் வீச. (௯)

தானவ வீரர் கண்டே தரித்திலர் விரைந்து சென்று
மானவில் வளைத்து மாற்றார் மேற்சர மாரி பெய்து
வானவர் வழங்கி யுற்ற வான்படை பலவும் வீசி
மானமேற் கொண்டு நின்று மண்டமர் விளைத்தா னன்றே. (௧௦)

எண்ணுறு படைக ளிவ்வா றெதிர்த்தமர் புரியும் வேலைக்
கண்ணுறு மவுணர் பல்லோர் கரமொடு காலொ டிந்து
மண்ணினிற் குடர்கள் சிந்தி மாய்ந்தனர் பூதர் சில்லோர்
விண்ணினிற் றுள்ளி யார்த்து வீரமதொழிந்து நின்றார். (௧௧)

தேருடைத் தெறிந்து பாய்மாத் திறத்தினைச் சிதைத்து நீக்கிக்
காருடைக் களிற்றி னீட்டங் கைகளா லெடுத்து வீசிப்
பாரிடர் பல்லோர் தான வப்படை யுழக்கிக் கொன்றே
பேரிடர் புரிந்தார் நைந்தே யவுணரும் பெரிது மாய்ந்தார். (௧௨)

கண்டன னினைய தன்மை தாரகன் கடிய சீற்றங்
கொண்டனன் பூதர் தம்மைக் குறுகின னடியி னூர்த்துத்
தண்டமொன் றெடுத்து மோதித் தரையினிற் றள்ளி வீழ்த்தி
யண்டமுங் குலுங்கச் சென்றா னழிந்தது பூதர் சேனை. (௧௩)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்தின்சே னைகடா மஞ்சிப் புறங்கொடுத் தோடக் கண்டு
நாதனும் வீர வாகு நங்குகன் றனையு ளத்திற்
பேதகீ கூறலே யெண்ணிப் பெருந்தனு வொன்றைக் கையி
லேதகீர் [illegible]வெ டுத்தா னெதிரிலாப் பூத ரார்ப்ப. (௧௪)

எடுத்துள வரிவிற் கோட்டி யெழுப்பலு நாணி லோதை
படுத்துள திசைமால் யானை யஞ்சின பதைத்து நின்ற
கெடுத்துள மலைக ளெல்லாந் துகளுற வவுண ரானோர்
விடுத்தனர் வீர மானம் வெரிங்கொடுத் தோடி னைந்தார். (௧௫)

குறித்தனன் வீரன் றானுங் கொடியவ னெதிரே சென்று
செறித்தனன் கணைக டம்மைச் சினந்தனன் பதகன் றானும்
பொறித்தனன் வீரன் மீது புங்கவ மனந்த கோடி
கறுத்தன னன்னோன் றானுங் கரையறு வாளி பெய்தான். (௧௬)

விடுத்துள சரங்க டம்மை வீரனுங் கணைக டுண்டித்
தடுத்தன னீரைஞ் ஞூறு சரங்களை மேலு முய்ப்பப்
படுத்தனன் பதகன் றானும் பகழிகள் பலவு முய்த்தே [தான்.
தொடுத்தொரு தொடையி லாகத் தோன்றலுங் கணைகள் பெய்

வெங்கணை விடுதல் கண்டே வெகுண்டுதா ரகனும் வீரன்
பொங்கிய விசிக மேவி யிவனுயிர் போக்க லாகா
பங்கயன் முகுந்தன் றானும் பரமனும் பிறருந் தந்த
துங்கமார் படைக டம்யாற் றொலைக்குவ னிவனை யென்றான். ()

சிந்தனை யகத்திற் கொண்டு தாரகன் சிறப்பு வாய்ந்த
வந்தமி லனலி காலே யாதவன் முதலாந் தேவர்
தந்தநற் படைக டம்மைச் செலுத்திட வீரன் றானு
மந்தநற் படைக டம்மை யேவியே யழிக்க லுற்றான். (௧௯)

வெய்யனும் மாயை தன்னால் வெலவெண்ணி யதனை யேவச்
செய்யனுஞ் சிம்பு ளேவச் செருக்குட னதுதான் செல்லத்
துய்யமெய்ஞ் ஞானந் தோன்றத் துகளுடைக் குறும்பு மூன்றும்
நொய்தென வழிதல் போல நோன்மைகெட் டழிந்த மாயை. (௨௦)

முன்னினன் சூழ்ச்சி யொன்று முனைவெம்போர் புரியா னாகித்
தன்னிர தத்தை நீங்கித் தனிவரை முழையுட் புக்கான்
தன்னிக ரிலாத வீரன் றகுவனைத் தொடர்ந்து போந்து
துன்னிய வரைதான் செய்த சூழ்ச்சியான் மயங்கி நின்றான். (௨௧)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றவன் றிரும்பக் காணார் சேனைகா வலரி லக்கர்
துன்றிய வெண்மர் வீரர் தொடர்ந்தவ னெறியிற் போந்து
குன்றினுட் புகுந்தே யாருங் கிடந்தனர் குகையு ளன்னோர்
பொன்றின ராகு மென்னப் புலனழித் துளது ரு[illegible]. (௨௨)

வஞ்சனை பலித்த தென்று வரைமிசை யிவர்ந்த தீயோன்
விஞ்சிய வவுண ரார்ப்ப வில்வளைத் தனந்த கோடி
செஞ்சரந் தூண்டிப் பூதர் சேனையை யழிப்ப நோக்கி
யஞ்சின ரமரர் தாமு மறிவழிந் தேங்கி னைந்தார். (௨௩)

காயத்தின் சேறு பூசிக் காரிரும் பெறிய மாகந்
தோயுமுள் ளிலவின் கூன்காய் சினைதொறு முதிர்வ வேபோன்
மாயங்கொள் ளசுரன் ஞெட்ட மலிபெரும் பகழி யாலே
சேயவன் பூத வீரர் செழுந்தலை யுதிர்ந்த வன்றே. (௨௪)

நீனிறக் கடலை மேய்ந்து நிறமது கறுத்த மேகம்
வானிற விசும்பி னின்ற மாரியிற் பகழி சிந்திப்
பானிறப் பரமன் பெற்ற பாலகன் பூத வீரர்
சேனையை யமனூர் போக்கிச் செய்தனன் விருந்து மன்னே. (௨௫)

கண்டனன் முருக வேளுங் கறுத்தன னவுணன் றன்னைக்
கொண்டன னொருவிற் றானுங் குனித்தொலி செய்த போது
விண்டனர் தேவ ரெல்லாம் விரிஞ்சனு மாக வேந்துங்
கொண்டலின் வண்ணத் தானுங் குதுகலங் கொண்டு நின்றார். ()

அஞ்சலிர் தேவ ரென்று வணிமணிக் கொடிஞ்சித் திண்டேர்
மஞ்சனு மடுபோர் ஞாட்பின் மனமென வுந்திச் சென்றான்
நஞ்செனக் கொதித்துப் பூதர் நடந்தனர் குமரன் பாங்கர்
வெஞ்சினத் தவுண வீரர் வெகுண்டுடன் வந்து தொக்கார். (௨௭)

ஆர்த்தன பூத வெள்ள மடைந்தன பதாகை வானம்
போர்த்தன திசைக ளோதை பொலிந்தன சமர்செய் சூழ
லார்த்தனர் மலர்கள் விண்ணோர் துளும்பின கடலு மண்ணும்
வேர்த்தன ரமர்த்த வீரர் வேறிருந் தவுணர் தொக்கார். (௨௮)

நெடுமொழி கிளந்து சூழ்வார் வஞ்சினை நிகழ்த்தி நேர்வார்
விடுகணை பாய்ந்து பாய்ந்து மெய்யெலாந் தூணி போல்வார்
படுபிண மிடறிச் சென்று பறந்தலை யுழக்கி வீழ்வா (௨௯)
ரிடுகிய வீரம் வேண்டா ரிருதிறத் தவரு மாதோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார்த்தடந் திணிதோட் பூதத் தலைவர்பல் கவந்த மாட
வார்த்தழன் முளரிபுன் மேய்ந்தாங் கையென நூழி லாடித்
தேர்த்திரண் மிதப்ப நெய்த்தோர் தேங்கியும் போரி னீங்கார்
நீர்ச்செரு [illegible]த பாசி நிலையினைத் தெரித்து நின்றார். (௯௦)

கால்பொர மாத்தி னைந்து கனித்திர ளுதிர்வ தென்ன
மால்பொரத் திகிரி வேய்ந்த மாமுகத் தவுணன் றொல்சீர்
கோல்பொர வவுண வீரர் குருமுடிச் சென்னி வீழச்
சால்பொரு வுற்று வெய்ய தலைவர்க ளுடைந்து போந்தார். (௯௧)

தன்படைத் தொலைவு கண்டு தாரகன் றனிவிற் கோலிக்
கொன்படைச் சரத்தின் மாரி கொண்டலிற் றூர்த்துப் பூதர்
வன்படைத் தலைவர் தம்மை விழிக்குழு னிரித்துச் சென்றே
மின்படைக் குலிசங் கொண்ட மைந்தனை யடைந்தான் மன்னோ.

பண்டைநற் றவத்தின் மாண்பாற் பாயொளி முகமோ ராறுங்
குண்டலங் குலவு காதுங் கொழும்படைக் கரமி ராறுந்
தண்டைகிண் கிணிக ளார்க்குந் தாள்களும் பொலியத் தேரிற்
கண்டன னமலன் றன்னைக் கரையறு தவந்தா னென்னே. (௯௩)

தன்னையு மறியா தன்பு தழைத்தெழக் கண்ணுற் கண்டே
யின்னவ னேயோ [illegible]சன் மகனெனுந் தோன்ற லென்ன
அன்னவ னிவனே யென்ன வமைச்சருங் கூறக் கேட்டு
முன்னவன் முன்னர்த் தேரின் முன்னினன் மொழிய லுற்றான். ()

காரணன் முதலாந் தேவர்க் கல்லது நம்மேற் போர்க்குக்
[illegible]ணி மிடற்றுற் குன்னுங் கடனில்லை மைந்த வீங்குத்
தாரணி படையி னோடுஞ் சார்ந்ததென் னுரைப்பா யென்னப்
பூரண முதலா யுள்ள புண்ணிய னிதனைக் கூறும். (௯௫)

அறவினை புரிந்தே யார்க்கு மருளொடு தண்டஞ் செய்பு
மிறைய வனுது மீச னிமையவர் தம்மை நீங்கள்
சிறையிடை வைத்த தன்மை திருவுளங் கொண்டு நுந்தம்
விறலொடு வன்மை சிந்த விடுத்தன னெம்மை யென்றான். (௯௬)

வரம்பிலா வாற்றன் மைந்தன் வரவினைக் கூறலோடும்
வரம்பிலா வின்ப வள்ளல் வழங்கிய வரத்தின் றன்மை
வரம்பிலா வாண்மை மற்றும் மதித்துமா முகத்துத் தோன்றல்
வரம்பிலாச் சீற்றம் பொங்க மறுத்தெதிர் கூற லுற்றான். (௯௭)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயனார் திகிரி தன்னை மார்பினிற் காண்டி விந்து
போயினா ரன்றி யென்னைப் பொருதவ ரெங்கு மில்லை
யேயின பூதர் தாமும் வீரரு மிறந்தொ ழிந்தார்
ஆயினி யிளையை நீயு மேகென வண்ணல் சொல்[illegible]. (௩௮)

உடுவொளிக் குயர்ந்த திங்க ளுயர்கதிர்ப் பரிதிப் புத்தேள்
விடுமொளிக் குயருங் கொல்லோ விண்டுகைத் திகிரி முன்னாண்
முடுகுபு ததிசி தன்பான் மொய்வலி யிழந்த தோர்வாய்
கொடிவரை யுலகம் பாற்று நமதுவே லுன்பா லாமோ. (௩௯)

என்றலுஞ் சீறி வெய்யோ னிகல்வலித் தோளை நோக்கிக்
குன்றுறழ் சிலையை நோக்கிக் கூற்றமு நடுங்கக் கையாற்
றுன்றிடு முகத்து ரோமந் திரித்தனன் வருடிக் கொண்டு
வன்றிறற் சிலையைக் கோட்டி நாணொலி வழங்கக் கண்டான். (௪௰)

காண்டனு மிளையோன் றானுங் கறுத்தன னவுணன் றன்னை
நீண்டதன் வரிவில் வாங்கி நீளொலி யெழுப்பி விட்டான்
கீண்டன வண்ட மெல்லாங் கிழிந்தன செவிக ளெல்லா
நீண்டவன் முதலா வுள்ளோர் நீடிய வுவகை கொண்டார். (௪௧)

வென்றில னேனும் போரில் விளிகுவ னேனும் வென்றி
யின்றுள னென்று வெய்யோ னெரிகணை தெரிந்தா னந்தோ
வின்றிவன் கொண்ட வெண்ண மென்னகொ லென்று நன்று
துன்றிய விதியைப் புந்தி துரத்துமோ துரத்தா தன்றே. (௪௨)

வன்றிறல் முருகன் றானும் வாளிக டெரிந்து கொண்டான் [ட
குன்றினைத் துணையாக் கொண்டோன் கொடுஞ்சரந் தெரிந்து தொட்
னன்றினர் புரமூன் றட்ட வரன்மகன் வாளி யேவித்
துன்றிடு கணைக ளெல்லாந் துகள்படச் செய்து மேலும். (௪௩)

வென்றிடு வாளி யொன்றால் வரிசிலைத் திண்மை சிந்திக்
கொன்றிடு வரிவில் வேறு கொள்ளுமுன் னூற்றுப் பத்தே
யென்றிடு வாளி யெய்ய வேலவான் விரைந்தா னாகி
யொன்றிடு வாளி யெய்தே யுடனழித் தனந்த மெய்தான். (௪௪)

பாலனுங் கறுத்து வல்லே பகழிக ளிலக்கந் தூவிச்
சாலவே யவற்றைச் சிந்தித் தனுவினுங் கோடி தூர்த்தான்
நீலமர் யாக்கை கொண்டா னெய்தினி யிரண்டு கோடி
நீலமர் கணைக ளேவ வரன்மகன் வாளி செய்து. (௪௫)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பிரன் றுடனே மிக்க கோலமார் கரமுந் தண்டா
வம்பிரண் டெய்து வீழ்த்தி யாயிர மம்பு கொண்டே
பம்புறு கொடியு மெட்டாற் வில்லையும் படுத்தி மேலா
மும்பர்கள் [illegible] வுந்தி யொராயிர மடர்த்தான் வையம். (சசு)

பாய்ந்தனன் பிறிதோர் தேரிற் பாரவில் லேந்தி வாளி
யாய்ந்தனன் வலவன மார்பி லழுத்தலுந் தறுகட் கூற்றைக்
காய்ந்தவன் பெற்ற பாலன் கடுங்கணை நெற்றி யேற்றச்
சாய்ந்தனன் நடந்தேர் மீது தாரக வெய்யோன் றானே. (சஎ)

மன்னவன் மயங்கி வீழ மற்றது கண்டு சேனை
மன்னவர் சினந்து மாலின் மருமகன் மீது சூலங்
கொன்னுறு குலிசந் தண்டங் கோலமார் பிண்டி பால
மென்னுறு படைக ளோடு மீண்டினர் வீசி யார்த்தார். (சஅ)

வில்லுமிழ் கொள்கை போல வேலவன் வாளி பெய்தே
யல்லுமிழ மனத்தர் தம்மை யடர்த்தலு மவுணர் பல்லோர்
மல்லமர் வலியு மற்று மானமும் பிறவு மற்றுச்
சொல்லருந் துன்ப மெய்தச் சோர்ந்தன ரோடிச் சென்றார். (சகூ)

தானவர் பல்லோ ரற்றார் தலைகளுந் தாளு மற்றார்
மானமும் புயமும் தோளு மல்லமர் வலியு மற்றார்
வானவ ரிடுக்கண் டீர்க்க வந்தருள் குமர னுய்த்த
வூனமர் பகழி தன்னா லோடிய துதிர வெள்ளம். (ருo)

இறந்தவர் யாக்கை யோங்க லெனவுயர்ந் திரத்த வெள்ளம்
பறந்தலை யெங்கு மோடிப் பாய்தரு புண்ணீ ராற்றி
லறந்தவிர் களிறறின் கோடா மெனப்பிறழ் பற்பே யாடச்
சிறந்ததன் புடைகள் வீங்கத் தின்றன கழுகும் பாறும். (ருக)

கொண்டனன் வரிவிற் கோட்டிக் குணத்தொனி புரிந்து வாளி
திண்டிறற் றேரின் மேலுந் திறப்படுஞ் சேனை மீது
மண்டிய புரவி மேலு மழையெனச் சிதற வாங்கே
யண்டர்கட் ட[illegible]க் காண னாறுமா முகத்து வள்ளல். (ருஉ)

மழைநிகர் வடிவங் கொண்ட மாமுகன் மைய னீங்கித்
தழைதரு மறிவுங் கொண்டு தனதயல் போற்றி நின்ற
விழைதரும் வீரர்க் காணன் வெறுநிலங் கண்டு நக்கான் [ன்.
குழைதரு முளத்த னமரர் கொள்கைகண் டிரங்கிச் சொல்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவார் சடையா னருஞ் சிவன்மகன் பெரும்போர் செய்தான்
துய்யகோ டிகளி ரண்டுந் துதிக்கையு மிழந்து நின்றேன்
மையறு மெய்தி வீழ்ந்தேன் மாண்டன தானை மு[illegible]
மையவிங் கொருவ னேனே னழுகிதென் னன்மை தானே. (௫௪)

தாவிலாச் சிலைமேற் கொண்டு சமரினில் வெல்ல மாட்டேன்
மேவலா னிவனை வெல்ல வேண்டிடின் மேன்மை மிக்க [ன்
தேவர்தம் படையைக் கொள்வேன் செயவிதன் வேறென் னேவெ
றேவரும் புகழும் வீர னின்னண நினைந்து மன்னோ. (௫௫)

மாலயன் முதலாந் தேவர் மாப்படை வழங்க வன்னான்
பாலகன் பாங்கர்க் கிட்டிப் பண்புடன் பயந்து நின்ற
சீலமில் பதகன் றானுஞ் செருவினில் வெல்ல வேண்டின்
ஆலமர் கடவுள் முன்னா ளளித்தருள் படையைக் கொள்வேன். ( )

என்றவன் படைகைய யேந்தி யேந்தலும் பூசை செய்து
நின்றவன் மீது விட்டான் நிமலன்றன் படையைக் கண்டு
வென்றவேற் கரத்தோன் றானும் வணங்கின னிருகை நீட்ட
வன்றவன் கரத்தில் வந்தே யமர்தலு மதனை யேற்றான். (௫௭)

கையற மவுணர் வேந்தன் கலங்கின னிவனை யின்னே
பொய்யதா மாயை தன்னாற் போரினைப் புரிந்து வெல்வே
னையவிங் கிவனை யென்றே யகத்தினிற் சிந்தை செய்தே [வான்.
யொய்யெனக் குருகுப் பேர்கொள் ளோங்கலை யணுகிச் சொல்

சேயினை மாயை செய்தே சமரினில் வெல்ல வேண்டு
மேயின வாற்றான் மாயை யிழைக்குதி நீயு மென்றே
மாயையி னீர்மை தன்னான் மாமுகன் போர்செய் தாற்றான்
போயினன் பிறிதோ ரண்டம் புண்ணியன் றொடர்ந்து சென்றான்.

சென்றன ரிருவர் தாமுஞ் செருவினை முயன்று செய்தா
னின்றிவர் செய்கை தன்னை யேவரு மறியா தேங்கித்
துன்றிய துயர மென்னுந் தொடுகட லாழு நீரார்
நின்றிலர் பனைத்தா ரந்தோ நெடுங்கடற் றுரும்பு போன்றார். (௬0)

இந்திரன் முதலாந் தேவர் யாவரு மிறையைக் காணா
நொந்தன ரிரங்கி யேங்கி னோன்கழன் மறவா ராகிப்
புந்தியிற் றியானஞ் செய்து பொருவருஞ் சட்டி னோன்பத்
தந்திரஞ் சொன்ன வாறே தகுமுறை செய்தார் மன்னோ. (௬௧)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தனுங் குமர வேளைச் செபிரறத் தியானஞ் செய்தே
யார்த்திகொள் வானோர் யாரு மன்பினாற் பூசை செய்து
கார்த்திகை விரதும் போலக் கந்தவே ளுகந்த சட்டி
நேர்த்திசெ ணென்னைத் தாமும் நோற்றனர் விதியி னூற்றால். ()

பரிசனர் தூப தீபம் பழுதறு மலரே மாலை
யுரியநற் றீர்த்த மானைந் தொழிந்தன பிறவுந் தேடிப்
பெரியதோர் காத லாலே பேணினர் கொடுக்க வாங்கி
யரியயன் மகவான் வானோ ரன்பினாற் பூசை செய்வார். (௬௩)

வெற்பொடு மவுணன் மாய வேலவன் வெற்றி யெய்த
வற்பகங் கொண்டு தம்ப விம்பகும் பத்தில் வானோர்
சொற்படு துலையின் றிங்கட் சுக்கில பக்கந் தன்னில்
முற்பக லாதி யாக மூவிரு வைக னோற்றே. (௬௪)

வேறு.

ஏர்கொண்ட சதுர்மறையின் முழுமுதலாய்ச் சிற்பரமா யிலங்கி யோங்கு, நீர்கொண்ட சடரொளியாய் நிருமலமா யுலகெங்கு நிறைந்து நிற்கும், பேர்கொண்ட பெரும்பொருளாய்ப் பரப்பிரமத் தனிப்பொருளாய்ப் போ னந்தச் சீர்கொண்ட விழுப்பொருளாய் விளங்குமெழிற் சண்முகனே போற்றி போற்றி. (௬௫)

வேறு.

என்றுநீ டன்பிற் போற்றி யிமையவர் வழிபட் டேத்த
நன்றுள மகிழ்ந்து செவ்வே ளுதனு மருள வெண்ணித்
துன்றிய தோகை மீது தோன்றின னிற்பக் கண்டே
யொன்றிய வானோ ரன்னா னெண்மலர்ப் பாதம் போற்ற. (௬௬)

கற்பத்தில் விதித்த வாறே காமரு மனுவை நீவிர்
பொற்புற வெடுத்த ரூழ்த்த னலிதலாப் புகலு கின்ற
சொற்படி யிருமூன் றகத் தொடர்தினஞ் சட்டி நோன்பை
யற்புடன் புரிந்திர் பூசை யதற்கியா மகிழ்ச்சி கொண்டோம்.(௬௭)

வேண்டிய வரந்தா னென்னை விரும்பிய வாற ளிப்போ
மூண்டெழு மன்பாற் போற்று முதியவா னவரே யென்ன
வீண்டுள கொடிய னூன தாரக விறைவன் றன்னை
மாண்டிடச் செற்றே யெங்கள் மன்னுயிர் காக்க வென்றார்.(௬௮)

என்றுள நொந்து வேண்ட வெம்பிரா னிரக்கங் கொண்டு
நன்றுநீர் வருந்தல் வேண்டா நடுநிலை நில்லா தானை
யின்றுநாஞ் சமரிற் கொல்வோ மிங்கினி யஞ்ச வேண்டா
மென்றன னருளிச் செய்தே யிறைவனு மறைந்து போனான். ()

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தவே ளிந்த வாறு காட்சிதான் கொடுத்துச் செல்ல
வந்துள துன்ப நீங்கி வானவர் மகிழ்ச்சி கொண்டே
யந்தமி லவுணர் யாரு மழிந்தன ரினியென் றெண்ணிச்
சிந்தையிற் செவ்வேள் பாதஞ் சிந்தனை செய்திருந்தார். (௭௦)

புறத்தினி லிருந்த வண்டம் புகுந்திடு மவுணன் றானுங்
கறுத்தனன் சமரி ழைக்கக் கடவுளுந் தொடர்ந்து சென்றே
யறத்துறை விளக்க வேண்டி யமர்புரிந் திவனைக் கொல்லுந்
திறத்தினைக் கருதி நிற்பத் தீயனு மீண்டு வந்தான்.. (௭௧)

இவ்வகை யவுணன் றானு மெய்தினன் குருகுப் பேர்கொள்
கைவரு மலையைக் கூடிக் காண்டரு மாயை யாலே
தெவ்வடு சமர பூமி சேர்ந்தனன் றிரிய வானோர்
கவ்வையை யகற்ற வேண்டிக் கந்தவேள் மனத்திற் கொண்டு. ()

கையுறு மிவனை யின்னே கொல்வது கடனு மென்று
கைவரு வேலை நோக்கிக் கழறுவன் றூய னல்லாப்
பொய்வரு மவுணன் றன்னைப் போர்செயத் துணையாம் வெற்பை
யொய்யென வட்டு வீர ரோடிவண் வருகென் றுய்த்தான். (௭௩)

சேயவன் விடுத்த கூர்வேல் செருமுய லவுணன் செய்யு
மாயையின் புணர்ப்பை நீக்கித் தாரகன் மார்பை யீர்ந்து
மீயுயர் கிரௌஞ்ச வெற்பை வீட்டியவ் வீர ரோடுந்
தூயநீர்க் கங்கை தோய்ந்து துண்ணென மீண்ட தன்றே. (௭௪)

விட்டுள வைவேல் வந்து விமலனார் கரத்திற் றங்கத்
திட்டனு மவுண னேனோன் றொலைந்தது மவுண ரானோர்
கெட்டது நோக்கி மாலுங் கேடிலா மலரோன் றானு
முட்டறு மகவா னாதி மேலவர் தாம கிழ்ந்தார். (௭௫)

ஆடினர் குமரற் போற்றி யங்கைக ளுச்சி மீது
சூடினர் பூவின் மாரி தூர்த்தனர் துதியுஞ் செய்தார்
பாடின ரவனைச் சூழ்ந்து பன்முறை பணிந்து நின்றார்
கூடின ருவகை யென்னுங் குரைகட லாழு நீரார். (௭௬)

மாயமிவெற் பழிய வாங்கண் மயங்கினர் கிடந்த வீரர்
தூயநல் லறிவு தோன்றித் துயின்றெழு வார்போற் சென்று
சேயவன் பாங்கர்க் கிட்டிச் சேவடி துதித்து நின்று
சாயிடை யிறந்த பூதர் செழுகென வெழுந்து சூழ்ந்தார். (௭௭)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரக வசுரன் றன்னைத் தருவரை யோடு செவ்வேள்
போரினின் மாள வேலைற் படுத்தமை புகன்றா மன்னான்
காரினை வென்ற மேனிக் கண்ணனை முதலோர் போற்றப்
பாரினி னடந்து சென்ற பண்பினை விளக்கச் சொல்வோம்.(எஅ)

தாரகன்வதைப்படலமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 268.

## வழிநடைப்படலம்.

சங்கரன் புதல்வா போற்றி தாரகற் செற்றாய் போற்றி
பங்கயன் முதலாந் தேவர் பணிகின்ற பரமா போற்றி
யங்கவ ரிடரை நீக்கி யாண்டரு ளிறைவா போற்றி
துங்கவேற் படையாய் போற்றி சூரனைக் கறுப்பாய் போற்றி. (க)

செருநில மகன்று செவ்வேள் சேனையோ டிலக்கர் சூழ
மருவிய வொன்பான் வீரர் வானவர் பிறரும் போற்றத்
திருநெடு மிமய மென்னுந் தொல்வரை கடந்து மேல்பா
லிரவியி னிரவி செல்ல விமையவர் சைலஞ் சேர்ந்தான். (உ)

ஒப்பறு சூரன் பின்னை யொருபெரு வேலாற் பட்டா
னிப்புவி யதனில் வாழும் யாவரு முணர்வ ரின்னே
யப்புவி யதனில் வாழ்வா ரறிந்திட யானே சென்று
செப்புவ னென்பான் போலச் செங்கதிர் மறைந்து போனான்.(ந)

தன்னிக ரில்லா மன்னர் மன்னனைத் தகைந்து கொன்ற
தன்னிக ரில்லாச் சூர்வே றனிக்கரங் கொண்ட மேன்மைத்
தன்னிக ரில்லா வென்றித் தனிமகன் கொண்ட விந்தை
தன்னிக ரில்லா னாகித் தோன்றுதல் போலுஞ் செக்கர். (ச)

விண்ணவர் சேனை நாதன் விளங்கிசை மகளே போல
விண்ணமேல் யாங்கும் பூத்து விளங்கின வுடுவின் பொம்மல்
வண்ணவொண் குமுத மெல்லா மலர்ந்தது மாலை தன்னில்
விண்மக ளுதலைப் போல விளங்கும்வெண் பிறையின் றுண்டம்()

அல்லிது வந்த காலை யாரமா மாலை யென்னக்
கல்லென வருவி தூங்குங் கடவுள்வெற் பொருசா ரெய்திப்
பல்லிமை யோரு மாலும் பண்ணவர் தலைவன் வேதன்
எல்லவர் தாழ்ந்து செவ்வே ளிறைபத மிறைஞ்சிச் சொல்வார்.(சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பெரும் பகையை நீக்கி யெங்குடி வாழச் செய்த
வம்பக மிராறு கொண்ட வண்ணலே யாங்க ணின்றன்
செம்மல ரடிக டம்மைச் சேவித்துப் பூசை செய்ய
விம்மலை யகத்து நீதா னிருந்தரு ளிறைவ வென்றார். (எ)

என்றனர் தேவ ரெல்லா மிரந்தனர் தாழ்ந்து வேண்ட
வின்றுநீர் கேட்ட வெல்லா மீங்கியா மளித்தோ மென்றான்
நின்றுள வான நாடர் நெடிதுள மகிழ நாத
னென்றுகேள் புனிவா வென்ன வுரைத்திடு கின்று னன்றே. (அ)

கம்மியர் தலைவா வேதன் கண்ணனே முதலாந் தேவர்
நம்முறு துணைவர் யாரு நாமுமீங் கிருக்கு மாறு
செம்மைய தாகு மீங்கே செழுநக ரொன்று செய்வா
யம்மவென் றருள வன்னா னதுபணி புரிவே னென்றான். (கூ)

ஆழ்ந்தபே ரறிவ னாகி யருமைகொள் சிற்பம் வல்லோன்
றாழ்ந்தபே ரன்ப னாகிச் சண்முகன் பாதம் போற்றி
வாழ்ந்தன னினியா னென்பான் வளநகர் வகுப்ப வெண்ணி
வீழ்ந்துபன் முறைதாழ்ந் தானு விடைதனைப் பெற்றான் மன்னே.

கொடியயின் றுலவி வானிற் கோபுரங் குலவி யோங்கக்
கடிமதில் மூன்று சூழ்ந்து கவின்கொளு நகர மொன்றைப்
படிதனி லிலாத பான்மை பொருந்துற வகுத்துச் செய்தான்
கொடிதனிற் புலவர் போற்று நூலறி வதனான் மன்னே. (கக)

நல்லவர் தொழுது போற்று நந்தியின் கணங்க ளான
மல்லம ருழுத வீர வாகுவை முதலாம் வீர
ரெல்லவர் தமக்கும் பீட மிந்திர னிருக்கும் பீடம்
பல்லிமை யவர்க்கும் பீடம் பாங்குட னமைத்தா னங்கண். (கஉ)

இந்திரை கணவ னான விறையவ னமரும் பீட
மந்திர மறைக டேர்ந்த மறையவ னிருக்கும் பீடஞ்
சுந்தர மணியாற் பொன்னாற் றுகளற வியற்றிச் சிற்ப
தந்திர நவிலு மாறு புரிந்தனன் றனையே யொப்பான். (கங)

அன்னமால் வரையின் மேலா யிரங்கதி ருதித்தா லென்னப்
பன்னுறு மதிலைச் சூழ்ந்து பருமணி பதித்துச் செய்த
பொன்னவாங் கோயி லொன்றைப் புண்ணிய னிருக்கு மாறு
நன்னயம் பெறவே செய்து நாப்பணோர் பீடஞ் செய்தான். (கச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனையவும் பிறவு மாங்க ணெழிலுற வமைத்தா னாக
முனைகெழு வேலோன் றானு மொய்யமர்த் தானை யோடுங்
கனைகழல் வீர ரோடுங் கடவுளர் பிறருஞ் சூழ
வனைதரு நகரின் கண்ணே வானவர் வாழச் சென்றான். (௧௫)

அறுமுகங் கொண்ட செவ்வே ளாயிடைப் புகுந்து சென்றே
யிறுதியி லிருக்கை தோறு மிருங்கழற் சேனை தன்னை
நிறுவினன் றானு மந்த நிகேதன மதனிற் சென்று
விறலரி சுமந்த பீடம் வீற்றிருந் தருளி னானே. (௧௬)

மன்னவீர் முன்னோ னான முனைவனு மணிகொள் பீட
மன்னிவீற் றிருந்த போது மாலயன் முதலாம் விண்ணோர்
மின்னுவேற் கடவு டன்னை விதிவழு வாத வாற்றாற்
பின்னிய வன்பி னாலே பூசிக்கு மெண்ணங் கொண்டார். (௧௭)

வானவர் தூய கங்கை மணமுறு மலரே யன்னங்
கானமர் தூப தீபங் கந்தமும் பிறவுந் தேடித்
தானவர் தலைவ னான தாரகற் றடிந்த கோவை
மானவேற் குகனை யன்பார் மனத்தொடு பூசை செய்து. (௧௮)

மேருவின் சிகர மாகி விளங்குகே தீசந் தன்னி
ஓருமெய்ப் பிர[illegible]ட்கு முணர்த்துமோர் மனுவி னுண்மை
பாரினைப் படைப்போன் றேறப் பகர்ந்தருள் குருவே போற்றி
கூருறு நெடுவேல் கொண்ட குமரனே போற்றி போற்றி. (௧௯)

எனத்துதித் தின்ப வாரி யிடையுறீஇச் சொரூப ஞானத்
தனிப்பெருஞ் சோதி பாத தாமரை பணிந்து போற்றிப்
பனித்துள கண்ணீர் வெள்ளம் பாய்தரப் புளகந் தோன்றக்
குனித்தருள் கமல பாதங் கூடிய மனத்த ரானார். (௨௦)

தேவர்கள் புரிந்த பூசை செவ்விதி னேற்றுக் கீழ்பா
லேவரு மகிழ ஞாயி றெழுதலும் புலவ ரோடு
தேவர்க டேவ னந்தத் தெய்வமால் வரையி னீங்கித்
தாவிலாத் தலங்கள் சேர்ந்த தென்றிசை நோக்கி வந்தான். (௨௧)

கன்னிகை பூசை செய்த கேதாரம் வாரா ணசி
பன்னிய வேதம் பாடும் பருப்பதந் திருக்கா ளத்தி
கன்னியை வென்ற வாலங் காட்டுடன் கருது காஞ்சி
துன்னிய வருணை தில்லைத் தொல்பதி விருத்த சைலம். (௨௨)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமலைத் தலமு மேலாம் பரவெளித் தலமுங் கண்டு
கழைவளர் பழன நீடுங் காவிரி நதியின் பாங்கர்க்
குழைவளர் மண்ணி யாற்றின் குளிர்கரை யமர்ந்தான் செவ்வே
டழைகதிர் வெய்யோன் றானுந் தன்கதிர் மறைத்துச் சென்றான்.

இரவவ ணிருந்து மேலா மிறைவனைப் பூசை செய்து
பரவவன் படையும் பெற்றுப் பரனுறை பதிகள் கண்டு
விரவிய சேனை யோடு வெஞ்சுரங் கடந்து சென்று
வரமலி செந்தூர் மேவி வதிந்தனன் குமர வள்ளல். (உச)

அறுமுகங் கொண்ட செவ்வே ளாயிடைக் கோயி லொன்றை
யிறையினிற் செய்க வென்றே யேவலுஞ் சிந்தை நாடித்
திறனுணர் புனைவர் செம்மல் சினகர மொன்று செய்ய
நிறைபெருந் தானை யோடு நீடிய துணைவர் நண்ண. (உரு)

மன்னவர் மலரோன் மாயன் மகபதி யாரும் போற்றப்
பொன்னணி யிரத நீங்கிப் புவியிற்பா துகையின் மீது
பொன்னடி வைத்துச் சென்று புண்ணியக் கோயில் சார்ந்து
பொன்னரி யணையின் மீது பொலிவுற வீற்றி ருந்தான். (உசு)

செந்திமா நகரிற் செவ்வேள் சூர்முத லவுணர் செய்கை
புந்தியிற் பெரிய ஞன பொன்னவன் புகலக் கேட்டு
வெந்திறற் சூரன் பாங்கர் வாகுவைத் தூது விட்டு
வந்தவ னியம்ப வோர்ந்து வழிப்படா நிலைமை தேர்ந்து. (உஎ)

இரவி வந்துதித்த காலை யிலங்கையின் றென்பா லான
தரம்பெறு சூரன் வைகு மகேந்திரஞ் செல்ல வெண்ணி
யரியயன் மகவான் றேவ ரானவர் பிறருங் கேட்ப
வரம்பெறு சிறப்பின் வீர வாகுவை நோக்கிச் சொல்வான். ()

வெந்திறற் சூர னென்பான் வேருட னழிந்து மாய
விந்திர னயனமால் விண்ணோர் யாவரு மிடும்பை நீங்க
வந்தமி லவுணர் வைகு மகேந்திர மடைவோ மின்னே
யந்திரம் பூண்ட தேரை யீண்டுநீ கொணர்க வென்றான். (உகூ)

அன்னதைக் கேட்ட தேவ ரானந்தங் கொண்டே யார்த்தா
ரன்னலங் கடலி னீந்தி யேறினங் கரைமே லென்று
பொன்னனு நந்தி பாங்க ரிசைத்திடு தலைமை வாய்ந்தோன்
மின்னிய பொற்றேர் தன்னை விரைவினிற் குகன்மு னுய்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுறு பொற்றேர் மீதி லீரிரு முகத்த னேறித்
தன்னயல் சூழ்ந்த வானோர் தமக்கெலா நீவிர் யாரும்
பன்னிய வூர்தி யேறிப் போங்கரில் வருக வென்று
னன்னது புரிவா மென்றே யகமகிழ்ந் துரைத்தார் மன்னோ. (௩௧)

பங்கயக் கண்ணன் றானும் படர்சிறைக் கருடன் மேலும்
பங்கய மலரில் வாழும் பண்ணவ னெகின மீதும்
புங்கவ ரெவருந் தங்கள் பொலிவுறு மூர்தி மீது
மெங்கட மிர ரெண்ம ரிலக்கரு மிவர்ந்தார் தேரில். (௩௨)

இங்கிவர் பூத வெள்ளத் திறையவ ரொருநூற் றெண்மர்
பொங்குவெஞ் சினத்த ரெல்லாப் புவனமு மட்ட வீர
ரங்கொரு நொடியி லாறு முகவனைச் சூழ்ந்து கொண்டார்
பொங்கிய பூத வெள்ளம் புடைதனி லெழுந்து சூழ்ந்த. (௩௩)

கல்லென வொலிக்கும் பேரி காடிகை துடியே காளஞ்
சல்லரி திமிலை தக்கை தண்ணுமை படகங் கோடு
வல்லிய லுடுக்கை சங்கம் வான்குட முழவ மாதிப்
பல்லிய மனந்த கோடி பாரிட மியம்பிச் சென்ற. (௩௪)

இவ்வகை யயில்வே லண்ணல் யாவரும் புடையிற் சூழ்ந்து
கவ்வையி னமைந்து செல்லக் கனைகடல் வரைப்பி னேகி
வெவ்வம தடைந்த தொல்லை யிலங்கையங் குவடு நீங்கி
மைவரை புரைசூர் மேவு மகேந்திர புரமுன் போந்தான். (௩௫)

போந்திடு காலை தன்னிற் பொன்னுல கதற்கு மேலாய்
வாய்ந்திடு புரமாம் வீர மகேந்திரந் தெரிவ தாக
வேய்ந்திடு கடப்ப மாலை விமலமுன் றெரியு மாறே
காய்ந்திடு மவுணர் வாழுங் கடிநகர் காண்டி யென்றார். (௩௬)

மாண்டவங் நகரந் தன்னின் மன்னுதன் முறைமை யன்று
மீண்டுபா சறையொன் றாக்கி யிருந்தபின் சூரற் காய
வேண்டுமா புரிக வென்றார் விண்ணவ ரானோ ரெல்லா
மாண்டரு ளுதன் றானு மவர்மொழிக் கிசைந்தா னன்றே. (௩௭)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிகமழ் மாணிக் கப்பேர்க் கங்கையின் கரைய தாகக்
கடிகொளு நகர மொன்றைக் கவினுற வியற்று கென்ன
வடியனே னமைப்ப னென்றே யாயிடை விசுவத் தச்சன்
கொடிதனி லேம கூட மென்னுமோர் நகரஞ் செய்தான். (ந௯)

கருத்தினல் விசுவத் தச்சன் கட்டுபா சறையாம் வீட்டை
யருத்தியான் மகிழ்ந்து காணூஉ வாரருள் புரிந்து பின்னர்க்
கருத்தனுஞ் செவ்வே டானுங் கவினுறு தேரி னீங்கி
யிருத்தினன் பூதர் தம்மை யாவண விருக்கை தோறும். (நக)

சந்தனத் திழிந்த சாமி தனிவீர ரயலிற் சூழச்
செந்திரு வமர்ந்த மார்பன் றிசைமுகன் முதலோர் போற்றச்
சந்தனப் புயத்து வீரன் றம்பியர் பிறரு நண்ண
மந்திர மடைந்து மேலாம் விறலரி யணைமே லானன். (ச0)

இத்தகு பாடி வீடா மெழிற்பதி மனிதர்க் கெல்லாஞ்
சித்தியை யளித்து மேலாஞ் சிவகதி யளிக்கும் பார்மே
லித்திருக் கதிரை போல விணையுறுந் தலம்வே றில்லை
நித்திய மெவர்க்கு மாங்கே நினைந்தவை கிடைக்கு மன்றே. (சக)

தாரகற் றடிந்த வேலோன் றனிவழி நடந்து பார்மேற்
காரகத் தவுணர்க் காயக் கதிர்காம நதியின் பாங்கர்ப்
பாரகந் தொழுது வாழ்த்தப் பாசறை யிருத்தல் சொன்னேங்
கூரக வேலாற் சூரன் கூறுபட் டதைமேற் சொல்வாம். (சஉ)

வழிநடைப்படல முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 309.

---

## சூரபன்மன் வதைப்படலம்.

ஆயிரத்தின் மேலுமிரு நாலண்ட மரசாண்ட வவுணர் கோனைக், காயிருவேல் கொடுதடிந்து கற்பகநாட் டொடிமயிரா வணமு நீடு, வேயிருதோ ளயிராணி சுகமுமொரு சததோடி விளங்கு செங்கைத், தூயவன்பெற் றிடச்செய்த தோன்றலெழின் மலரடியைத் துதித்தல் செய்வாம். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு.

உலகெலாந் தனிக்கோ லோங்க வொருகுடை நிழலைச் செய்ய
வலகிலா வாற்றல் பெற்ற வவுணர்கோன் சூர னென்பான்
மலர்புக டழைத்தே யார்க்கு மேலென விளங்கு நாளிற்
குலவிய வேலோ னேம கூடத்தி லிருப்ப தோர்ந்தான். (௨)

ஆலமே யமுதா வுண்டோ னருளினாற் றேவர் தம்மைப்
பாலனஞ் செய்ய வெண்ணிப் பாலனை விடுத்த வாறும்
ஞாலமேல் விளங்கி மேலா மாணிக்க நதியின் மாடே
வேலவ னனிக வெள்ள மாயிரத் திரட்டி மேவ. (௩)

மலரயன் மகவான் மாயன் மற்றுள வானோர் போற்றப்
பலர்புகழ் வீர வாகுப் பெயரினன் முதலோர் சூழப்
புலவர்கள் சேனை நாதன் பாசறை யிருந்த வாறும்
புலனுணர் வீணைச் செல்வன் புகன்றிட வுணர்ந்தா னன்றே. (௪)

வெற்றிகொ ணெடுவே லண்ணல் வீறுட னணிய தன்மை
யொற்றரிற் சில்லோர் காணா வோடின ரொல்லை சென்று
கொற்றவற் பணிந்து நின்று கூறலு மதனைக் கேளா
மற்றவன் றானும் வல்லை மந்திர மிருப்ப வெண்ணி. (௫)

வேறு.

மண்ணுற முரசின மழையி னார்ப்புறக்
கண்ணுறு கவரியின் கற்றை சுற்றுற
வெண்ணுறு சூழ்ச்சியி னிருக்கை யெய்தினான்
விண்ணுறு சுரர்களும் வீழு மாற்றலான். (௬)

அற்றமில் கேள்விசா லமைச்சர் மைந்தர்கள்
செற்றமி லிளையவன் சேனை மன்னர்கள்
கற்றவர் வருகெனக் கடிதில் வந்தனர்
மற்றவர் தமக்கெலா மரபிற் கூறுவான். (௭)

வேறு.

சிறப்பினை யெமக்கே யீந்த செஞ்சடை யமலன் மைந்தன்
செறப்படா மலையை யென்றன் றாரக விளவ றன்னைப்
பறந்தலைப் பழித்தா னென்னாற் படுசிறைச் சுரரை நீக்க
விறலுடைத் தூதன் றன்னை விடுத்தன னென்பான் மன்னோ. (௮)

கோதைவேற் கரத்தோ னாளைக் கூளிவெம் படையி னோடு
மோதிய கடலைத் தாண்டி மொய்ம்புடன் வருவ னீங்கே
யாதினிச் செய்தல் வேண்டு மிசைமினீர் மதியி னாய்ந்தே
யோதிய கேள்வி யோரு மெண்ணியோர் கருமஞ் செய்வார். (௯)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுக்குடித் தாரைப் போல வரதனம் படையை மாய்ச்
செதுக்குவ னென்பர் சில்லோர் சிறுவனை யவுண வீர
ரதுக்குவ ரென்பர் சில்லோ ரவனுட னீபோர் செய்யார் [பார்
பதுக்கையை யழல்மேய்ந் தென்னப் பாற்றுவென் யானே யென்

தத்தம மனத்தி னுள்ளே தோற்றியாங் குரைப்பார் தம்மைக்
கைத்தலந் தன்னு னீக்கிக் காழ்படு சினத்த னாகி
யொத்தவா றெல்லா மோதி னுறுபய னென்னை கண்டா
யத்தநீ கேட்க வென்பா னரிமுகங் கொண்ட செம்மல். (௧௧)

சிறுவன்றன் விருப்பந் தேவர் சிறைவிட லதனைச் செய்தா
லுறுமிட ரொன்று நம்மா லொன்றுவ தில்லை கண்டாய்
சிறுவன்வச் சிரனு மேனைத் தானவர் சில்லோர் தாமு
மிறந்ததற் கரிசேய் வானோ ரிருந்தனர் சிறையி லிந்நாள். (௧௨)

குமைத்திடும் வலியா லாவிக் குழுவினு ளேவர் தாமு
நமக்குமே யில்லை மேலா நாதனே மழுவாய் வந்தா
னமைக்கொளு மவன்கை வேலே யென்பது துணிவே யாகு
முமைக்கொரு நாதன் சேயென் றிருவரு மொருவ ரேயாம். (௧௩)

வளமொடு வாழ்க்கை வீர மைந்தர்கள் பிறவும் வேண்டின்
றளையினை யகற்று விண்ணோர் தங்களை யன்றே லின்னே
யொளிறுகைப் படையி னோடு மொய்யெனச் செல்க வென்றான்
விளிகின்ற வூழி னாலே வேறெதிர் மொழிவான் சூரன். (௧௪)

சிறையினை விடவு மாட்டேன் சிறுவனும் பாம னல்லன்
பிறர்தமக் கில்லா வாண்மை பெற்றன்றோ சிறையில் வைத்தேன்
பிறர்தமக் கிருக்கு மாணுற் பெருஞ்சமர் செய்து மீட்பர்
விறலினர்க் குரிய தன்றோ வியன்பெரு ஞாலந் தானும். (௧௫)

பாலனைப் பரம னென்று பேசினை யறிந்தார் போலக்
காலழ னீரால் வாடிக் கார்த்திகை முலைப்பா லுண்ட
சீலனோ பரம னவான் றெளிந்தமை நன்றே யென்றான்
ஞாலமே லவுண ராவார் நல்வினை யொழிந்தா ரன்றே. (௧௬)

கருவியி ருருமை யானுங் காலழ லொன்பான் மேனி
மருவுத லானு நோற்ற மாதர்பா லுண்ட லானுந்
திருமகன் பரனே யாவன் றெரிந்திலை மாயை தன்னை
மருவிய நம்மை யெல்லா மருவிடா வவனே வெல்வான். (௧௭)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிழ்தினை நஞ்ச மென்றா பருகினு மின்பே யாக்குங்
குமரனைப் புகைவ னென்றே கொள்ளினும் பெரும்பே றெய்து
மமல[illegible]ய வடிவங் காண வவனுரை கேட்க ஞான
விழிமினைச் வேலாற் பொன்ற வெத்தவஞ் செய்தோ மென்றான்.()

என்றது மினவற் சீறி யிமையவர் நண்பைக் கொண்டாய்
தன்றுபோர்க் கஞ்சு கின்றாய் தாத்தவஞ் செய்யப் போவாய்
கொன்றுவன் பூதர் தம்மைக் குமரனை வெல்வே னென்றான்
ஒன்றுநன் முதன்மை யொன்றே மதித்தனன் சூர னென்பான்.()

அரிமுகன் சூர னென்ன மறிந்தழி வெய்துங் காலைப்
பெரிதுநன் மறுத்தி னும் பெட்புடன் கொள்ளார் பீடு
விரிதரு காலைத் தாமே வினைவறிந் தொழுகு வாரென்
றுரிமையி னிறைஞ்சிப் போர்செய்துடற்றுவல்பெருமவென்றான்.

தம்பியை மகிழ்ந்து புல்லித் தனிநகர் சேறி யீங்கு
வம்பலன் புகுந்தா னயின் வருகென விடுத்திட் டாங்குப்
பம்பினர் தமையும் போக்கிப் பரிவொடு மிருந்தான் வல்லை
வெம்புபோர் மூட்டு வான்போல் வெங்கதி ருதித்தான் மன்னே ()

மந்திர மிருந்து சூரன் மனமதிற் றெளிந்த வாறு
தந்திரத் தொகுதி சூழச் சாருதி சமரில் வெல்க
கந்தனை யென்று கூறக் கடுந்திறற் டானு கோபன்
வந்தனை செய்து தந்தை மலரடி விடையும் பெற்றான். (உஉ)

அடிகழ லரல வீக்கி யணிவிரற் புட்டில் சேர்த்தி
யிடைதனிற் கச்சு வீக்கிச் சாலிகை யிட்டு மெய்யில்
வடிநெடும் படைக ளேந்தி வார்நிறை தூணி தூக்கிப்
படுமணி யிரதம் புக்கான் பல்லியத் தொழுதி யார்ப்ப. (உ௩)

தேர்மிசை யிவர்ந்து கோபன் சேனைகள் புறத்திற் சூழ
வேர்கெழு மெந்தை கந்த னிருப்பிடஞ் சார்ந்து மேலாந்
தார்கெழு வீர வாகு முதலிய திறலோ ரோடும்
பேர்கெழு பூத ரோடும் பெருஞ்சமர் புரிந்தா னன்றே. (உ௪)

அங்கிருஞ் சமரிற் றானை மடிந்திட வவனும் வீந்தா
னந்நிலை யறிந்து சூர னமைச்சர்கள் புதல்வ ரேனைக்
காயிருஞ் சேனை காப்போர் தமையெலாங் கடிதின் விட்டா
னுயவர் யாரும் போரி லாற்றல ருயிர்து றந்தார். (உ௫)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னணம் இளைஞர் யாரு மிறந்தன ரொழியக் கண்டு
மன்னவர் மன்னன் மாழ்கி வடதிசை நகரில் வாழ்வோன் [டான்
சென்னியா யிரங்கொண் டுள்ளான் சிறப்பெலாந் தனக்கே கொண்
றன்னுறு துணைவ னான சீயமா முகனைச் சொல்வான். (௨௬)

அன்றனை விடுத்த பின்ன ரயிலுடைக் குலிசந் தன்னாற்
குன்றினை யெறிந்த பாலன் கொடுஞ்சமர்ச் சேனை செய்த
வன்றிறற் போருக் காற்றார் மக்களு மிறந்து போனார்
சென்றனன் றரும கோபன் றென்றிசை நோக்கி மன்னே. (௨௭)

அற்றன சேனை வெள்ள மாடகன் கடலிற் புக்கான்
மற்றினிச் செய்ய லாகு மரபினை யியம்பக் கேணீ
பெற்றுள படைக ளோடும் பெருஞ்சமர் விரைவிற் செய்து
மற்றவன் வலிமை சிந்தி மீளுதி யிண்டை யென்றான். (௨௮)

எஞ்சலில் சூர பன்ம னினையன புகலக் கேட்டு
வெஞ்சினங் கொண்டு சிங்க வீரனு மிளவ ரூனு
நெஞ்சினி லடங்காத் துன்ப நிகழ்தரத் தமையற் போற்றிச்
செஞ்சரண் வீழ்ந்து நின்று செப்புவ னிதனை யன்றே. (௨௯)

மல்லலம் புயத்த ரான மைந்தரை யமைச்சர் தம்மை
யெல்லையில் சுற்றத் தாரை யிகலுறு சேனை நாத
ரெல்லவர் தமையு மையோ விழந்தனை யிருந்தா யுன்றன்
புல்லிய நினைவு தானும் போக்கிய தெங்கள் வாழ்வை. (௩௦)

மூலமு முடிவு மில்லா முழுமுதற் கடவு டன்னைப்
பாலனென் றிகழ்ந்து கெட்டாய் பகரவுங் கேட்டா யல்லை
யாலமென் றுரைத்தா லையயா வதன்பய னுடனே கண்டாய்
மேலையின் விதியை யாரே வென்றவர் நீயு மற்றே. (௩௧)

கொன்றிடு சமர பூமி குறுகுவன் பகைஞ ராகி
நின்றிடு வீரர் தம்மை நுங்குவ னீயுங் காண்டி
யென்றனன் போரின் கோல மெழிலுறப் புனைந்து நான்காய்த்
துன்றிடு மிரதம் வாசி துதிக்கைம்மா பதாதி சூழ்ந்து. (௩௨)

ஏழெனுங் கடலு மொன்றா யெழுந்தெனத் தொடர்ந்து செல்லப்
பாழிய வமரை முன்னிப் படர்ந்தனன் சீய னென்பான்
வாழிய வீர வாகு வேலிறை விடையைப் பெற்றே
யாழியை நிகருஞ் சேனை யாயிர வெள்ளஞ் சூழ. (௩௩)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறந்தலை யனடந்தான் சீயன் படைகளும் வந்து சேர்ந்த
வெறிந்தன வியங்கள் சேனை யீண்டிய வதிர்ந்த பேரி
நிறைந்தன சங்க நாத நீடிய் பதாகை யார்த்த
வறந்தனை வளர்க்கும் வீர னுபிடைச் சமர்கு றித்தான். (௩௪)

தண்டமுங் கணிச்சி தானுந் தனித்தனி தெரிந்து விட்டார்
பிண்டிபா லங்கள் வீசிப் பெரியதோர் மழுவும் விட்டார்
கொண்டலா மென்ன நீண்ட கொடுமரங் குனித்துக் கோடி
துண்டவெங் கணைகள் பெய்தார் தானவத் தொகையோ ரம்மா. ()

தருக்குலம் பிடுங்கி வீசித் தாராதரந் தூக்கி வீசி
வெருக்கொள வெழுவே தண்டம் வீசினர் மழுவும் விட்டா
ருருக்கியல் கணிச்சி வீசி யுடன்றனர் பெரும்போர் செய்தார்
செருக்கொலி செய்து பூத சேனையின் வீர ரானோர். (௩௬)

வரங்களும் வலிமை தானும் வயம்புனை புயங்க டாமுங்
கரங்களுங் கால்க ளோடு கடுந்திற லுரமுஞ் சிந்திச்
சிரங்களு முடியு மெல்லாஞ் சிந்தின ரவுண ரானோ
ருரங்கொளும் பூதர் சில்லோ ரோய்ந்தனர் வலிமை சிந்தி. (௩௭)

பூதர்க ளிரிவு நோக்கிப் பொருதிற லிலக்கத் தெட்டு
மேதகு வீரர் யாரும் வெய்யதேர் கடவிச் சென்று
தீதறு சிலைகள் வாங்கிச் சரமழை பொழித லுற்றார்
தாதவிழ் மலர்கள் போலச் சீயன்பால் விழுந்த வன்றே. (௩௮)

ஓங்கிய வீர மொய்ம்ப னுயர்கணை யனந்த கோடி
தூங்கலின் மழைகாண் டென்ன வுலப்புறுன் சொரிந்து நிற்ப
வாங்கெதி ரடர்த்துப் போர்செய் யவுணர்தந் தலைகள் பாறத்
தாங்கிய படைகள் சிந்தித் தரைமிசைத் துணித்து வீழ்த்தார். ()

பரிந்தொகை முழுதும் பட்ட பாழியந் தேர்கள் பட்ட
வொருக்கலும் பிடியும் பட்ட வுலப்பிலா வவுணர் பட்டார்
பெருத்தன பிணத்தின் குன்றம் பிறங்கின பேய்கண் மொய்த்த
திரைத்தெழு சோரி நீத்தந் தெண்டிரை யடுத்த தம்மா. (௪0)

கிட்டினன் பட்ட பாட்டைக் கண்டன னவுணர் வேந்த
னட்டிடு கின்ற வீர னருந்திற லிலக்க வெண்மர்
மட்டறு பூதர் தம்மை மாயையின் கயிற்றுற் கட்டி
விட்டொளி ருதய மென்னும் வெற்பினி லிருக்க வுய்த்தா. (௪௧)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரு கரத்து வள்ளல் பாங்கரிற் கிட்டி வெம்போர்
பண்ணரு மாயை யாலே பற்பல வகையாற் செய்து
துன்னரும் பூதர் தம்மைத் தொகைப்பட வாரி நுங்க
வன்னதைக் கண்ட செவ்வே ளருஞ்சிலை வளைத்தான் மன்னோ. ()

வெங்கணை பொழிந்து வேலோன் விறலுடை யவுணன் கொண்ட
செங்கரந் துணித்து வீழ்த்தத் திகழ்ந்தன முளைத்து முன்போ
லங்கது கண்டு செவ்வே ளாயிரங் கணைக ளேவிச்
சிங்கனுந் திறலோன் கொண்ட சிரமெலாந் துணித்து வீழ்த்தான்.

ஆயிரத் தின்மே லெட்டு முறையவன் சிரங்க டம்மை
மாயிருங் கரங்க டம்மை மீளவுந் துணித்து வீழ்த்தக்
காயெரி கலுழுங் கண்ணன் கைகளுஞ் சிரமுந் தோன்றப்
பாயெரி நெடுவேற் பெம்மான் பார்த்தனன் சினந்து நின்றான். ()

அரண்டரு கழலா னிவ்வா றறுத்தலு மவுணர் கோமான்
முரண்டரு சிரமுந் தோளும் பின்னரு முளைப்ப நோக்கித்
திரண்டபல் கணைக ளோச்சிச் சென்னியி லொன்றுங் கையி
லிரண்டுமே நிறுத்திப் பின்னர் யாவையுந் தடிந்தா னன்றே. (சரு)

நீளுறு பதலை சிந்தி நின்றம ரியற்று கின்ற
கோளரி முகத்து வெய்யோன் குறைத்திடு முடியு மிற்ற
தோள்களு முன்ன ரேபோற் றோன்றிடப் புகுது மெல்லை
யாளுடை முதல்வ னுகு மறுமுக னதனைக் கண்டான். (சசு)

நாற்றிசை முகத்தி னுளவ னாகரும் பிறரு முட்கச்
சீற்றமு துளன்போ லையன் சிறிதவ னுரப்ப லோடு
மாற்றல னுகி நின்ற மடங்கல்மா முகத்தன் றன்பாற்
றோற்றிடு சிரமுந் தோளுந் துளங்கிமீண் டொளித்த வன்றே. ()

வெஞ்சின வவுணர் வேந்தன் முழங்கினன் மான முந்தச் [டான்
செஞ்சுடர் நெடுவேல் கொண்ட சிறுவன்மேற் கதையைத் தொட்
டெஞ்சனு மதனைக் கண்டு வலிபெறு குலிசந் தன்னை
வஞ்சக னுயிருண் டொல்லை வருகென விடுத்தான் மன்னோ. (சஅ)

வேறு.

தூண்டா விடு குலிசந் துன்னென் றகன்மார்பங்
கீண்டாவி கொண்டு கிழித்துவெளின் சென்றிடலும்
வீண்டான் பதைபதைத்தான் வீழ்குருதி சோலைப்ப
மாண்டான் கிடந்தான மடங்கல்முக வெய்யவனே. (சகூ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு.

பார்த்தன ரினைய தன்மை பங்கயன் முகுந்தன் வானோ
ரார்த்தன ராடி யாடி யலர்மழை பொழிந்து நின்றார்
கூர்த்தடு குலிசம் வானிற் குலவிய கங்கை தோய்ந்து
தீர்த்தகன் றன் செங்கை மீது சிறப்புட னிருந்த தன்றே. (௫0)

வேறு.

சூளிகையின் றலையி ருந்து சமர்கண்ட சூர னென்பா
னளிமுகன் விழக்கண்டே யயர்ந்தனனே வரையறுத்த
நாளிழந்து மடிந்தனனே நானறியே னெனவயிர்ப்ப
மீளுகின்ற வேய்னர்போய் விந்தனனென் றேவிரித்தார். (௫௧)

வேறு.

பட்டன னென்று காதிற் படுதலு மறிவ ழிந்து
பட்டன னிவனு மென்று பகர்ந்திடத் தரையின் மீது
பட்டனன் றுயர மென்னும் பரவையிற் பட்டுமூழ்கிப்
பட்டதோர் பாட்டை யாவர் பகர்ந்திட வலவ ரம்மா. (௫௨)

வேறு.

அற்றநீங்கி மனத்துயரு மாறியபின் னவுணர்கோன்
பற்றியுள்ள வண்டமெங்கும் பயிலுகின்ற படைகடம்மை
முற்றவுமே தம்மினென்று முடுக்கினு னெண்ணிலாரை
மற்றவர்தாம் விரைந்துசென்று மன்னனுரை வகுத்தனரால். ()

வேறு.

வகுத்திடு மொழியைக் கேளா வாங்குறை யவுண மன்னர்
தொடுத்திடு மிரதம் வாசி துளைபெறு கைம்மா வாதி
பகுத்தநாற் படையி னோடு பாங்குட னெழுந்து செல்ல
மிகுத்தெழு தூசி மல்கி மேதினி மறைத்த தன்றே. (௫௪)

ஆடின னீரிற பூதி யணிந்துசெய் கடன்கள் முற்றித்
தேடிநல் லுணவு மாந்தித் திகழணி யாடை பூண்டு
நாடிய களபச் சேறு நலம்பெறு மேனி பூசி
நீடிய வவுணர் வேந்த னெடியதே ரிவர்ந்தா னன்றே. (௫௫)

இறையவ னல்கு தோரா மிந்திர ஞாலத் தோடு
விறன்மிகு மடங்க றன்னை வீரர்கள் கொண்டு மேவ
நிறைந்தவெண் கொடி நிலாவ வெண்குடை நிழலைச் செய்யச்
செறிவுதொல் கவரி வீசச் சூர்முத றேரிற் சென்றான். (௫௬)

முந்துறு தூசி சென்று பாசறை முற்றக் கண்டு
பைந்துழாய் மார்பப் புத்தேள் பதைபதைத் தழிந்து மாழ்கி
வந்துள னவுண னென்று மலரடி வணங்கிக் கூறக்
கந்தனு மெந்தை கேட்டுக் கடைத்தலை வாயில் சென்றான். (௫௭)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானதப் பொற்றேர் முன்னர் மாருதி யுய்ப்ப வேறி
ஞானநா யகனுஞ் செல்ல நலந்திகழ் வீர வாகு
சேனையின் றலைவ ரெண்மர் செறிதரு மிலக்கர் வானோ
ரேனையர் யாரும் போற்றி யெம்பிரான் மருங்கு சூழ்ந்தார். (௫௮)

வலந்தரு மவுண ரோடு வலியுறு பூதர் போர்செய்
தலைந்தன ராற்ற ராக வதுகண்ட தலைவ ரேற்று
மலைந்தனர் தளர்ந்து நிற்க வாகுவோ டிலக்க ரெண்மர்
கலந்தனர் சமருக் காற்றார் கலங்கினர் சிறிது போழ்தில். (௫௯)

கண்டனன் குமரன் றானுங் கார்முகம் வளைத்து நாணிற்
கொண்டபே ரோதை கேளாக் குஞ்சரம் புரண்ட பொற்றேர்
விண்டன வுடைந்து வாவும் வாசிக ளிறந்த பல்லோ
ரெண்டவிர்ந் திறந்தார் சில்லோ ரிடந்தொறு முள்ளார் மன்னோ. ()

பெருவளி முழக்குங் காரும் பொருகடன் முழக்குங் கூடி
யருவலிச் சிய வார்ப்பு மாக்குடன் சோர்ந்த வெள்ளச்
செருவிளை கழனி மள்ள ரார்ப்பொடு சிவணிச் செம்பொற்
புரிவளை முரச மார்ப்பப் போர்த்தொழில் கொண்டான்செவ்வேள்

அடுதிற லவுண வீர ராரமு முடியும் பூணும்
படுமொலி முரசுந் தாரும் பிச்சமுஞ் சுமந்து மா[illegible]
கடுநடைப் பரியுந் தேருங் கரியுங்கொண் டொழுகி வெள்ளப்
படுபுனற் குருதி செல்லப் பரமன்விற் குனிந்த தன்றே. (௬௨)

வித்தக ருள்ளந் தோறும் விளங்கிய குமர னென்பான்
கைத்தனன் றாணி யிற்கை வையமே னிறைந்த வம்பு
நித்திய னுலகந் தன்னை நிலைகெடுத் தழித்தல் போல
மெத்திய வவுணர் தம்மை விரைவினி லழித்த வன்றே. (௬௩)

சுடர்கொழுந் தடியே யென்ப கொழுங்கறை வழும்பு மூளை
தொடர்தரு நரம்பு வேறு தோன்றுவ தன்றி யொன்று
முடல்களை யாருங் காண வொண்ணுவென் றுறுத்த வம்பு
படர்தரு மேலை யண்டப் பரப்பிடைப் புகுந்து கொன்ற. (௬௪)

அந்தமில் வரங்கள் பெற்ற வவுணர்கோ னதனை நோக்கி
முந்துறு வெகுளி தூண்ட முறுவலு முயிர்ப்புந் தோன்ற
வெந்தைதன் மொய்ம்பிற் செல்ல விராயிரம் பகழி வாங்கிச்
சிந்தையிற் கடிது தூண்டத் தேவரு மயங்கி னாரே. (௬௫)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டழற் பொறியாய்த் தோன்றுங் கடவுளின் றோள்மேற் சூரன்
விட்டவெம் பகழியெல்லாம் வெந்துவெந் துகள வாகிப்
பட்டன திசைகண் முற்றும் பரந்தன கண்டு வெய்யோன்
விட்டனன் வயவர் மீது வெங்கணை யனந்த மம்மா. (௬௬)

உய்த்தவை மாற்றி வேலோ னுறுகணை மேனு முய்த்துக்
கைத்தல வில்லை மாய்ப்பக் கனன்றுபல் வாளி யேவிப்
பைத்தவிர் கொடியை மாய்ப்பப் பரமனு மவன்றேர் பாய்த்தான்
நித்தனு மவுணர் கோனு நிகழ்த்தினர் நெடும்போ ரென்பர். (௬௭)

இம்பரின் மலைந்த சூர னிம்மென மறைந்து போகி
யம்பரத் திடையே நிற்ப னுசையி னிற்பன் மீண்டு
மும்பரின் மறைந்து செல்வ னெங்குபா தலத்து நிற்பன்
நம்பனு மாங்காங் கேகி நவிலரும் பெரும்போர் செய்தான். (௬௮)

மீதமர் கடாக மெய்தி வெகுண்டம ராடல் செய்யக்
காதின னவுணன் றேரைக் கனன்றவ னினைக்க வந்த
மேதகு ஞாலத் தேரின் மேற்கொளீஇ யமர்பு ரிந்தோன்
வாய்தலை யடைத்துச் சேனை மறைவினி லிருப்பக் கண்டான். ()

ஓங்கிய வாயி னீங்கி யொய்யென விளிப்பச் சேனை
தேங்கிய வ[illegible]ந்து தெரிந்தனன் விழியி னீற்றித்
தாங்கிய மழுவே நேமி திரிசூல மெழுவி னோடு
வீங்கிய கதையும் விட்டான் விமலனு மவைக ளெல்லாம். (௭0)

ஏழ்தலைப் பெய்த வோரா யிரமெனு மண்ட மெங்கும்
வாழ்தலைக் கொண்ட சேனை வான்பெருங் கடலை மாய்த்த
காழ்தரு திகிரி யேவக் கந்தவேள் கையி லேற்றான்
வாழ்த்தலை விரும்பி வெய்யோன் மருத்துமா மலைகொ ணர்ந்தான்.

அரிமுகன் மைந்த ரேனை யங்கிமா முகவன் போரின்
மரித்தவ ரெழுந்து சூழ்ந்து மன்னனை வணங்கி நின்றார்
சிரித்தனன் செவ்வேள் கண்டு சிவப்படை விடுப்ப வேகி
மரித்திட வழித்துச் சூர மன்னனை விட்ட தன்றே. (௭௨)

கண்டனன் சிரித்தா னூழிக் கனலென வெகுண்டு பொங்கக்
கொண்டதோர் மாயை தன்னாற் கொடியபல் லுருவங் கொண்டு
மண்டமர் புரிதல் காணூஉ மழையெனக் கணைகள் பெய்தே
யண்டலன் வடிவம் யாவு மழித்தனன் குமரன் றானே. (௭௩)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திர ஞாலத் தேரை யெறிழ்வலிச் சூலந் தன்னை
வெந்திற னேமி தன்னை விளித்தனன் றன்பா னிறபுக்
கந்தவேள் பெரும்போர் செய்து கடியசூர் வலிமை யாவுஞ்
சிந்தினன் விண்ண மீதுஞ் சிந்துவின் மீது நின்று. (௭௪)

இருவருஞ் சமர்செய் போழ்தி லேவருங் காணு வண்ண
மொருவினன் பின்ன ரேகி யுவரிநீர்க் கடலில் வானின்
மருவருந் திசையி லன்றி வலியபா தலத்தின் காறு
மருவினன் மறைந்து செல்ல முருகனும் விடாது சென்றான். ()

வெய்யவ னெங்குச் சென்றான் விமலனு மங்குச் சென்றே
யொய்யெனப் பெரும்போர் செய்ய வரம்பெறு கோழிப் புள்ளின்
மெய்யினைக் கொண்டு வெய்யோன வெஞ்சிறை யடித்தெ ழுந்தே
யையன்கை யிருந்த வில்லைக் கறிப்பது கருதி வந்தான். (௭௬)

வருவதை யமலன் காணு மலர்க்கரத் திருந்த வாளா
லொருதனிப் பறவை யாக்கை யுயிரழி வெய்த மாற்று
விருதுணிப் பட்டு விழ வெறிந்தன னெறித லோடு
மரியயன் முதலாந் தேவ ரனைவரு மகிழ்ந்தா ரன்றே. (௭௭)

மண்ணொடு நெருப்பு நீரும் வளியெனும் வடிவு கொண்டு
தண்ணென வருதல் கண்டு தூயவன் பகழி யேவித்
திண்ணிய வுருவ மெல்லாந் தொலைத்தவ னுணரச் சொல்வான்
நண்ணுநின் மாயை கண்டோ நம்மியல் காட்டக் காண்டி. (௭௮)

மாயவன் பிரமன் வானோர் மற்றுள கோளு நாளு
மாயபல் லண்ட மெல்லா மங்கமாய் விளங்கி நிற்ப
மேயதன் னியற்கை தன்னை விண்ணவர் கண்டே யஞ்சத்
தூயவ னஞ்ச லென்று துணைந்துகை காட்டி நின்றான். (௭௯)

விம்பிதங் கொண்டு வேளின் விமலமெய் யுருவங் காணச்
செம்மலு மருட்கண் சாத்தச் சூர்முதல் கண்டு சொல்வான்
மும்மையா மாயை யில்லா முதல்வன்மெய் யியல்பு காட்ட
வம்மையிற் றவந்தா னென்ன வாற்றனே னந்தோ வென்றான். ()

இன்னன பலவுங் கூற விறையவ னெவர்க்கு மேலா
யுன்னருந் தகைத்தாய் நின்ற வொருபெருந் தோற்ற நீங்கி
மன்னிவர் கலாப மூர்ந்த வியனுருக் கொண்டு நண்ணித்
தன்னலன் போத மாற்றித் தொன்மைபோ லாக்கச் செய்தான். ()

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தலு மவுணர் கோமான் சிறிதரு ளுணர்ச்சி நீங்கிப்
பொய்வரு மறிவு தோன்றப் பெரும்பகை கோப மூளச்
செய்தரு சமரி லூர்க்கஞ் செலுத்தின னினைய சொல்வான்
மெய்வரு மறிவு கெட்டேன் மேதினி பழிக்க நின்றேன். (௮௨)

சேயுருக் கொண்ட கள்வன் செருவினை யிழைக்க லாற்றான்
மாயையின் வடிவங் காட்டி மற்றெனை மயக்கஞ் செய்த
சேயினைப் பின்னர் யானே செருவினின் முயன்று கொல்வே
னாயவிப் பகைமை மூட்டு மமரரை முதலிற் கொல்வேன். (௮௩)

என்றுளங் கொண்டு சூர னிகல்கொள்மந் திரத்தைப் பன்னி
யென்றவு மருட்கை கொள்ள விருநிலங் ககன முற்றுந்
துன்றிருள் வடிவ மாக்கித் தொகுதலை யளவை தீர்ந்த
வன்றிறற் கரங்கள் கொண்டு வானிடைக் கிளர்ந்து வந்தான். ()

கூடிநின் றமரை மூட்டுங் கொடியவா னவரை யெல்லாந்
தேடியின் னுயிரை மாய்ப்ப னெனத்திரி கின்றா னென்று
கூடிய வோதி தன்னாற் குறிப்பினா லுணர்ந்து தேவ
ரோடினர் கூற்றை நேர்ந்த வுயிரென விரங்க லுற்றார். (௮௫)

அணையா லவ்னி யாவு மளித்திட வல்லா யோலஞ்
சேணினைக் காக்க வந்த தெய்வமே யோல மோலம்
பாணித்து நிற்றி யாயிற் பகைவனெம் முயிரை மாய்ப்பன்
பேணினை யெம்மை யெல்லாம் பெருமநீ வல்லையென்றார். (௮௬)

அங்கவர் மொழியுஞ் சூர னாற்றலுங் கண்டு செவ்வேள்
செங்கர மிசையே வைகுந் திருநெடு வேலை நோக்கி
யிங்கிவ னாகம் போழ்ந்தே யேகுதி வல்லை யென்று
துங்கம துடைய சீர்த்திச் சூரன்மேற் செல்ல விட்டான். (௮௭)

விடுத்தலு மாயை நீங்க வெய்யமா வடிவைச் சூர
னெடுத்தவர்க் கடலி லேகி யிருங்கிளை தளிர்கண் மல்கி
யடுத்துள நியுத மென்னு மளவையிற் பருத்துத் தேவர்ப்
புடைத்தன னிற்பச் சீறிப் புங்கவே றடிந்த தன்றே. (௮௮)

கொக்குரு வகல மேலாய்க் குலவுதன் னுருவங் கொண்டு
தக்கதன் னுடைவாள் கொண்டு செருமுயல் கருத்த னாகிப்
புக்கரு ளுடலங் கீண்டு பொள்ளென விருகூ றாக்கி
மைக்கடல் வரைப்பில் வீட்டி வள்ளல்கை யமர்ந்த தன்றே. (௮௯)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையி லெண்ணில் கால மாற்றிய தவப்பே றெய்த
விம்மையி லிரண்டு கூறு மெழுந்தருக் குடம யூர
விம்மித வடிவங் கொண்டு விண்ணவர் மருள வைய
மும்மையு மழிப்ப தென்ன முழங்கிமே லெழுந்த வன்றே. (கூ0)

அருள்விழிப் படுத லோடு மாணவங் கன்ம மாயை
யொருவியுள் ளுருகி நிற்ப வூன்றலைப் படுத்த புள்ளை
மருவுக கொடியாய் நந்தம் வாம்பரித் தேர்மே லென்றுந்
திருவியூர் மயிலை நீங்கி யெதிர்ந்தமா மயில்மேல் கொண்டு. (கூக)

நிரைக்கட லேழு மொன்றாய்ச் சென்றளாய்க் கலவிப் பொங்க
வரைத்திரள் புழுதி யாக வான மீன் மழைகள் சிந்த
நிரைத்தபல் லுலக மெல்லா நிலைகுலைந் தலையச் செவ்வேள் [ன்
புரைத்தபல் லண்ட மெல்லாம் பொள்ளெனச் செலுத்தி மீண்டா

நீண்டிறற் சிறகர்ப் புள்ளாய்த் திகழ்ந்துள தேவர் தம்மைப்
பண்டைய வடிவங் கொள்ளப் பணித்தனன் பறப்பை யாகி
விண்டன ரமரர் யாரும் விரைமலர் மாரி தூவிப்
புண்டரி கத்தாள் போற்றிப் பணிந்தன ருவகை பூத்தார். (கூஉ)

போரினி லிறந்தோர் தம்மைப் பொள்ளென வெழுப்பி மேலாம்
வீரனுற் சயந்த னோடு வானவர் சிறையை விட்டு
கிறை தன்னை நோக்கி மகேந்திர மழிக்க வேவி
வீரரும் பிறருஞ் சூழ வேலிறை கதிரை புக்கான். (கூச)

வேறு.

மன்னு மாதவத் துயரிய நைமிச முனிவீர்
மன்னும் வெந்திறற் சூரனை வதைசெய்த திதுமேல்
பின்னு வேற்கரன் கதிரையாம் விலங்கலை யடைந்து
துன்னு மற்புதங் கேண்மென வுரைத்தினன் சூதன். (கூரு)

சூரபன்மன்வதைப்படலமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 404.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமகிரிப்படலம்.

சீர்திகழுங் கதிர்காமச் சோதிமலைச் சிகரமீது
பார்திகழ மற்புதங்கள் பலகோடி செய்தருளுங்
கூர்திகழு நெடுவேலோன் றிருப்பாதங் கும்பிடுவோ
ரோர்திகழும் பேரின்ப வீடடைத லெளிதாமே. (க)

குன்றுதொறுங் கூத்துகந்த குமரவேள் கருணையினாற்
குன்றுசிறை தடிந்தகோ வின்பகைதா னழிந்தபின்னர்
வென்றியுடன் விண்ணவர்கள் வானமிசை வீற்றிருந்தார்
நன்றுசெழித் தனவுலக நான்மறையி னறம்வளர்ந்த. (உ)

ஆனதொரு பொழுதுதனி லாறுமுகப் பெருமானும்
வானவரு மிறையவனு மலரவனு மாயோனு
மேனையரு மிறைஞ்சியிட வெண்மமொடு வாகுவென்பான்
ருனையொடு புறத்துவரச் செருக்களத்தைக்கட ந்துசென்று. (ங)

கலங்குதிரை கடல்கொண்ட மகேந்திரமுங் கடந்துபின்ன
ரிலங்கைநகர் சிறப்பெய்த வெழிற்கதிரை மலையடைந்து
புலங்கொண்ட கம்மியற்குப் புகன்றிடுவ னிறையினிலோர்
நலங்கொண்ட திருநகரை நல்குதிநீ யீண்டையென. (ச)

ஆறுமுகங் கொண்டபிரா னருண்மொழிகேட் டகிலதச்சன்
கூறுபுகழ் புனைந்தருளுங் குரைகழலை வணங்கியன்பா
லீறுபடு மூழியினு மிறுதியின்றி விளங்குகின்ற
வீறுடைய விலங்கலின்மேல் வியனகரை வகுத்திடுவான். (ரு)

வேறு.

பீடியல் மாட கூடம் பெருந்தெரு நெருங்கு தெற்றி
நாடியல் மண்ட பங்க ளன்மணி மறுகி னோடும்
பாடியல் கொடிக ளோங்கிப் பருமணி ஞெள்ள லீண்டிக்
கூடிய படியி னோங்கு கோபுரந் திகழ்ந்து மன்ன. (சு)

மகரதோ ரணங்கண் மல்கு மாமணிச் செம்பொன் மாடஞ்
சிகரநீண் டிருக்குஞ் செய்ய சூளிகை குலவி யோங்க
நிகரிலா வணங்க ளோங்கு நெடுந்தெரு வமைந்து மேலா
நகரினை விரைவி லாங்கு நயம்பெற வமைத்தா னன்றே. (எ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை யளிக்கு மந்தத் திகழ்புர நடுவின் கண்ணே
சத்திய ஞான சோதிக் தற்பர னிருக்கு மாறு
வித்தகக் கோயி லொன்றை விளங்குற வியற்றி யாங்கண்
மெத்திய விறல்சேர் சிங்க மெல்லணை விதித்தா னன்றே. (௮)

சிந்தித நல்கு சிந்தா மணியெனச் சிறப்பு வாய்ந்து
நந்துத லில்லாக் கோயி னல்லருள் வழங்கு மாற்றா
லிந்திர நீலந் தன்னா லெழிலரி சுமந்த பீடந்
தந்திரம் விதித்த வாறு செய்தனன் றச்சர் செம்மல். (௯)

அத்தகு மணியாற் செய்த வரியணைப் பீட மீது
வித்தக மேலோன் றானும் வீற்றிருந் தருளி நல்ல
பத்தருக் களித்தான் றூய பரமவற் புதமாங் காட்சி
யுத்தம வன்பர் யாரு மோங்கிய மகிழ்விற் கண்டார். (௧௦)

அந்தநற் சமயந் தன்னி லாயிடை வதிந்தோ னான
விந்தியன் முனிவர் விண்ணோ ரேனைய ருடனவ ணங்கிச்
சிந்தனைக் கரிய செம்மல் செயயவேற் குகனே நின்னை
வந்தனை புரிந்து பூசை செய்திட விருப்பங் கொண்டோம். (௧௧)

இந்தநன் மலையின் மீதே யெங்களுக் கியைந்த தீர்த்தந்
தந்தரு ளின்னே யென்னத் தகுமொழி யதனைக் கங்கை
மைந்தனுங் கேட்டு மேலாங் கருணைய னாகிவீர
மைந்தனை யழைத்து வல்லே விளம்பின னிந்த மாற்றம். (௧௨)

கிரிகளிற் றலைமை வாய்ந்த கதிரையங் கிரியா மீங்கு
வரமுறு தீர்த்த மொன்றை மன்னுல குய்யு மாறுற்
புரிகுதி விரைவி லென்று புலவரின் சேனா நாத
னருளலும் வீரன் றானு மம்மொழி தலைமேற் கொண்டு. (௧௩)

கரமிசை யமர்ந்த தண்டாற் கதிரையங் கிரியின் மோதப்
பொருவருங் குண்ட மொன்பா னாயிடைப் பொலிந்து தோன்றப்
பரமனு முன்னை நாளிற் பகர்மொழி யதனை யெண்ணி
விரிதரு மவற்றின் கண்ணே விளங்கினள் கங்கை தோன்றி. (௧௪)

மனங்கவர் தன்மை வாய்ந்து மன்பதைக் கிருளை மாற்றி
யினமுறு நவமாங் கங்கை யிருங்குளிர் பொருந்தி நின்று
தனமுட னறனே யின்பஞ் சார்வரு வீடு நானகு
நனந்தலை யுலகின் மேலாய் நல்கிநின் றொளிருங் கங்கை. (௧௫)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விர்சைநல் லமுத தேர்வை வானதி சிவமாங் கங்கை
பாசுபா வலியாங் கங்கை படருமா ணிக்க கங்கை
பெருகுகா வேரி கங்கை பிறவிநோய் மாற்ற வல்ல
வொருநவ கங்கை யாகு மோங்குசீர்க் கன்னி கங்கை. (கசு)

தூயபா தாள கங்கை துகளிலா விவைகள் பத்து
மாயிரும் புவனத் துள்ள மன்னுயி ரனைத்தும் பெற்ற
சேயிழை யணங்கு முன்னாட் டிருக்கண வன்கண் மூட
மேயகை விரலிற் றோன்று மேன்மையைக் கொண்ட வன்றே. ( )

நானிலம் புகழ வோங்கு நவகங்கைத் தீர்த்தந் தன்னை
மேனிலை முனிவர் வானோர் வேறுளோர் காத்தா லள்ளித்
தூநிலை யடையு மாறு தெளித்தனர் சிரசின் மீது
பானலங் கண்ணி மைந்தன் பரந்தாம மடைய நிற்பார். (கஅ)

அன்னதன் பின்னர் மேலா மாறிரு தடந்தோள் கொண்ட
முன்னவன் பாத பூசை முட்டற முடியு மாறு
பன்னுறு மலரே சாந்தம் பழுகறு தூப தீப
மின்னவும் பிறவுந் தேடி யிந்திரன் முதலோர் கொண்டார். (க௯)

எந்தையு முமையாள் கேட்ப வியம்பிய தோர் குமார
தந்திர முறைமை கொண்டு சண்முகப் பெருமான் பேர்கொள்
மந்திரம் புகன்று தூய கங்கைமஞ் சனமு மாட்டிப்
புந்தியின் மகிழ்ந்து பூவும் பொலிவுற நன்கு சூட்டி. (உ௦)

குவைபடு கனிக ளூட்டிக் குமரனைப் பூசை செய்து
நவையற வருச்சித் தேத்தி நான்மல ரடியிற் றாழ்ந்து
சுவைபடு துதிகள் கூறத் தொடங்கினர் சுரர்கள் யாருங்
கவைபடா மனத்தி னோடு கண்கணீர் சொரிந்து நின்று. (உக)

உலகினுக் கிறைவா போற்றி யொருபெருந் தேவா போற்றி
யலகிலா வானோர் யாரு மன்புடன் வணங்குங் கோவே
நிலவுமந் திரங்க ளென்னு நெடுவடி வெடுத்தாய் போற்றி
தலமவை யொடுங்கி நிற்குந் தானமாய் நின்றாய் போற்றி. (உஉ)

வீ[illegible]கே தனமும் வாளும் விசிகமும் மணியும் வேனு
மாறில்வச் சிரமும் வில்லும் வரதமோ டபயந் தானு
மாறுப[illegible] முகமுங் கொண்டே யவுணனுங் கிரௌஞ்ச வெற்பை
நீறுசெய் தெம்மை யாண்ட நிருமலன் பாதம் போற்றி. (உந)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூரிய வில்லும் வேலுங் குலிசமுங் கொடியு மம்புஞ்
சீரிய சூலந் தண்டந் தோமரம் பிறவுங் கொண்டு
பாரினுக் கலக்கண் செய்து பழிபினைக் கொண்ட பொல்லாத்
தாரகற் றடிந்தோன் பாத தாமரை போற்றி போற்றி. (உச)

தாமரை குலிசம் பாணந் தண்டுவில் லபயஞ் சூலங்
காமரு வரதம் பாசங் கரங்களில் விளங்கக் கொண்டு
தேமரு வலங்கல் சூடுஞ் சீயமா முகனைக் காய்ந்த
தாமநெட் டிலைய வைவேற் சண்முகன் பாதம் போற்றி. (உரு)

வேறு.

சீர்கொண்ட மணிமகுடம் புனைந்திலங்கு திருமுடியு
முந்நான் கென்னுந்
தார்கொண்ட தடந்தோளுந் தாமரைவிற் றிகிரிமணி
குலிசம் பாசங்
கூர்கொண்ட வேற்படையும் பிறபடையுங் குலவியசெங்
கரமுங் கொண்டு
பார்கொண்ட சூர்முதலை யழித்தபிரான் பங்கயத்தாள்
போற்றி போற்றி. (உசா)

இளம்பரிதி யொருகோடி யொருங்குதித்தாலென்த் திகழுஞ்
சிவந்த மேனி
வளம்பயிலுந் திருப்பொலிவும் வாசவனு மயிலேறு
சிறப்பும் வாய்ந்த
தளம்பொலியுந் தாமரையுந் திகழ்பாசு பதப்படையின்
வனப்புங் கண்டே
யுளமலிந்த பத்தியுட னடைக்கலமாய்ப் புகுந்தனமுன்
னிடத்தே யையா. (உஎ)

பல்வகைய வடிவுகொண்டாய் பல்வகைய படைகொண்டாய்
பணியுங் கொண்டாய்
பல்வகைய நிறங்கொண்டாய் பகர்வரிய நின்னிபல்பு
பகர லாமோ
செல்லுறங்கு பொழில்சூழ்ந்த சோதிட்காம சைலமிசை
யிருக்குந் தேவே
சொல்லரிய சகதண்ட முழுவதுமே பணிகின்ற
சோதி வாழ்வே. (உஅ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு.

தீரியல ரை யழித்தவனே, சண்முகங்கள் கொண்டவனே
விரிதிரைநன் மணிகொழிக்கு மாணிக்க வரநதிபாய்
தெரிவரிய கதிர்காம சைலமிசை வாழ்கடப்பத்
தெரியலணி குமரவேளெனத் திருவடியிற் பணிந்துநின்றார். (௨௯)

வேறு.

சேட்டிளம் பரிதி கோடி திரண்டெழுந் தனைய சோதி
யீட்டமாஞ் செய்ய மேனி யிறையவ னிமையோர் செய்த
சேட்டமாம் பூசை தன்னாற் றிருவுள மகிழ்ந்து நீவிர்
கேட்டவை யெல்லா மீவோங் கிளத்துமின் சுரரே யென்றான். ()

யாவருந் தொழுது போற்ற விம்பலை மிசையெந் நாளு
மோவுத லின்றி யெல்லா வுயிர்களு மோங்கு செல்வ
மேவுற வளித்து நாளு மன்னுதல் வேண்டு மென்று
தேவர்க டாழ்ந்து வேண்டச் சேயவ னதற்கி சைந்தான். (௩௧)

விரும்பிய வாறு நீவிர் வேண்டிய வரங்க ணல்கிச்
சுரும்பமர் பதும வாவி சூழ்தருஞ் சோதிட் காம
பருப்பத மாகு மீங்கே பாருயி ரளித்தும் வாழ
விருப்புட னிருப்போ மென்று வேலவ னருளிச் செய்தான். ()

வேறு.

நேசமுட னொருமனித னவகங்கைத் தீர்த்த மாடி
மாசகலப் பூசனையு மகிழ்ந்தெமக்குப் புரிகுவனேற்
பேசரிய வானுலகப் பெரும்பதமே யல்லாமற்
பாசவினை கழிந்தொழியப் பரபதமும் வழங்குவமால். (௩௩)

வேறு.

என்றருள் செய்து மேலா மிறையவ னிருந்தா னங்கட்
டுன்றிய கதிரை யோங்க லூடமயிற் பெருமா னுக்கு
நன்றமர் தான மாகு நவகங்கை யென்னுந் தீர்த்த
மென்றுள துவந்தே யாடு மெழிற்றீர்த்த மாகு மன்றே. (௩௪)

நலம்வளர் தீர்த்த மாகு நவகங்கை மூழ்கு வோர்க்குப்
பலம்வளர் தரும நல்கும் பண்பினாற் றரும தீர்த்தங்
குலம்வள ரருத்தி நல்குங் குணத்தினா லருத்த தீர்த்தந்
தலம்வளர் காம நல்குந் தன்மையாற் காம தீர்த்தம். (௩௫)

பெறலரு முத்தி நல்கும் பெற்றியான் முத்தி தீர்த்தஞ்
செறலரு மிட்ட மெல்லாஞ் செறித்தலி னிட்ட தீர்த்த
மறலரு ஞான மேன்மேல் வளர்த்தலான் ஞான தீர்த்த
முறலரும் பொருள்க ளெல்லா முறுத்தலிற் சருவ தீர்த்தம். ()

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டநோய் தொழுநோய் பொல்லாக் குன்மநோய் விழிநோய்
கட்டநோய் செய்த்தோ ராதி காலுநோ யெல்லா நீங்கு வெய்ய
கெட்டநோ யென்று யாருங் கூறுநோ யுனைத்து மாய்ந்து
விட்டுநோ யாகு மிந்த விமலநீர் மூழ்கு வார்க்கே. (௬எ)

இன்னபன் மாண்பு பெற்ற வெழினவ கங்கை காண்டன்
மன்னெடுங் கிரியைச் சேர்தன் மாந்தர்யா வர்க்கு மாகா
முன்னைநல் விதியி னோடு வேலவ னருளும் பெற்று
ரங்கவ கங்கை காண்ப ருங்கிரி தனையுஞ் சேர்வர். (௬அ)

வெந்திற லவுணற் சாடி வேலவன் கதிரை வெற்பில்
வந்தருள் சரிதஞ் சொன்னே மாதர்க ளிருவர் தம்மைக்
கந்தவேண் மணஞ்செய் சாதை கட்டுரை செய்வங் கேண்மின்
பந்தமில் முனிவீ ரென்று பகருவன் சூதன் மன்னோ. (௬௯)

கதிர்காமகிரிப்படலமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 443.

---

# திருமணப்படலம்.

முழுமணி மகுடஞ் சூடு மூவிரு சிரங்கள் போற்றி
முழுமதி முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
மழைதவழ் கதிரைச் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
விழைதரு மஞ்ஞை போற்றி வெற்றிவேல் போற்றி போற்றி. ()

மருமலர்க் கடப்ப மாலை மார்பணி குமரச் செவ்வே
ளருவரைச் செய்ய சாந்தங் காரகி லளைந்து வீச
விரைபுன லருவி யார வடமென விமைக்குஞ் சாரல்
விரிகதிர் காமச் சோதி விலங்கலிற் சின்னாள் வைகி. (உ)

விரிகடற் பூத சேனை வீரனோ டிலக்க ரெண்ம
ரரியயன் மகவான் விண்ணோ ரனைவரு மருகிற் சூழத்
திரையெறி கடலைத் தாண்டித் திருச்செந்தூர் மேவி யங்குப்
புரிதரு தளியுட் புக்குப் பொன்னரித் தவிசின் மீது. (௩)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிவீற் றிருந்த போது மலரடி தாழ்ந்து விண்ணோர்
சென்னியா முடைய செல்வா சிறந்திட வருச்சித் தேத்தி
நின்னையாம் வணங்கு மாறு நீயெமக் கருள்செய் கென்ன
வல்லை[illegible]ன் மகிழ்ந்தே யன்னோர் மொழிதனக் கிசைந்தா னன்றே.

மீனுளர் கடலிற் புக்கு வெய்யவன் மறைந்து போக
வானவர் கந்த வேளை வரன்முறை பூசை செய்ய
ஞானநா யகனு மேலா நல்லருள் வழங்கிப் பின்னர்ப்
பானுவந் துதயஞ் செய்யப் பரமனை யருச்சித் தேத்தி. (௫)

அந்நிலை யகன்று செவ்வே ளனைவரும் புடையிற் சூழப்
பொன்பயில் மஞ்ஞை மீது பொலிவுற விவர்ந்து சென்று
பன்னெடும் பதிக ணீங்கிப் பரங்கிரி யடைந்து வைக
மின்னெடுங் குலிச வேந்தன் வேலவன் பாங்கர்க் கிட்டி. (௬)

பன்முறை தொழுது தாழ்ந்து பாவியே முய்யு மாறு
நன்முறை நில்லாச் சூரன் வேருட னவியச் செற்றுத்
தொன்முறை நாக நாட்டைச் சுரர்களா மெமர்க்கே யீந்தா
யென்முறை யீடொன் றேகா ணின்னமு முரைப்பன் கேண்மோ.

நான்பெறுங் கன்னி தன்னை நங்குடி தழைத்து வாழ
மேன்முறை வதுவை செய்து வாழுதி யவளோ டென்று
கான்முறை தொழுது தாழ்ந்து கனிமொழி புகன்று நிற்ப
நான்மறை காணா வண்ண னாளைநா மணப்போ மென்றான். (௮)

நாயக னருளும் வாக்கை நாகநாட் டரசன் கேளா
மேயதோர் மகிழ்ச்சி கொண்டு மேருவி லிருந்தோ ரான
வாயிழை மனைவி தன்னை யரும்பெறற் புதல்வி தன்னைக்
கூயினை தருதி யென்னக் கூறியொற் றுவனை விட்டான். (௯)

மற்றவன் விரைவி னேகி மேருவைக் கிட்டி யாங்க
ணுற்றிடு சசிமுன் போகி யுயர்பதம் வணங்கிச் சொல்வான்
கொற்றம துடைய சூரன் குலத்தொட னழிந்தா னெங்க
ணற்றவ மதலை யோடு நாகருஞ் சிறைய கன்றார். (௰)

ப[illegible]னுந் திரும்பி வந்து பரங்கிரி வெற்பி னுற்று
னுரியநின் கணவ னின்னை யுயர்மக ளோடு மொல்லை
பரங்கிரி வருக வென்று பகர்ந்தெனை விடுத்தா னென்ன
விரவிய விழும நீங்கி விம்மித மடைந்தாண் மன்னோ. (௧௧)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருப்பினுட் டலைமை வாய்ந்து புவியினிற் சிறப்பு வாய்ந்த
திருப்பரங் குன்று தன்னிற் சேர்ந்தன டேவர் நாத
னிருப்பதோர் கோயி லெய்தி யினிதினி லிருந்தா னந்த
மருப்பிரண் டுடைய தெய்வ வாரண மகளி னோடும். (௧௨)

முந்துசெல் லொற்றர் தம்மை முசுகுந்த னாதி யான
வெந்திற லரசர் கட்கும் வானுறை தேவர் கட்கு
மிந்தவெண் டிசையோர் கட்கு மேந்திழை வதுவை சொல்கென
னிந்திரன் விடுப்ப வன்னோ ரிருங்கழ லிறைஞ்சிச் சென்றார். ()

வேறு.

போனபொழு திற்புலவர் செம்மல்புலன் மிக்க
வானவர்கள் கம்மியனை வல்லையில் விளித்துக்
கானமர் கடம்புபுனை காளைதன் மணத்துக்
கானசெயன் முற்றுற வமைத்தியிவ ணென்றான். (௧௪)

புலவன துளங்கொடு பொருப்பினொரு சாரி
னிலமிசை வரைப்பக னிதிக்கொடு விதித்துக்
குலமணி குயிற்றிநனி கோலம தியற்றி
வலனுறு சிறப்பினொடு மண்டப மமைத்தான். (௧௫)

வேறு.

மேலுற விதான மெங்கும் வகைவகை விரித்துப் பேலா
மாலைகள் கவரி நல்ல வான்றுகில் யாவுந் தூக்கி
யாலய நடுவி லெங்க ளாறுமா முகவன் வைக
நூலது முறைமை தேர்ந்து நோன்றவி சமைத்தான் மன்னோ. ()

மாதவன் விரிஞ்ச னாதி வானவர் பிறரும் வைக
வாதனம் பலவு மங்க ணமைத்தன னிடங்க டோறு
மாதவ மறைக்குஞ் சோலை யணிகிளர் வாவி யோடை
யேதமில் வதுவை செய்தற் கேற்பவை பலவுஞ் செய்தான். (௧௭)

தாவிலா வன்ப னான சதமக னிபவர்க் கூவி
மூவிரு முகத்தோ னான வெற்றிவேற் பெருமா னுக்குந்
தேவர்க டேவன் பெற்ற தேவகுஞ் சரமா துக்கு
மேவரும் வியப்ப நாளை யெழின்மண நிகழ்த லாலே. (௧௮)

பீடிய னகர மெங்கும் பெருமுர சறைதி ரென்னக்
கூடிய மகிழ்ச்சி யோங்கக் குலவிய தலைமை பூண்டோர்
நீடிய புனலுண் மூழ்கி நல்லன துய்த்து டுத்து
நாடிய களிறு பண்ணி நற்பெரு முரசிட் டேறி. (௧௯)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழிய குணில்லைக் கோன்று வாழிய செருத்த லாக்கள்
வாழிய மறையு ணர்ந்தோர் வாழிய வேள்விச் செந்தீ
வாழிய மழைபெய் வானம் வாழிய வுயிர்க ளெல்லாம்
வாழிய சைவ நீதி வாழிய மன்னர் செங்கோல். (௨௦)

சங்கரன் புதல்வ னான சண்முகப் பெருமா னுக்கும்
பங்கமி றெய்வ யானைப் பேர்கொளும் பிராட்டி யார்க்கு
மிங்குசெய் வதுவை காண யாவரு மணிந்து கொண்டு
துங்கமார் சிறப்பு மேவத் துணை யுடன் வருகவென்று. (௨௧)

எருக்கிய் முரசங் கேளா யாவரு முளத்து மேன்மேற்
பெருக்கிய மகிழ்ச்சி துள்ளப் பெருந்திரு வடைந்தோ மிந்நாண்
முருக்கிய வினைஞ ராலேறு மூழ்கினே மின்பத் தென்று
தருக்கிய தன்மை யோராய்த் தம்முளே கழுத்த முற்றார்.(௨௨)

இந்திரன் விட்ட தூத ரெங்கணுஞ் சென்று ராக்க்
கந்தவேள் மணத்தின் சீரைக் கட்டுரை செய்யக் கேட்ட
வந்தர வானி லுள்ளா ரவனியி லுள்ளார் தாமும்
வந்தனர் வதுவைச் சாலை மகிழ்ந்தன ரிருந்தா ரன்றே (௨௩)

மணங்கமழ் மலரோன் மாயன் சதமகன் முதலா னோர்கள்
மணவினைக் குரிய தான மங்கல முகூர்த்தஞ் சாரக்
குணங்குறி கடந்த கோவின் குரைகழல் வணங்கி யெங்க
ளணங்கினை வதுவை செய்ய வவணெழுந் தருள்வா யென்றார். ()

அன்னவர் நவின்ற மாற்ற மறுமுகச் செல்வன் கேளா
வன்னது செய்வ மென்றே யருமணித் தவிசி னீங்கித்
துன்னிய வீரர் பூதத் தலைவருந் துதித்துச் சூழ
முன்னுறு மயிலி லேறி வீதியிற் போந்தான் மன்னே. (௨௫)

செழுந்தனிக் கமலச் செம்மல் மாயனும் பிறருஞ் சேர்ந்து
விழுந்துமுன் பணிந்து நின்று விரைமலர் மாரி விண்ணிற்
பொழிந்தன ரயலிற் சூழப் பொன்னணி வீதி போந்து
முழுமலர் மணஞ்செய் சாலை முன்னரே வந்தான் முன்னோன். ()

ஏ[illegible]தோர் மயிலி னீங்கி யிறையவன் வேள்வி செய்யுங்
கோயிலின் கடைமுன் செல்லக் குலவிய வரம்பை மாரோ
டாய[illegible]ர் சசியுங் கெய்தி யறுமுகற் றொழுது போற்றித்
தூயதோ ராவின் பாலாற் றுணைப்பதம் விளக்கிச் சென்றாள். ()

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லிய மியம்ப வானோர் பரவ விஞ்சையர்கள் பாட
மெல்லிதழ் வனசத் தேவு மாயனும் பாங்கர் நண்ண
மெல்லெனச் சென்று செவ்வேள் வேள்விசெய் சாலை புக்கு
மல்லலந் தவிசின் மீது மன்னியீற் றிருந்தான் மன்னோ. (௨௮)

இருந்தபின் னயனு மாலு மெண்ணிலா முனிவர் வானோ
ரருந்திறல் வீர ரண்ண லானையா விருக்கை தோறு
மிருந்தன ரவளி மன்னர் முசுகுந்த விறைவ னோனோர்
பொருந்தனி லமலன் பாதஞ் சூடிட வருள்செய் தானே. (௨௯)

வெள்ளியங் கிரியி னின்று வியலனு முமையா ளோடு
வெள்ளிய விடையி லேறி விவாகசா லையின்க ணண்ண
வள்ளிலை வேற்கை நம்பி யவர்தமை மகிழ்விற் கண்டு
துள்ளிய வன்பு பொங்கத் துணைப்பதம் வணங்கி நின்றான். ()

நின்றதம் புதல்வன் றன்னை நெடுங்கரத் தெடுத்துப் புல்லி
யொன்றுறத் தழுவி மார்பி லுச்சியை யுயிர்த்தா ரன்பின்
மன்றிடை நடிப்போன் பாத மலர்மிசை யயனு மாலு
மொன்றிய மகத்தின் வேந்து மொருங்குடன் வணங்கி நின்றார்

வணங்கினர் தமக்கு மேலாம் வளமுறு கருணை செய்தே
யணங்குடன் மணஞ்செய் காலை யணிமணித் தவிசின் மீது
குணங்குறி கடந்த கோமான் குலவியீற் றிருந்து செவ்வேண்
மணந்தனைக் காண வந்தோ மன்றலை நடத்து கென்றான். (௩௨)

வேறு.

நாதனிவை செப்புதலு நன்குமகிழ் வெய்தி
மாதவனும் போதவனு மகபதியை நோக்கி
வேதமுறை யேமுருகன் வேட்டருள வுன்றன்
கோதைதனை யன்பொடு கொணர்ந்திடுதி யென்றார். (௩௩)

வேறு.

அங்கது பொழுது தந்தை யனுமதி செய்ய யானை
மங்கைநல் லையை காப்ப மாதர்பல் லாண்டு கூறக்
கங்கைகள் கவரிவீசக் கவிகைக ணிழலைச் செய்யப்
பங்கய மாது போற்றப் பாரதி பரவ வந்தாள். (௩௪)

வந்திடு தெய்வ மங்கை மணவினைச் சாலை நண்ணிக்
கந்தவேள் செய்ய பாத கமலமுன் வணங்க வன்னோன்
முந்துறு தவிசின் றன்பாங் முற்றிழை யிருத்தி யென்ன
விந்திரை முதலோர் யாரு மேத்திட விருந்தா ளன்றே. (௩௫)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தநற் பொழுதிற் செவ்வே ளிறைவனைத் தாழ்ந்து தேவி
பெருந்தடம் புனலைப் பெய்யப் பொன்னடி விளக்கிச் சாந்தும்
விரைநறு மலருஞ் சாத்தி வியன்கடன் பலவுஞ் செய்து
பொருவரு மகிழ்ச்சி பொங்கப் புலவர்கோன் பூசை செய்தான்.()

பூசனை புரிந்த பின்னர்ப் போற்றருஞ் சரத்தின் கையைப்
பாசம தகன்ற வேற்கைப் பண்ணவன் சரத்துள் வைத்து
நேசமோ டளித்தே னென்று நெடுமறை மனுக்கள் கூறி
வாசநல் லுதக முய்ப்ப மகிழ்வுட னவனு மேற்றான். (௩௭)

தருப்பைமா விலையி னோடு சதுர்முக மறையோ னாங்கு
விருப்பமா ரரணிச் செந்தீ மேகலைக் குண்டத் திட்டே
யருப்புபல் சமிதை யுஞ்சேர்த் தாச்சியஞ் சிருக்கின் வாக்க
வுருப்பவெந் தழல்மிக் கோங்கி வலஞ்சுழித் துயர்ந்த தன்றே. ()

மறையவர் வாழ்த்து மல்க மங்கல மியங்க ளார்ப்பக்
குறையகன் றுலக மெல்லாங் கூறுணைக் களிப்பின் மூழ்க
நறைமலர்க் கடப்பந் தாரோ னலங்கொண்மங் கலத்தி னாணை
யிறைவியின் கண்டந் தன்னி லெழில்பெற வணிந்தா னன்றே. ()

மின்னிய வேலோன் முன்னர் மிகுமது பருக்க நல்கி
முன்னிய சுரர்முன் யாரு முத்தவா லரிசி வீசித்
துன்னிய மகிழ்ச்சி மேவச் சொலற்கரும் பேரா னந்த
நன்னிய மத்த ரானார் நாமினிப் புகல்வ தென்னே. (௪0)

பிரியநா யகியின் கையைப் பிறங்குதன் கையாற் பற்றி
யெரியினை வலமாய் வந்தே யிணையதாப் பொறிக ளட்டித்
தெரியவோர் கையாற் பற்றிச் சீறடி யம்மி சேர்த்திப்
பிரியமாய்ச் சாலி காட்டிப் பெருமணச் சடங்கு தன்னில். (௪௧)

மற்றுள சடங்கு முற்றும் வழுவற முடித்துச் செவ்வேள்
சிற்றிடை மாதி னோடு திருத்தந்தை யைத்தாய் தன்னை
முற்றிய வன்பி னோடு மும்முறை யடியிற் றாழப்
பெற்றதின் மகிழ்ச்சி தூங்கப் பேரருள் செய்தா ரன்னோர். (௪௨)

அறுமுகக் கடவுட் டன்னை யணங்கினை யரிமுன் னானோர்
முறைமுறை வணங்கி யேத்தி மலரடி முடிமேற் கொள்ளக்
கறைப்பில் கண்டன் யார்க்குங் கண்ணருள் புரிந்து பின்னர்ப்
பிறைநுதற் கவுரி யோடும் பொள்ளென மறைந்து சென்றான். ()

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குசிற் றிடையா ளோடு வேலவன் காட்சி நல்கி
யுளங்கனிந் தியாரும் போற்ற வுவளகஞ் சென்று ளந்த
வளங்குலா மணத்தைக் காலை வந்தவர் கண்டு வாழ்ந்து
துளங்கலில் பேறும் பெற்றுத் தூயபல் திணையுங் கொண்டார். ()

முகிலினை யூரும் வேந்தன் முசுகுந்தன் முதலா வுள்ள
மகிதல மன்னர்க் கெல்லாம் வளம்பெறுஞ் சுரபி யீந்த
சுகமுறு முணவை நல்ல சுவையுட னருந்தி மேலாந்
துகின்மணி யார மின்ன தொகைபெற வழங்கி னானே. (௪௫)

மன்னவர் திசையி லுள்ளார் வானவர் விடையைப் பெற்றுத்
தந்நக ரடைந்து மேலாந் தகுதியை யடைந்து வாழ்ந்தார்
தன்னுறு துணைவி யோடு சதமக னினிது சின்னாட்
பன்னுறு போக மூழ்கிப் பாங்கரி லிருந்தான் மன்னோ. (௪௬)

பின்னொரு வைக றன்னிற் பிறங்குவேற் கரத்தோன் றானுந்
தன்னுறு துணைவி யோடு சதமகன் றன்னை யேனைப்
பன்னுறு தேவர் தம்மைப் பழுதறு நாக நாட்டிற்
றுன்னின ரிருப்ப விட்டுச் சொல்லரு மகிழ்ச்சி கொண்டார். ()

தருப்பொலிந் திலங்கு சோலைச் சாரலின் மஞ்ஞை யாடுந்
திருப்பரங் குன்று தன்னிற் றிருந்திழை யோடு வாழ்ந்து
விருப்புடன் மலையி னீங்கி வெள்ளிமால் வரையிற் சென்று
பருப்பத மங்கையோடு பரமனைப் பணிந்து போற்றி. (௪௮)

தந்தையுந் தாயு மான தம்பிரான் கருணை பெற்று
மந்திரந் தணந்து சென்றம் மால்வரை யொருசார் வைகுங்
கந்தவெற் படைந்து செவ்வேள் கணமணிக் கோயில் புக்குப்
பந்துசேர் விரலா ளோடு பருமணித் தவிசி ருந்தான். (௪௯)

குவிமுலைக் களிநல் யானைக் கோற்றொடி நல்லா ளோடு
மலிரொளி வேற்கை வள்ள லாயிடைச் சின்னாள் வைகி
யவனியங் கிருத்திக் கொண்ட வமரர்கள் வளங்க ளோங்கிப்
புவிபுகழ் தணிகை வெற்பிற் போந்துவீற் றிருந்தா னன்றே (௫௦)

மகதியாழ் முனிவன் செவ்வேண் மலரடி வழிபட் டாற்றத்
தகவுறுந் தணிகை வெற்பைச் சார்பவ னிதணி ருந்து
பகரருந் தினையைக் காக்கும் பைந்தொடி மாதைக் கண்டு
புகலுறு மணஞ்செய் யென்று போந்தனன் றணிகை யோங்கல். ()

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரிசறு குமரா தீர்த்தங் காதலின் முழுகிப்போந்து
தரியலர்க் கடந்த நாதன் றாட்டுணை வணக்கஞ் செய்து
கிரிகளுண் முருகா நிற்பக் கின்னர மவச மாகப்
புரிதரு வீணை கொண்டு புத்தமு தொழுகப் பாடி. (௫௨)

எந்தைநீ யிதனைக் கேட்பா யியம்புவ தொன்று மற்றுண்
டிந்தநன் மலையின் மேல்பா லெயினர்வாழ் சீறா ரென்பர்
கந்தமார் குரவு கொன்றை கூவிளை காந்த ளோடு
சந்தகில் கணித டேக்கந் தருநிறை தருமேற் பாடி. (௫௩)

அப்பதிக் கொருசார் தன்னி லணிகெழு கிரியின் மீது
செப்பரும் பொன்மான் பெற்ற திருந்திழை வேடர் கோமான்
வைப்பெனக் கண்டு போற்றி வளர்த்திட வளர்ந்தே யன்னா
ளிப்புவி யெயின வாழ்க்கைக் கிசைபுனங் காவல் கொண்டாள். ()

இதண்மிசை யிவர்ந்து தட்டை யெறிநெடுங் கவணை கொண்டு
புதன்மறைந் தடுக்கு மஞ்ஞை புள்ளிமான் கிளிகண் மற்றுங்
கதிர்படு புனத்தி னீங்கக் கருதியா லோல மென்று
சுதைநிகர் மொழியா லோப்பிச் சூழ்ந்தன ளிருந்தா ளன்றே. ()

தன்னையே நிகரு மந்தத் தையலின் கவினை யானு
மென்னென வுரைப்ப னீங்கே யாரையே யுவமை சொல்வே
னன்னமங் கைதனை நீயே யணைவதற் குரியை யென்று
நன்னய மொழியி னாலே நாரதன் வணங்கிச் சொன்னான். (௫௬)

கேட்டனு மகிழ்ந்து செவ்வேள் கிட்டினன் வள்ளி யோங்கல்
வாட்டடங் கண்ணாள் மேனி வனப்பிடை வைத்த சிந்தை
மீட்டில னாகி வேலோன் விளங்குதன் னுரும றைத்து
வேட்டுவக் குலத்து வந்த வேங்கென வடிவங் கொண்டு. (௫௭)

வாரணி கொங்கை மாதின் வளரிள நலந்தா னுண்டு
தாரணி தன்னி லின்பந் தருகள வொழுக்க மோங்கப்
பூரண முதல்வன் சின்னாட் போக்கினன் களவின் பின்னர்த்
தாரணி வேலோன் றானுந் தையலை வதுவை செய்தான். (௫௮)

மங்கலச் சடங்கு தன்னில் விதிமுறை யங்கி சான்றாய்
நங்கையை வதுவை செய்து நானிலம் புகழு மாறு
பங்கமி றணிகை வெற்பிற் பாங்குட னயர்ந்து சின்னாட்
டுங்கமார் கந்த வெற்பிற் றுணைவியுந் தானுஞ் சென்றான். (௫௯)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தவெற் படைந்து செவ்வேற் கந்தவே ளெயினர் மந்து
மிந்திர னருளு மாது மிருபுடை யமர்ந்து மேவி
யந்தரஞ் சிறிது மின்றி யன்புட னளவ ளாவிச்
சிந்தையு மொன்றாய் வைகச் சிறப்புடன் வீற்றி ருந்தான். (கூ0)

திருமணஞ் செய்து வைவேற் சேயவ னுலகுக் கெல்லாம்
பெரிதுமங் கலங்க ளீந்த பெற்றியைச் சுருக்கிச் சொன்னே
மிருபெரு மாத ரோடு மிலங்கையிற் கதிரை மேவு
மொருபெருஞ் சிறப்பு மீங்கே யொருவகை கூறு வோமால். ()

திருமணப்படலமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம். 504

---

# மீட்சிப்படலம்.

ஓமென்னு மறைமுதலா முற்கீதத் துயர்பொருளைக்
கமல மேலோன்
சீர்மன்னு மலயமுனி சிவபிரானென் றிவர்தமக்குச்
செப்பி னானைக்
கார்மன்னு கந்தவனங் கந்தகிரி கதிர்காமங்
கோயில் கொண்ட
தூமன்னு சுடர்வேலோன் றுணைமலர்த்தாள் சென்னிமிசைக்
கொண்டு வாழ்வாம். (க)

வேறு.

இந்திர னயன்மால் விண்ணோ ரிருங்கழல் வீர வாகு
வந்தமி லிலக்க ரெண்ம ரார ணமுனிவர் யாரும்
வந்தனை செய்து போற்றி வழிபட வவர்கட் கெல்லாஞ்
சிந்தித்த வரங்க ளீந்து திருக்கிளர் கந்த வெற்பில். (உ)

இருந்தருள் காலந் தன்னி லிருஞ்சுடர்ச் செவ்வே லண்ணன்
முருந்துறழ் மூரன் மாதர் மொய்குழற் றேவி மார்க
டிருந்தடி வணங்கிக் கேட்பச் செப்பினன் கதிரை யென்னும்
பெருந்தல மகிமை யெல்லாம் பிராட்டியர் மகிழ்ந்து கேட்டார். ()

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டருள் மார்தர் தாமுங் கிளர்கட லயில்வேற் பெம்மான்
றாட்டுணை பல்காற் றாழ்ந்து ரகுபதி யதனைக் காண
வேட்டனை மங்க ஜானகி வசிக்கவு மெண்ணங் கொண்டோம்
பாட்டளி முரலுங் காவோய் பண்ணவர்க் கிறைவ வென்றார். (௪)

என்றரு டேவி மார்க்க ளெழின்முக நோக்கிச் செவ்வே
ளின்றுநீர் மனத்துட் கொண்ட வெண்ணமு நன்று நாமுஞ்
சென்றவ ணிருக்கக் காணச் சிந்தையி லெண்ணங் கொண்டோந்
துன்றிருங் குழலீ ரென்றான் றேகைமேல் வருவோன் றானே. ( )

சுனைகளிற் குவளை பூக்குஞ் சாரலை யுடைய தாகப்
புனைதரு கந்த வெற்பிற் பொலிவுறு நகரி னீங்கி
மனைவிமா ரிருவ ரோடு மயின்மிசை யிவர்ந்து சென்று
கனைகழல் வீரர் போற்றக் காசினி மருங்கு வந்தான். (௬)

தேசங்க ளைம்பத் தாறிற் சிங்கள தேச மோங்கப்
பாசங்கண் மூன்று நீங்கிப் பல்லுயிர் முத்தி யெய்த
நாசமில் பதிக டம்மி னலந்தரு கதிரை யோங்கத்
தேசுறு கூர்வேற் பெம்மான் றென்றிசை நோக்கி வந்தான். ( )

வழியிடை விளங்கு கின்ற விலங்கலுந் தலமு நீங்கிப்
பழிதப மறைகள் போற்று பழம்பதி யதனைச் சார்ந்து
மழைதரு பவள முத்த மணியொடு சங்க மின்ன [ன்.
விழைவுறு பொருள்க டோன்றும் வியன்கடற் கரையடைந்தா

வருணன்செய் காவல் பெற்று வயங்கிய நெய்த லின்வாய்ப்
பொருளினை யீட்டு மாறு போக்குறு தோணி தானு
மருவிய சரக்கை யேற்றி வருபெருந் தோணி யோடு [ன்.
மொருவுறு தடுத்தே யொன்றி னொடொன்று மோதக் கண்டா

மிக்குள கைதை யோடு விரவிய ஞாழல் புன்னை
தொக்குள நெய்தல் கண்டற் றாட்டித ழடம்பா மின்ன
வொக்கவே வீசுந் தோறு முற்றவா சனையொன் றாகிப்
புக்குல வுதவி னெங்குப் புலான்மண மொழியக் கண்டான். (௧௦)

முண்டக மலரைச் சூடி மீனொடு சங்க முப்பு
மண்டிய விலைகைக் கொண்டு வளம்பெற வேட்டோர்க் குய்த்து
மிண்டிமீன் கவர்புள் ளோப்பி வியன்பெரும் பாக்கத் துள்ள
தெண்டைவாய்ப் பரத்தி மார்க டொழிலுறு மங்கட் கண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னன பலவுங் காணூஉ வேந்திழை யவர்க்குங் காட்டித்
துன்னிய திரைகள் வீசுந் தொடுகடல் கடக்கு மாறு
பொன்னியல் கலத்தா லென்று புந்தியி லெண்ணி வானோர்
கொன்னுறு தச்சற் கூவி மரக்கலங் குயிற்று கென்றான். (௧௨)

ஆழியிற் கலத்தாற் செல்லு மாடலை யிதயத் தெண்ணி
மாழையங் கண்ணா ரான மனைவிய ரிருவ ரோடு
மூழியி னழித லில்லா வொருமரக் கலமே லேறி
வாழிய வூறு தீர்ந்து வளம்பெற வோடு கென்றான். (௧௩)

ஆடியற் கொடிக ளோங்கி யணிகிளர் கூம்பிற் பாய்மேன்
நீடுறு காற்றுக் கொள்ள விளையவ ரேத்த முந்நீர்க்
கோடுநற் பறையு மார்ப்பக் கொழுவிய பவளங் கொல்லா
வோடுறு களிறு போல வோடிய தினிது மாதோ. (௧௪)

திரையெறி சங்கு நாவாய் தாக்கலிற் றிரண்ட முத்தங்
கரைகட லதனுட் காலக் கணைபிற கொழிய முந்நீர்
வரைபது கிடந்து கீண்ட தெனும்படி கோடை வீச
நிரைபட விடறிப் பாய்ந்தே நெடுவிசை கொண்டு செல்ல. (௧௫)

மூன்றரைக் காத தூர முன்னுறு மீழ நாட்டி
னேன்ற தோர் வடபா லெல்லை யிலகுபொற் பணைக டோன்றத்
தோன்றலுங் கண்டு காட்டத் தோகைய ரிருவர் கண்டா
ரான்றபரி சனர்தாமு மகமகிழ் வினோடு கண்டார். (௧௬)

திங்களங் கண்ணி வேய்ந்தோன் றென்கைலை சுயம்பு நாத
மங்கள நிறையுங் கந்த வனமொடு வாரி யப்பர்
தங்கிய நகர மாதி தலம்பல விளங்கி யோங்குஞ்
சிங்கள மென்னுந் தீவின் வடகரை சார்ந்த தன்றே. (௧௭)

ஆடகப் பசும்பொன் கொண்டே யணிபெற வியற்று நாவா
யாடகம் விளையுந் தீவை யணுகலு மரிவை மாரோ
டேடகக் கடப்ப மாலை யிறையவன் றேவர் சூழ
நாடக மென்றே யாரு நவிலுறக் கரையி ழிந்தான். (௧௮)

வேறு.

காங்கேய னிறங்கியதோர் காரணத்தா லிவ்வுலகங்
காங்கேயன் றுறையென்று கூரையதனைக் கூறுமா
லாங்ககன்று பெருமானுங் கந்தவன வரும்பதியைப்
பாங்குடனே சென்றடைந்தான் பரிசனர்கள் யாருஞ்சூழ. (௧௯)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தவனக் கடவைதனிற் கடவுளர்தங் கம்மியன்செய்
மந்திரத்தின் விறலரிசோண் மணித்தவிசின் வீற்றிருப்ப
விந்திரனு மயனரியு மேனையரு நற்குமார
தந்திரநூல் விதியறிந்து தகுபூசை புரிந்தனரால். (௨௦)

வேறு.

அடியவர்க் கன்ன மீயு மருந்தவ மடங்க ளோங்கிப்
படிபுகழ் காலந் தோறும் பழுதறப் பூசை செய்து
மிடிதப வாண்டு தோறும் விழாக்களுஞ் சிறப்பிற் பல்கக்
குடிகளுக் கிதஞ்செய் கந்த கானனங் குலவி யோங்க. (௨௧)

விண்ணுறை வானோர் செய்த வியன்பெரும் பூசை யேற்றே
யுண்ணிறை மகிழ்ச்சி தன்னோ டுயர்வர மவருக் கீந்து
புண்ணிய சீலர் வாழும் பொற்பதி யதனை நீங்கித்
திண்ணிய தோணி யேறிச் சார்ந்தனன் கோண சைலம். (௨௨)

கோணமா மலையுங் கந்தக் குன்றமுஞ் சமனை யோங்கல்
காணினுந் துன்ப நீங்குங் கண்டகி வடகாந் தார
மாணுறு முகந்தை யென்னு மலைகளிற் சென்று தங்கிச்
சேணுறு கதிரை யோங்கல் சென்றினி திருந்தா னன்றே (௨௩)

உலகருள் கருத்தி னோடு மொள்ளிழை மனைவி மார்த
மிலகிரு புடையு மேவ வெஃகவேற் பெருமான் சோதி
குலவிய குன்றந் தன்னிற் கொடுமுடி யகலா தென்று
மலகில்ப ரிசனர் போற்ற வற்புதஞ் செய்தி ருப்பான். (௨௪)

வேலவ னேறிச் சென்ற வியத்தகு நாவா யின்றும்
ஞாலமே லவருங் காண நல்லுகத் தகிரிப் பாங்கர்ச்
சாலவுங் கல்லே யாகிச் சமைந்துள தாங்க ணுள்ள
சீலர்க ளதன்பேர் தேவந் துறையெனச் செப்பு வாரே. (௨௫)

கந்தவெற் பிருந்த செவ்வேள் கதிரையின் மலைக்கு மேலே
வந்தவா புகன்றே மன்னு மாதவர் கேட்ப மேலு
மந்தமா னியத்தைச் சொல்வோ மன்புடன் கேட்பீ ரென்று
சிந்தனைக் கரிய வோங்கற் சிறப்பெலாம் விரித்துச் சொல்லும். ( )

மீட்சிப்படலமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 530.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமசைலமான்மியப்படலம்.

வளங்கு லாவிய வான்பதம் விரும்பினு மாவி
துளங்க மேவிய தொல்வினை மாய்ந்தொழிப்பில் வீட்டி
னுளங்கு லாவுற நினைப்பினு மொல்லையுய்த் தருளும்
விளங்கு சோதிகா மத்திரு விலங்கலைப் பணிவாம். (௧)

வேறு.

இருக்குமுதன் மறைகளெல்லா மியம்பியதோ ரீழஞ்சேர்
திருக்கதிரை மலைமகிமை திகழுமுக்கட் பரஞ்சோதி
மருக்கமழுங் கொன்றைமலர் முடிமீது தரித்தபிரான்
பருப்பதமா துமைமங்கை பணிவுடன்கேட் டிடப்பகர்ந்தான். ()

வேறு.

திரையெறி திருப்பா லாகித் திகழ்கடற் பள்ளி கொள்வா
னுரைசெறி கருட னுக்கு முயர்வுறு சேட னுக்கும்
புரைதப வுரைத்தா னந்தப் புண்ணிய சரிதந் தன்னை
விரைசெறி மலர்மே லுள்ளான் வலப்பகைக் கருளிச் செய்தான்.

ஐங்கரன் கணங்கட் கோத வறுமுக னகத்தி யற்குப்
பங்கமின் றுரைத நல்ல பிருங்கிநா ரதற்கு ரைப்ப
வெங்கத நிறைந்தோ னான வீரமா காள னென்பான்
றங்கஞ்சேர் பிருகு வோடு சதானந்தன் றெரியச் சொன்னான். ()

காசிப முனிவ னென்பான் கவுசிக முனிக்கு ரைத்தான்
சாசக றதீசி தானுங் கண்ணுவன் புலக னென்னு
மேசலில் முனிவ ராமோர்க் கிசைத்தன னிதனை யென்பர்
தேசுறு முனிவ னான சைமினி பகவான் மன்னோ. (௫)

குருநகர் மாந்த ருக்குக் கூறினன் குற்ற மில்லா
மிருகண்டு மகனும் வேறு முனிவருக் குபதே சித்தான்
பரமுறு மனத்த னான பராசர வறிஞன் கூறத்
தெருளுறு வியாத னென்பான் றெளிந்தன னன்பி னோடும். (௬)

நந்தியந் தேவன் கூற நற்றவச் சனக னாதி
முந்துறு நால்வர் கேட்டார் மேதகு வியாதன் கூற
வந்தமில் சுகதூர் வாச ராமருந் தவர்கள் கேட்டார்
சிந்தனைக் கரிய காம சயிலமா மகிமை தன்னை. (௭)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமிகள் கருணை யாலே நவிலுவ முனிவிர் கேண்மின்
கரமரு கயிலை மேரு கந்தமா தனமா மோங்கன்
மாமரு நிடத மோடு மந்தர மிந்து சைலந்
தூம[illegible]ருங்கி யோங்க ரெல்குல கிரியி னோடும். (௮)

இமயமே கதிரை யோங்க விவையெலாந் தம்மு ளொக்குஞ்
சமழ்று மிவற்றி னுள்ளுஞ் சாற்றிடிற் கதிரை யோங்க
லுமையொடு நாதன் போல வுத்தம மாகுங் கண்டீ
ரிமையவர் போகம் வீடா மிரண்டுமே தருவ தாகும். (௯)

ஆதலின் வெற்றி வேலோ னமர்தரு சோதி காம
மேதகு சரிதந் தன்னை விளம்புவங் கேண்மி னீவிர்
பேதமில் மாணிக் கப்போர்ப் பிள்ளையார் மலையி னோடு
மோதசிர் வீர வாகு வுறைதரு மேலா மோங்கல். (௧0)

வெள்ளிய யானை போற்றும் விமலையின் மலையும் வேற்கண்
வள்ளியின் மலையும் வேறு மலைகளுஞ் சூழ நாப்பண்
முள்ளுடைக் கமல வாவி மேதினி புகழ வோங்கி
யள்ளிலை வேற்கை நம்பி யமர்கிரி விளங்கா நிற்கும். (௧௧)

திங்களின் சோதி தாங்கித் திகழ்பெய ரஞ்சு காம
மங்கியின் சோதி தாங்கி யதன்பெயர் சோதி காமம்
வெங்கதிர்ச் சோதி தாங்கி வியனகதிர் காம மென்பார்
செங்கடம் புணியு நாதன் றிகழ்கிரி நாமங் கூறின். (௧௨)

திங்களு மங்கித் தேவுந் தினகர னோடு மூன்று
துங்கசுற் சுடர்கள் வீசுஞ் சோதியைத் தன்பாற் கொண்டு
பொங்குபே ரொளியை வீசிப் பாரினிற் சோதி யாகி
யெங்கணும் புகழ்ந்து போற்ற விலகுறுங் கதிரை யோங்கல். ()

காரிய மான யாவு கடன்மலை தலங்க ளெல்லாம்
பாரி[illegible] வூழி தன்னிற் பகுதியி லொடுங்கா நிற்குஞ்
சீரிய சிவனே மன்னிச் சிறப்புடன் விளங்கா நிற்ப
னேரியல் சோதி காம மிவனென மன்னி நிற்கும். (௧௪)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியி லுலக மெல்லா மொடுங்கவு மொடுங்கா னாகி
வாழிய பரமன் றானும் வயங்குவ னதுவே போல
ஆழியிற் கதிரை யோங்க லொடுங்குறா தோங்கு மென்றா
லாழிசூ ழவனி தன்னி லதற்கிணை பிறிதொன் றுண்டோ. (கரு)

மழைதவழ் மலையின் மீது மதகய முலவு மோர்பாற்
கழைநுனி யிருந்து மஞ்ஞை கவினுற வாடு மோர்பால்
விழைவுறு கவரி மாக்கள் விளங்குவ திரியு மோர்பாற்
குழைவுறு மடம்பு வேங்கை காரகில் குலவு மோர்பால். (ககூ)

நாணல்கள் வளர்ந்து மல்கி நாற்புறஞ் சூழ்ந்து மன்ன
மாணுறு நடுவே நல்ல மணிமய கமல மீது
பேணுசூ ரியர்க ளானோர் பலர்முன்பு சோதி வீசிக்
காணுறு மணியைப் போலக் கவினுமச் சிகர மன்றே. (கஎ)

ஞாலமே லோங்கி நீண்டு நனிபரந் திருத்த லானுஞ்
சாலவு மிரண்டு கூறுஞ் சராசர மமர்த லானு
மாலயன் மகவான் வானோர் வழிபட்டு வணங்க லானு
நீலமார் மிடற்ற னான நெடுந்தகை நிகரு மன்றே. (கஅ)

பன்னிய வுலகத் துள்ள பருப்பதந் தம்மு ளோங்கித்
துன்னிய கதிரைச் சைலந் தொகுமணி நிறைத லானு
மின்னிய முகிலின் சால மேற்படிந் துறைத லானும்
பொன்னியல் மார்பு கொண்ட புண்ணியன் போலு மன்றே. (ககூ)

தேன்பயில் மலரின் மீது தோன்றலாற் பரிசுத் தத்தா
னான்மறை முகங்க ளோத நன்மனுத் தீர்த்த நண்ணி
வான்குலாங் கொடியாம் பூணூன் மேகமான் றோலுங் கொண்டு
கான்குலாங் கமலத் துள்ள கடவுளு மொக்கு மன்றே. (உ0)

பிரமனு மாலு முன்னாட் பதமுடி தேடிச் செல்ல
வரமுறு சோதி யாகி வானெழு கிரியைப் போலப்
பரமுறு சோதி யாகிப் பார்மிசை நிற்ற லாலே
திரமுறு மிதனைச் சோதி திகழ்சைல மென்னுஞ் சொல்வர். (உக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரைமிசை மலைகட் கெல்லாந் தனியர சாகி யோங்கிக்
கரையுறு பெருஞ்சீர் கொண்ட கதிர்காம மலையின் மீது
புரைமதி படிந்து போற்றப் பொலிதலாற் கருணை கொண்ட
வ[illegible] டன்னை யொக்கு மன்னிய முனிவிர் கேண்மின். (உஉ)

மாங்குயில் கூவத் தோகை மாமயி லகவி யாட
வாங்குழை வாணி யோடு மலர்மக ளுறைத லாலே
பாங்குட னன்னோர் வாழும் பருப்பதம் வைகுண்ட லோக
மோங்குசத் தியமா லோக மொளிர்சோதி காம சைலம். (உ௩)

சித்தர்கள் ஞான யோகர் சிவமுணர் சீவன் முத்தர்
பத்தர்க டெய்வ மூலி படர்ந்துறை தன்மை யாலே
மெத்திய சோதி யாகி மிகுகதிர் காம சைல
நித்தனு முனிவன் வாழு நிகரறு பொதிய மாகும். (உ௪)

தேவர்தன் பகற்ற லானுஞ் சிந்துவி ளிருப்ப தாலுந்
தேவர்கட் கிதலா னுந் தெய்வமந் தரமு மானும்
தேவர்கள் வசிப்ப தாலும் பொன்னெனத் திகழ்த லானு
மேவரு நுழைத லாசா வெழிலுறு மேரு வாகும். (உ௫)

வேறு.

துன்னு நல்வளம் பலவுள சுனையிட மெங்கும்
பொன்னந் தாமரைப் புதுமலர் விண்டுதே னொழுக
வன்னம் பார்ப்பொடு தழீஇயமர் கிரியத னுப்பட்
பன்னுஞ் சூரியர் பலரென மன்னுமோர் கோயில். (உ௬)

வேறு.

சோதி சேருஞ் சுடர்மணிக் கோயிலி
னாதி யான வரியணை மீமிசை
மாத ரார்க ருளிபுடை மன்னுற
நாத னுங்குக னன்றமர்ந் தானரோ. (உ௭)

வேறு.

மானுறு கோயில் சிந்தா மணியெனும் பெயரா லோங்குங்
கானுறு கடவுள் பேருங் காமேச னுக மங்குப்
பேணினர் வணங்கு வோர்கள் பெறுகுவர் நினைந்த வெல்லாங்
காணுவா மிதுவே போலத் தரணியி லுளதோ வொன்று. (உ௮)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி கணங்கள் காரி கணங்களும் வீர பத்ரன்
கணங்களும் வீர வாகு கணங்களுங் கால ருத்ரன்
கணங்களும் வைர வன்றன் கணங்களு முருத்ரன் மாய
னணங்குமை பொருளின் செல்வி யயனொடு வாணி யின்னும். ()

இந்திரன் மனைவி தேவ ரியப்பு முப் பான்முக் கோடி
கந்தர்வர் வசுக்க ளெண்மர் இபகங்கள் மருத்து வர்கள்
சந்திரன் பகலோ னுள்கோள் தாரகா கணங்க ளோடுங்
சுந்தர வரம்பை மாதர் சாரணர் சுரரே சித்தர். (கூ0)

இயக்கர்பை சாசர் தாமு மிராக்கத ரெழுவர் மாதர்
வியப்புறு சயையி னேடு விசயையுமுற் கலவ சிட்டர்
நயப்புறு வியாசன் கர்க்க னாதன் மார்க்கண் டேயன்
பயக்குறு சுமந்து வென்பான் பிருங்கியே பிருகு தானும். (கூக)

ஆரிதன் றதீசி யென்பா னகத்தியன் கபிலப் பேரோன்
பாரதச் சைமினி யாசான் பாாசரன் புலகன் றானுந்
தாரணி புகழு நால்வர் சனகனை முதலோர் தாமும்
பூரண முதல்வ னுடல் போற்றின ரிருப்பா ரன்றே. (கூஉ)

தண்பொழிற் கதிர்கா மேசன் றாண்டவம் புரிதல் கண்டு
மண்டுபே ரன்ப ராகி மலைமிசை யிருப்பர் நீங்கார்
தொண்டருக் கருள்செய் கின்ற தூயவன் வடிவே சைலங்
கொண்டுள வடிவ மென்றாற் கூறுவ தினிநா மென்னே. (கூங)

அம்மலைப் பெருமை யாரே யறைகுவ ராதிசேடச்
செம்மலும் வல்ல னுகான் றரணியில் யாவ ருள்ளார்
அம்மையி லெண்ணில் கால மாற்றிய தவப்பே றுற்ற
விம்மையிற் கதிரை நண்ணி யிக்கிரி காண லாமே. (கூச)

ஐம்பொறி யடக்கி வாழு மந்தணீ ரினிது கேண்மி
னம்பரன் சோதி சைல மான்மிய நவின்றே மந்தப்
பம்புசீர்ப் பதியை நண்ணிப் பகர்கங்கை மூழ்கிச் செவ்வேள்
செம்பது மத்தாள் சேர்ந்த திருத்தொண்டர் சரிதஞ் சொல்வாம்.

கதிர்காமசைலமான்மியப்படல முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 565.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபகீர்த்திமுத்திபெறு படலம்.

விண்ணவ ரியக்கர் சித்தர் விஞ்சையர் கருடர் நாகர்
மண்ணவ ரெவருநம் போற்றி வழிபட வன்னோர்க் கெல்லா
மெண்ணிய வரங்க ளீந்தே யெண்ணிலற் புதங்கள் செய்து
புண்ணியக் கதிரை வாழும் புங்கவன் பாதம் போற்றி. (க)

வாய்ந்ததன் பழனஞ் சூழ்ந்து விளங்கிய பொன்னி நாட்டி
னேய்ந்தசீர் மறையோர் வாழு மெழிற்பதி யிணர்ப்பூங் கொன்றை
தேய்ந்ததோர் மதியும் பாம்புந் திகழ்தர முடியின் மீது
வேய்ந்தவன் மன்னி நீடு வாஞ்சிய மாகு மன்றே. (உ)

வயலெலாங் கதிர்ச்செஞ் சாலி வரம்பெலாங் கழுநீர்க் கற்றை
யயலெலா மகஞ்செய் சாலை யணையெலாம் வளையின் முத்தம்
புயலெலா மலர்ப்பூஞ் சோலை புறமெலாம் வேத கீதம்
செயலெலாம் பரன்சீர் செப்ப றெருவெலா மவனை வாழ்த்தல். ()

மருவிய திருவின் மிக்க வாஞ்சிய மதனில் வாழ்வா
னருமறை முந்நூன் மார்ப னபகீர்த்தி மறையோ னென்பான்
வருகுல வொழுக்கம் பேணான் மாதர்மேல் வாஞ்சை வைப்ப
மருமலர்க் கணைக ளெய்து மாரனும் வருத்தி னானே. (ச)

கொலையொடு களவுங் கள்ளுங் காமமும் பொய்யு மற்று
நிலையெனப் புரிந்து நாளு நேர்மைதா னிலனாய் வாழ்வான்
புலையனைப் போல வன்னான் புலாலையே விரும்பி யுண்பா
னுலையுறு மெழுகைப் போல மாதர்பா லுருகி னைவான். (ரு)

மெய்பெறு மெழுத்தை யாக்கு மழலைவா யினிய மொழித்
தையலார் நோக்க மென்னுந் தனிவலைப் பட்டு மாழ்கி
மெய்வரு போகந் துய்த்து மெச்சிய காமத் தீயு
நெய்பொழி தீயைப் போல நாடொறும் வளர்ந்த தன்றே. (சு)

பூசுர மகளி ராதி புலையர்தம் மகளி ரீறாய்
வாசமென் கூந்தல் வேற்கண் மதிமுக மாதர் தம்பா
லாசையுற் றன்பு செய்து மறைந்திடு வலியி னீழ்த்துந்
தேசுறு பொருள்க ளீந்து சேர்ந்துநீ டின்ப மார்வான். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தைதாய் தமர்கள் கூறுஞ் சொல்லையுஞ் சற்று நோக்கா
னந்தியின் மனுவை யோதா னஞ்செழுத் தயர்த்தான் மேலா
மந்தண வொழுக்க மான வறுதொழி லகன்று நீங்கச்
சிந்தையிற் பெரியோர் தம்மைச் சிறிதுமே மதியா னன்றே (அ)

டார்வள ருர்க டோறும் படர்ந்தன னேகி யாங்கும்
வாரிளங் கொங்கை மேவு மாதரை நாடி நண்ணு
மார்வ நெஞ் சுடைய னாகி யணைந்துபே ரின்பத் தாழ்ந்து
பேருறு காம மென்னும் பெருங்கடற் படிந்தான் மன்னோ. (கூ)

பிறர்மனை நயக்கும் பாவி பெரியரை யலைக்குந் தீயன்
பிறர்பொருள் கவரும் புல்லன் பொய்மிகப் புகலும் வாயன்
குறவரி னொழுகு மின்னேற் கொல்லுமின் புடைமி னெங்க
ளுறவினர் நகைக்க வீந்த வூரவர் பழிக்க வென்றே. (க0)

சுற்றமு நண்பு மாகிச் சூழ்ந்தவர் தொடர்ந்து தீயற்
பற்றினர் கொடிய தண்டம் பதைப்புறச் செய்ய வன்னோன்
மற்றிவர் காணாத் தேய மன்னுவ னினிமே லென்று
தெற்றென வுணர்ந்து வேறு தேயத்திற் சென்றா னன்றே. (கக)

முள்ளுடைப் பலவின் றேங்கொண் முதிர்பழங் கொண்டு கீறி
விள்ளுறச் சுளையைத் தேர்ந்து விரும்பிய துணைவிக் கூட்டி
மெள்ளவே யூடறீர்க்கும் வியன்கடு வன்வாழ் சோலை
நள்ளுறு வனப்பு வாய்ந்த சேரமா நாட்டிற் சென்றான். (கஉ)

நாட்டினுட் புகுந்து தீயோன் நன்மணி முத்து மாலை
கூட்டளி முரலுந் தேந்தார்க் கோவினைக் குறிப்பிற் கண்டு
நாட்டமே லோங்க வீந்து நல்லருள் சுமந்தோ னாகிக்
கோட்டமில் குணத்தான் போலக் கோவினுக் கிசையுமாறு. (கங)

போற்றவே யொழுகிப் பின்னர்ப் புரோகித னாகிச் சின்னா
ளேற்றமந் திரியு மாகி யிருந்தனன் தீயன் றானுங்
கூற்றநே ருயிர்கள் போலக் குடிகளு மன்னன் சொல்லு
மாற்றங்கேட் டஞ்சி மாழ்கி மன்னிய கவலை கொண்டார். (கச)

மன்னனைத் தன்பா லாக்கி மன்னுயிர் வெறுப்பச் செய்து
மன்னுறு கரும மெல்லா மனத்தினுக் கியைந்த வாறே
தன்னதா மாணை யாலே சகத்தினை வருத்தி யன்னோன்
தன்னையே மதித்து வெய்ய தருக்கினை யடைந்தான் மன்னோ. ()

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னவா றொழுகு நாளி லிவன் செயல் பொறாதா ராகி
மன்னவன் கோவில் சார்ந்து மந்திரி செய்கை சொல்வார்
துன்னெறி யொழுகுந் தீயோன் றுன்பமே நாளுஞ் செய்வன்
மன்னவ நன்று கேட்டி மற்றினி யாமென் செய்வோம். (௧௬)

மன்னுமிந் நாட்டி னீங்கி மற்றொரு நாட்டிற் செல்வோ
மின்னது செய்த லின்றி யாதினைப் புரிய வல்லோ
மென்னலு மன்னர் மன்ன னின்னலைப் புரிவோன் றன்னைத்
தன்னுடை நாட்டி னீங்கச் செய்தலுந் தீயன் றானும். (௧௭)

அரசன்ற னாணைக் கஞ்சி யருவினைப் பயனு லந்தப்
பரிசினுற கொண்ட நாட்டைப் பண்புட னகன்று மூந்நீர்க்
கரையினை யடைந்தே யங்குக் கலமிசை யேறிச் சென்று
திரையெறி கடலாற் சூழுஞ் சிங்கள நாடு கண்டான். (௧௮)

தீவினு ளிழிந்த தீயோன் சேதுவி னடுவே யான
காவினுற் றிகழ்மா தோட்டக் கண்ணுத லமர்த லத்தை
மேவினன் மகிழ்ந்து கொண்ட மறையவர் வடிவ மாற்றி
யேவரும் விரும்பு மாற்றா லெய்தினன் வணிக வேடம். (௧௯)

வணிகனா யங்கண் வைகி வாலரி யெள்ளுப் பஞ்சு
குணமுறு மெய்யெண்ணெ யோடு கோவினெய் பயறு மின்ன
சணகமு முழுந்தும் விற்றுத் தனமிக வீட்டி முன்போற் [டான்.
குணத்தினை யழிக்குங் கள்ளைக் குடித்திடு தொழிலுங் கொண்

அந்தணர் முதலா நால்வ ரனுலோம ராதி யாக
வந்தவர் யாவரேனு மறுமலின் பளிக்கு நேரர்
தந்திடு பொருளுக் கேற்பத் தந்நலம் விற்போ ரான
சந்தணி குவவுக் கொங்கைத் தாசியர் நேயங் கொண்டான். (௨௧)

புணர்ந்தவர் பிரித லாற்றாப் பேரின்ப மளிக்கு மாதர்
அணங்கனா ரின்பந் துய்ப்பா னுடையு மணியும் பொன்னு
மணிகலன் பிறவு மீந்தா னரும்பொருண் முற்று மீந்தான்
மணங்கமழ் பாணை மைந்து மதனனு மெய்து நின்றான். (௨௨)

கணிகைய ரில்லந் தோறுங் காசொடு தூசும் பட்டு
மணிகளும் களவிற் கொண்டா னந்தணர்க் கோற லாதி
தணிவரும் பாவ மீட்டித் தகுதல மதனை நீங்கித்
திணியிருள் செறியுங் காட்டிற் றிரிந்தனன் பசிபா னொந்தே. ()

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைகளோ டாக மங்கன் மறைவிரி புராண மெல்லா
மறைதரு பதியாய் மேலா யழிவில்முக் கோண மாகி
நிறைவிரி கடுக்கை வேணி நாயக னுமையா ளோடு
முறைதரு கயிலாயத்தி னொருகொடு முடியு மாகி. (உச)

காணுறி னினைப்பிற் பேசிற் கருத்துடன் வசிப்பி னுங்குப்
பேணியே யிறப்பி னெல்லாப் பாவமும் போக்கி மேலாய்
மாணுறு பரமா னந்த முத்தியை யளிப்ப தாகிச்
சேணுற வோங்குஞ் சோலைத் திருக்கோண மலைய டைந்தான். ()

கோணமா மலைமே லுள்ள கோணேசப் பெருமான் றன்னை
வாணுதன் மங்கை யோடு மலைமிசைத் தேவைக் காணான்
பூணுறு பாட கம்போற் புகலுமுன் புரிந்த சூழ்ந்த
வேணுறு வினைவ யத்தா லெய்தினன் றலத்தி னோர்சார். (உசு)

இருந்தப கீர்த்தி மூட னிறைவனை யறியான் றீய
னருந்துதற் குணவு மின்றி யாதரிப் பாரு மின்றி
வருந்தினன் பின்ன ரவ்வூர் வளமனைப் புகுந்து பிச்சை
யருந்தினன் வாங்கிச் சின்னா ளாருயி ரோம்பி வந்தான். (உஎ)

சுவைமிகு முணவு தானும் பிறர்விழி சிறிது பட்டா
லவைமிகு மெச்சி லென்றே கழிக்குநன் மறையோன் றானுங்
கவைபடு மில்லந் தோறுங் கைந்நிறை பிச்சை வாங்கிச்
செவையென வுண்டா னந்தோ செய்வினைத் திறந்தா னென்னே.

புலையர்வாழ் சேரிக் கண்ணே புகுந்துபுற் கூரை வேய்ந்த
விலந்தொறு மைய மேற்று னினிதென வெண்ணிக் கள்ளுங்
குலமறை கூறும் வாயாற் குடித்தனன் புலாலு முண்டான்
புலைமக ளொருத்தி மீது பொறிகளைச் செல்ல விட்டான். (உகூ)

வேறு.

பற்றியபூங் கொடிச்சுரைமேற் படர்ந்தபழங் கூரையுடைப்
புறகுரம்பைச் சிற்றில்பல பொலிந்துளதோர் புலைப்பாடி
செறறியநற் கிளைதுவன்று செழுங்குடியிற் பிறந்தவளைப்
பற்றியெழும் பெருவிருப்பாற் பெண்டாளத் தொடங்கினனே. ()

வேறு.

பிர்சத்தி வருத்த வாடி வாரிளங் கொங்கை யாளை
மருவுவான் கொண்ட காதன் மேன்மேலும் வளரச் சொல்வான்
மருவினுற் சிறந்த நங்கை யொண்டொடி யென்னைநீதான்
மருவுது தொண்டு செய்வேன் வாணுதற் றிருவே யென்றான். ()

மனைவியாய் மறைவிற் கூடி வாழ்குவ மதனின் வல்லை
நினைவினை யெனக்குச் சொல்வாய் நேரிழை யென்று வேண்டப்
புனைகுழற் புலைச்சி தானும் பொறிவிழி துள்ளச் சொல்வாள்
எனைநினைந் தனைநீ யையோ வென்னடா வென்னைக் கேட்டாய். ()

பிரமனென் றலையின் முன்னாட் பொறித்தில னினக்குப் போலக்
கரவுறு மனத்தோ யென்றன் கடிமனை யகன்று போபோ
விரவுறு கணமு மீங்கு நிற்கலை விரைவிற் போபோ
வுரனிலா மடவோ யொல்லா துனக்கிதா கெடுவா யென்றாள். ()

என்றவண் மறுத்தா ளேனு மேந்திழை போக நச்சிக்
கன்றுமான் மறியார் மேவுங் கோயிலி னயலி னோர்பா
லொன்றியே வசித்துச் சின்னா ளொருதினத் திரவி லன்னான்
சென்றனன் றுயிலு மாதைச் சேர்ந்தனன் காம மீறி. (௧௪)

எங்கின டுயின்ற மாது மென்றலை விதியோ வென்று
ளேங்கிய சினத்த ளாகி பொருவகை தேறி யன்பு
தாங்கினள் மயிற் கேற்ற தன்மையைப் புகன்று யல்லை
பாங்குறு வணிக னீயான் புலைக்குடி வந்தே னென்றாள். (௧௫)

கணவனை யிழந்த கைம்மை களவினும் பிறரை வெஃகேன்
வணிகனீ விரும்பி னேயல் விதிவழி யதுவே யாகும்
அணைபுமவ் விதியை யாரே யகற்றுநர் யானென் செய்வேன்
குணமெனக் கொள்ளி னென்று கூறுவன் கேண்மோ வென்பாள்.

உயிருட னிருக்குங் காறு முனைப்பிரிந் தகலே னென்று
செயிரறு சுபதந் தன்னைச் சிவன்முன்பு செய்வை யென்று
ருயர்வுறு முன்ற னெண்ண மோதுகி விரைவி லென்ன
வயாவிலன் மகிழ்ந்து சிந்தை யதுசெய நேர்ந்தா னன்றே. (௧௭)

தந்தைதா யாரெங் குள்ளார் சாற்றெனப் புலைச்சி சொல்வா
ளெந்தைகாக் கியனு மீன்றாள் சிங்கார கீர்த்தி யென்பாள்
விந்தைசே ரோங்க லான வேங்கட கிரியின் பாங்கர்ச்
சிந்தையி லன்பு கொண்டு சிறப்புடன் சுகித்து வாழ்ந்தார். (௧௮)

இருவரு மென்னைப் பெற்றோ ரென்பெயர் விடகு மாரி
யொருவரும் வணிக ரேநே புகன்றனை னறிதி யென்றாள்
மருவிய காதல் பொங்கி மற்றவன் மொழியைக் கேட்டே
யரிவையை யழைத்துச் சென்றா னிலைய முன்ன ரன்றே. (௧௯)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னவள் கரத்தைப் பற்றி யறைதவன் சடகம் பெண்ணை
யுன்னையான் பிரியே னென்ற வுயிருட னிருக்குங் காறுஞ்
சந்நிதி முன்னர்ச் சொல்லுஞ் சத்தியந் தவறே னென்றான்
முன்னையின் மகிழ்ந்தா ளந்த மொய்குழற் புலைச்சி தானும். (௪௰)

காமரு புலைச்சி போகங் காமநூன் முறையாற் றுய்ப்பக்
காமவேள் பாண மைந்துங் கற்பவன் போல வெய்தா
னேமமார் கடைஞர் சேரி யில்லிடை யிருந்து வாழ்ந்து
பூமினை யனைய வேற்கட் பொற்றொடி யிருவ ரோடு. (௪௧)

ஆண்மக வொன்றும் பெற்றே யரிதினில் வளர்க்கு நாளிற்
காண்வரு பருவ மெய்திக் கடையர்தங் குலத்திற் கேற்ப [றான்.
மாண்வரு மணஞ்செய் வித்தான் மனைவியை வெறுத்துக் கொண்
பூண்முலைப் புதல்வி மாரின் போகமு நுகர்ந்தா னன்றே. (௪௨)

மருகராய் வந்தோர் தாமு மாமனார் கரவைக் கண்டும்
பரவுறு மவருக் கஞ்சிப் பொதிந்தனர் மனத்தி னுள்ளே
மருகியைக் களவிற் சேர மகனுமற் றதனைக் கண்டு
திருகிய மனத்த னாகித் துரத்தின னில்லை விட்டே. (௪௩)

முந்தைநல் வினைதா னென்று முயன்றிருந் ததனாற் செவ்வேற்
கந்தவே ளமர்ந்த தொல்லைக் கதிர்காமஞ் செல்லு மைந்தர்
தந்தநற் சுமையைத் தாங்கித் தகுதல மதனைச் சார்ந்தே
யந்தமில் மகிமை யெல்லா மறிந்ததி சயம டைந்தான். (௪௪)

புண்ணிய நதியி லாடிப் புனிதனை வணங்கிப் போற்றி
நண்ணினன் றென்பாற் றிக்கி னெடுஞ்சுர தேவி னாலே
கண்ணிய வெட்டு நாளுங் கரையறு துயர மூழ்கி
மண்ணினில் வாழ்வை விட்டான் மற்றப கீர்த்திமாதோ. (௪௫)

மேவியக் காலன் றூதர் வாளொடு பாச மேந்திப்
பாவியி னுயிரைப் பற்றிப் பாசத்தாற் கட்ட வீர
னேவிய தூதர் தாமு மிறுக்கிய கட்டை நீக்கித்
தேவியல் விமான மீது திகழுற வேற்றி னாரே. (௪௬)

தடுத்தனர் காலன் றூதர் தகுநெறி பிழைத்த பாவி
விடுத்திடங் கொண்டு செல்ல விடோமென மறுத்துக் கூறிப்
படைத்திடு வலியர் தாமும் பழியொடு பாவ நோக்கார்
கிடைத்திடின் யாவுஞ் செய்வர் கேட்பவர் யாவ ரென்றார். (௪௭)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமதி யிலார்க்குந் தம்மிற் றாழ்ந்தவர் தமக்கு நன்மை
மிகுதரு தருமங் கூறு மேன்மைசா லறிவு வாய்ந்தோன்
நகுமணி நாக மன்ன நலமுறு பாலை வார்த்தோன்
றொருதரு தன்மை போலத் தொன்னல மடையா னன்றே. (சஅ)

இக்கரு மாற்றங் கூறி யேர்கலின் றூதர் தாமுஞ்
சித்திர குப்தற் கூவிச் செப்புக விவன்செய் பாவ
மெத்தபுண் ணியமு மென்ன மறையவன் பவமே செய்தா
னெத்திறத் தானு மின்னோன் புண்ணிய மிழைத்தா னல்லன் (சகூ)

மறையவ னறஞ்செய் தெங்கள் கணக்கினில் வரைந்த தில்லை
குறைவறு பாவஞ் செய்தான் குவிந்தது மலைபோ லென்று
னறைந்தசொற் கேட்டு நின்ற வரிப்புண் ணியமே யல்லால்
நிறைதரு பாவந் தானே நேயமோ டெழுத லென்றார். (ருo)

சித்திர குப்த நின்னைச் செயப்படுங் கரும நன்று
விக்கக மார்க்கண் டேயன் விமலனுஞ் சுவேத கேது
பக்கனுஞ் சிலாதற் செம்மல் பண்டைய வியல்பு யாவுஞ்
சித்தமேற் கொள்வா யின்னுஞ் செப்புவ நன்று கேட்பாய். (ருக)

இவ்வய கீர்த்தி யென்பா னியற்றுபுண் ணியங்கள் குப்த
திவ்விய மாகிச் செவ்வே நிகழ்தர நாளு மன்னி
நவ்வியங் கண்ணொ ரோடு நலமுற விருப்ப தாகு
மெவ்வமில் சோதி காம விருங்கிரி யயலிற் சென்று. (ருஉ)

நிக்குமாங் கசினர் தன்னி டையே வசிக்க தானுந்
தத்துமா ணிக்க கங்கை தீரினிற் றோய்ந்த தானு
மக்களுங் குமரன் பாக மருங்கையிற் றுதித்த தானு
மித்தகு தலத்தி னின்னோ னிறந்தபுண் ணியத்தி னாலும். (ருங)

மறையவன் பாவ நீங்கி முருகன்றன் புரமே செல்வான்
நிறைந்தபுண் ணியவா னேனு நீதியிற் பாவி யேனு
மறைந்தவிக் தலத்தே யன்னு ளாருயிர் நீங்கப் பெற்றாற்
குறைதவிர் கந்த லோகங் கூடிப்பின் கதியிற் சேர்வான். (ருச)

என்றமை மறையின் மேலா மிரும்பொரு ளறிவீர் போலும்
கன்றிய மனத்தீ ரென்று கந்தவே டூதர் சொன்னார்
நின்றவர் நமனார் தூதர் நன்மொழி கேட்ட கன்றார்
நன்றறி மறையோன் றானு நலமுறு முலகஞ் சேர்ந்தான். (ருரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னெடுங் காலம் வாழ்ந்து பகரறு மின்பந் தாழ்ந்து
துன்னுசா மீப முத்தி சேர்ந்துபின் சுாமி நாதன்
றன்னரு ளடைந்து மேலாஞ் சாயுச்சியம் பெற்றா னந்தத்
துன்னெறி யொழுகிப் பின்னர்த் தூயனும் வந்தோன் ருனே. ()

பொருவில காம கன்மப் புண்ணிய முடனே நண்ணக்
கரையிலாப் பிறவி நீந்திக் கந்தவேள் பாதஞ் சேர்ந்தான்
புரைதவிர் சரிதஞ் சொன்னோம் பொறியிலாக் கள்வர் சில்லோர்
தரைபுகழ் கதிரை நண்ணித் தண்ணருள் பெறுதல் சொல்வாம். ()

அபகீர்த்திழத்திபெறு படலமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 622.

---

## வேட்டுவக்கள்வர் அருள்பெறுபடலம்.

பத்தியில் மனத்தர் கள்வர் பாவமே பயிலு மாந்தர்
மெத்திய கன்ம பாக முழுவது மில்லைப் புல்லர்
எத்திறத் தவருஞ் சேரி னிருப்புநெஞ் சிளகச் செய்து
முத்தியை யருளுஞ் சோதி முழுமுதல் பாதம் போற்றி. (க)

திருவளர் கடலாற் சூழுஞ் சிங்கள நாடு தன்னிற்
தருமமே வதைதான் றெல்லை முறைமையோ டிருபா தத்தின்
மருவிய யுகமே யான துவாபர மரபின் மேவப்
பெருமதிச் சிங்க னென்பான் பாரினை யாண்டு வந்தான். (உ)

அறம்பொரு ளின்ப மென்னு மறநெறி குலவி யோங்கத்
திறம்படு பாவத் தெவ்வுந் தலையெடுப் பின்றி மாழ்க
விறன்மிகு செங்கோல் செல்ல மேதினி புரக்கு நாளிற்
குறவர்கள் சில்லோர் கூடிக் கொள்ளைகொ டொழில ராஞர். (ங)

ஊனமார் பகைவர் கள்வ ருலகின ரென்போ ராலு
மேனைய வரச ரேவ லியற்றுறு மாந்த ராலு
மானதுன் பகற்றி மேலா மறத்தினை வளர்த்த லோடு
தானுமே துன்பஞ் செய்யான் றருமநல் வேந்த னுவான். (ச)

குன்றிடை வாழ்வு கொண்ட கொடியராம் வேடர் கூடி
நன்றறி மாந்தர் மேவு நகர்தொறுந் திரிந்து நாளும்
வென்றிடு மணியும் பொன்னும் விரும்பிய வணியு மாடை
யென்றிடு பொருள்க ளெல்லா மிரவினிற் களவு செய்வார். (ரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேட்டுவக்கள்வர் அருள்பெறுபடலம். 

மறையுணர் பார்ப்ப ரோடு மாநிலத் துள்ளார் தம்மைக்
குறைவறப் புடைத்துக் கொள்ளை கொள்வது மன்றி வாளால்
விறலொடு வதைத்து வெட்டி வீட்டினி னுள்ள நெல்லு
நிறைதரு மணியும் பொன்னு நாடியே களவு செய்வார். (௬)

வழிப்பறி செய்துஞ் செல்வர் வளமனைக் கன்ன மிட்டுஞ்
செழிப்புறு நாட்டி னீங்கார் திருடர்செய் கொடுமை கேட்டான்
விழிப்பொறி சிதற நோக்கி வெகுளிமேற் கொண்டு மன்னன்
பழிப்படு கள்வர் தம்மைப் பற்றியே கொணர்மி னென்றான். (௭)

அரசர்தங் கருமஞ் செய்வா ரவர்களைப் பிடிக்க வெண்ணிப்
பரவினர் திரிந்தா ரெங்கும் பயந்தவக் கள்வர் தாமு
மிருளடர் காட்டி லேகி யிருங்குகை யொன்றிற் றங்கித்
திரைபெறு கடல்சேர் காலிச் செழுநகர் தன்னிற் சென்று. (௮)

பன்மணிப் பூணும் பொன்னும் பட்டுடன் களவு செய்தார்
நன்னுதற் கருங்கட் செவ்வாய் நகைமதி முகத்து மாதர்
கொன்னுறு வடிவேல் கொண்ட குமரவே ளகலா னுகி
மன்னுறு மஞ்சு காம வளம்பதி செல்வார்க் கண்டார். (௯)

மயங்கினர் மோகங் கொண்டார் மாதரைப் பிடிக்க வெண்ணித்
தியங்கினர் தொடர்ந்து சென்றார் திகைத்தனர் மாதர் தாமும்
பயங்கிளர்ந் தனராய்க் கள்வர் பாலகப் படாது சென்று
வயங்கிய மலையின் பக்க மறைந்தன ரோடி னாரே. (௧௦)

வேடருந் தொடர்ந்து சென்று மாதரை விடாது பின்னர்த்
தேடினர் திரிதல் கண்டு தேமொழி யவர்தா மோடி
வீடரு டெய்வ மாகி விளங்கிய சாமி நாதன்
படையுட னமர்ந்த மேன்மைப் பாசறைப் பதியுட் புக்கார். (௧௧)

கந்தவேள் செய்ய பாதங் கருத்துடன் வணங்கிப் போற்றி
யெந்தைநீ வேட்டுக் கள்வ ரெங்களை வருத்தா வண்ணம்
வந்துகாத் தருள்வா யென்று வருந்தின ரோல மிட்டார்
பைந்தொடி யவர்தம் மீது பரமனு மிரக்கங் கொண்டு. (௧௨)

கொடியவர் அகப்ப டாது காத்தருள் புரிந்தான் பின்னர்க்
கொடியபல் விலங்கு சூழ்ந்த கதிர்காம மகிமை தன்னாற்
படியக மலத்தி னுள்ளே புகுதரு பான்மை யின்றிப்
புடையுள மலையின் கண்ணே போயினர் வசித்தா ரங்கண். (௧௩)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலபகல் செல்லா நிற்பத் தீயரு மிறப்பா ராக
வலமிகு நமனார் தூதர் வந்தனர் கொண்டு செல்ல
நிலவிய கதிரை வேலோன் நீடிய கருணை கொண்டு
குலவிய வீர னுக்குக் கூறுதல் செய்வா னன்றே. (கச)

தூயதோர் சோதி காமத் தொல்பதிக் கயலின் கண்ணே
மேயதோர் மலையின் மேவி வேட்டுவக் கள்வ ரானோர்
தீயவை புரிந்தா ரேனுஞ் சாதலை யடைந்தா ரன்றோ
வாயதோர் கார ணத்தா லவ்வுயிர் பாவ நீங்கி. (கரு)

கந்தமா லோகஞ் சார்ந்து கதியினை யடை தல் வேண்டும்
நந்தம தூதர் தம்மை விடுக்குதி நல்லோ யென்ன
விந்தமார் புயத்தன் விட்டான் விறல்கெழு கணங்க டம்மை
யந்தநற் கணங்கள் வேட ராருயிர் பற்றச் சென்று. (கசு)

சூலமும் வாளும் வேலுந் தோமர முதல வான
வேலுறு படைக டம்மால் யமகணம் வருந்தத் தாக்கி
மாலுறு வேட ராவி விமானமேற் கொண்டு மேன்மை
சாலுறு கந்த லோகஞ் சார்ந்தனர் வீரன் றூதர். (கஎ)

ஓடினர் நடுவன் றூத ருடல்பெலாஞ் செந்நீ ரோடப்
பாடியற் றரும ராச பகருதுங் கேண்மோ வென்ன
னீடிய தொழிலு நன்று நையவே புடைத்தா ரென்று
பீடியற் றருமன் முன்னர்ப் பெரிதுமே முறையிட் டாரே. (கஅ)

அம்மொழி தருமன் கேட்டே யாய்ந்தனர் மனத்த னாகி
விம்மிதங் கொண்டு பின்னர் வேலவன் முன்னர்ச் சென்று
மும்மையாந் தொழிற்கு நாத முழுமறைக் கரியாய் போற்றி
யெம்மையா ளிறைவா போற்றி யெளியனைக் காப்பாய் போற்றி. ()

குன்றினில் வாழும் வேடர் கள்வராய்த் திரிந்து நாளுங்
குன்றென வுயர்ந்த பாவங் குணமென விரும்பிச் செய்தார்
நன்றறி மறையோர் தம்மை நாடியே கொலையுஞ் செய்தார்
துன்றிய வாயுள் காறுந் தொடர்பவம் பலவுஞ் செய்தார். (உ0)

புண்ணிய மொன்று மாங்கு புரிந்தில ரிறந்தார் தம்மை
நண்ணியென் றூதர் தாமு நன்குறப் பிணித்துச் செல்லத்
திண்ணிய வீரன் றூதர் தீங்கினைப் புரிந்து பற்றி [ன்.
யண்ணலே கொணர்ந்தா ரந்தோ வவர்செயல் முறையோ வென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வத்தாற் புத்தி கெட்டுச் செருக்கினை யடைந்து சில்லோர்
பல்வளங் குன்றி நாளும் பழுதுறு தன்மை போலப்
புல்லிய மதத்தி னாலே புகன்றனை மார்க்கண் டேயன்
நல்லபுண் ணியமே செய்ய நாடினீ யுணரா யந்தோ. (உஉ)

மதியிலி வருத்த முற்றாய் மறலிநீ புரிந்த குற்ற
மதிகமா மெனினும் யாமே யன்னதைப் பொறுத்தோ மென்னத்
துதிசெய்து மறலி பின்னுஞ் சொல்லுவ னெந்தை நீகேள்
கதிரையந் தலத்தைப் பாவ காரியர் காண லாமோ. (உங)

பாவமே புரிந்தார் முத்தி பெறுவது முளது கொல்லோ
மேவுசீர்க் கங்கை மைந்தா விளம்புதி யென்று கேட்ப
மூவர்க்கு முதல்வ னான முருகனுஞ் சோதி காமத்
தேவியற் றன்மை தோன்றத் தருமனுக் கருளிச் செய்வான்.(உச)

மாதரார் மோக பாச வலையினாற் கட்டப் பட்டே
யோதிய சோதி காம வுயர்பதி யிதன்பால் வந்து
சாதலை யடைந்த வேடர் சாற்றரும் பாவ நீங்க
மேதகு மருளி னாலே முத்தியுங் கிடைக்கப் பெற்றார். (உரு)

ஏடநீ யினிமே லெங்க ளெம்முறை திறம்பா வண்ணம்
நாடியே நடப்பா யாயின் நயமிக வடைவா யந்தோ
மூடநீ யெமது மாற்ற மேற்கொளா திருப்பை யாயிற்
கேடெலா நின்பா னண்ணுங் கெடுமதி சொற்கே ளாதே. (உசு)

யாவரே யெனினு மாயு ளிறுவதன் முன்ன மோர்கால்
மேவியஞ் சுகாமச் செவ்வேள் முருகனைத் தரிசித் தாலும்
பாவிக்கி னெஞ்சி லன்றிப் பழுதறு கனவிற் காணி
லாவிதா னகலி னெஞ்சி லழுத்தினும் பெறுவர் முத்தி. (உஎ)

அன்னவ ரிறக்குங் காலத் தவரிட மணுகாய் நீயு
மன்னிநம் முலகந் தன்னில் வாழுதற் குரிய ராவர்
பண்ணுதற் கரிய மேலாம் புண்ணிய முடையோ ராவர்
நின்னகர் விரைந்து செல்வாய் நாடலை யிவர்பா லென்ன. (உஅ)

அன்னது செய்வே னென்றே யாங்கவ ணீங்கா னாகி
மன்னிய கோப முள மற்றவன் வணங்கி யேக
முன்னமே யிருந்த தும்பி மாமுக னந்தி வீரன்
பன்னருஞ் சாதகன் வீர பத்திரன் காள னேனோர். (உகூ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிமொழி பகரான் கூற்றன் பிடியடி யென்று சொல்லிப்
பிணித்தனர் பாசந் தன்னாற் புடைத்தனர் முசலந் தன்னாற்
றணிவுட னடிக்குந் தோறுந் தயாநிதி யடியேன் செய்த
கணிப்பரும் பிழைபொ றுப்பாய் கடவுளே யென்று வேண்டு... ()

கருணையங் கடலா மீசன் கட்டினை விடுமி னென்னப்
புரிதரு பாச நீக்கிப் பொள்ளென விடுத்தா ரன்னோர்
தருமனு மறைந்து செல்வான் றன்றூதர் கேட்பச் சொல்வான்
முருகனார் மகிமை தேறே முழுப்பழி சுமந்தோ மிந்நாள். (௩௧)

மேதகு சோதி காம வியன்பதி வசித்தோர் செத்தோர்
நாதனைத் தரிசித் துள்ளோர் நினைந்தவர் தியானஞ் செய்தோ
ரோதுசீ ரெல்லை தன்னி லுயிர்துறந் தோரா மின்னோர்
பாதவந் தன்னையைச் செய்யிற் பரிபவ மடையோம் யாமே. (௩௨)

ஆண்டவ னாணை நீப்பி னரசிழந் துயிரு நீங்கு
மாண்டவித் தலத்தை நீவிர் மிதிக்கலிர் மறந்து மென்று
தாண்டவம் புரியுஞ் செவ்வே டிருவடி மறவா னாகி
மீண்டனன் றூதர் தாமு மேவினர் தரும னேடும். (௩௩)

அந்தணா ளாதி யாக வத்தகு கதிரை தன்னில்
வந்தனை முதலாச் செய்த மாந்தரைப் பற்ற வெண்ணி
வந்திலர் தருமன் றூதர் மறறிது மெய்யே யாகு
மந்தமின் முனிவீ ரென்று னருந்தவச் சூதன் மன்னோ. (௩௪)

கள்வர்கள் கதிரை யெய்திக் கந்தவே ளருளான் முத்தி
யின்னரும் பேறு பெற்ற விமலமாங் கதையைச் சொன்னே
மொள்ளிய னாகிப் பாவ தீபனொ மொருவன் றானு
மெள்ளவே கதிரை தன்னின் முத்திசேர் கதையுஞ் செல்வாம். ()

## வேட்டுவக்கள்வர் அருள்பெறுபடலமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 657.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவதீபன் அருள்பெறுபடலம்.

எல்லையின் றிதித்தா னேனு மிழிகுண மகற்றி மிக்க
நல்லவ ராகச் செய்து நவையறு காட்சி தந்தே
யெல்லையில் முத்தி நல்கு மெழிற்சோதி காமே சன்றன்
மல்லலங் கமல பாத மனத்தினிற் கொண்டு வாழ்வாம். (௧)

கன்னியை விற்ப தின்றிக் காணியு மனையும் பொன்னுந்
தொன்மையி னடிமை யாளுந் துகளிலா வாளுக் கீந்து
நன்மையை வளர்த்து நாளு நலம்பெறு குடிகண் மல்கி
மன்னிய சிறப்பு வாய்ந்து விளங்குவ தீழ நாடு. (௨)

சொன்னவிந் நாடு காப்பான் றொன்மனு நெறியி னிற்போன்
கொன்னுனை வடிகொள் வேலான் குளக்கோட்டு மன்ன னென்பா
மன்னுயிர் செழித்து வாழ மாநிலங் காக்கு நாளின் [ன்
மின்னன மருங்குற் றேவி மணிவயி றதனின் மைந்தன். (௩)

பிறந்தன னுலகம் போற்றப் பிறையென வளர்ந்து நாளுஞ்
சிறந்துநல் லிளமை வாய்ந்து திகழ்ந்தனன் காமன் போல
மறந்தவிர் பாவ தீப மன்னிளங் குமரன் மேவா
மறந்தனை வெறுத்து வாழ்வா னரசுறு கருமம் பேணான். (௪)

மந்திரி குமார னான மாண்பிலாக் கோப தீபன்
வந்தொரு நண்பு கொள்ள மாரனு லலக்க ணுற்றுச்
சுந்தரப் பரத்தை மாதர் தொடர்நலம் பேணிச் சின்னாட்
சிந்தையின் மகிழ்ச்சி யெய்திச் சிற்றின்பத் துறையி னின்றான்.

பழிபடு போகம் விற்கும் பரத்தையர் போகம் வேட்டோன்
பிழிபடு மதுவு மார்ந்திப் பிழைதபு கற்பின் மாத
ருழைநிகர் நோக்கி னாரை யுறுதுயர் செய்ய லூரார்
குழைதரு மனத்த ராகிக் கோவின்பாற் கூறி னாரே. (௬)

மைந்தனை வெறுத்தா ரென்று மற்றவன் மீது கொண்ட
சிந்தையி லன்பி னாலே சிறையிடை யவரை வைத்தான்
மந்திரி யிதனைக் கண்டு மன்னன்செய் பிழைக்கு நொந்து
வந்தனை புரிந்து மன்னன் மதிகொள விளம்பு வானே. (௭)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்பதை காப்போ ஞன மன்னனீ யுன்றே விந்நா
ளென்னிது செய்தாய் நீயே யிங்ஙனஞ் செய்தா யென்னி
னின்னையார் கேட்பார் நீதி நெறியினிற் குன்றி லாமோ
மன்னநீ யிதனைச் சற்று மனத்தினிற் கொள்க வென்றான். (அ)

மந்திரி சொன்ன மாற்ற பகிபனுங் கேட்டுச் சொல்வான்
மைந்தனு மொருவ னுள்ளான் மற்றவ னுயிரே யாவான்
சந்ததி தழைக்க வந்தான் றாணியு மாள வுள்ளான்
சிந்தனை பெரிதுங் கூற நெடுஞ்சிறை யவரை வைத்தேன். (கூ)

மந்திரி பின்னுஞ் சொல்வான் மன்னனை நோக்கி யெந்தா
யிந்தமா நிலமே லுள்ளார் யாவர்க்கு நீதி யொன்றே
சிந்தனை செய்க வுன்றன் சிறுவனும் பிறரும் வேறோ
விந்தைசேர் நிருப னுக்கு விளம்பிடிற் சமமே யாகும். (க0)

இன்னன நீதி யெல்லா மிரந்தன னன்கு கூற
மன்னனுங் கோப மாறி மற்றவர் தம்மை யெல்லாந்
துன்னருஞ் சிறையி னீக்கத் தூநெறி நின்ற மாந்த
ரின்னினி யாங்கள் யாரு மிந்நகர் வாழ கில்லோம். (கக)

என்றுதம் மனத்தி லெண்ணி யிருந்ததோர் பதியி னீங்கி
நன்றறி பெரியோர் வாழு நலமுறு சோதி காம
மென்றுள தலத்திற் சென்றா ரிச்செயல் யாவு மோர்ந்து
கன்றிய மனத்த னாகிக் கோபதி பனையுங் கிட்டி. (க௨)

மன்னிளங் குமர னான மூர்க்கனு மதிகெட் டோனுந்
தன்னுறு சேனை சூழத் தையலர் மோகங் கொண்டு
தொன்மைசேர் சோதி காமத் திருப்பதிக் கேகு வானுய்
நன்னதி மலையுங் காடு நகர்களுந கடந்து செல்வான். (கரு)

இருளடர் பெரிய காட்டி னிடைவழி யிருக்க வாங்கே
பெரியதோர் புற்றி னாகம் பரிசனர் சிலரைத் தீண்ட
வொருவொரு ளாக வெண்ணு னேனுங்குமா ணிக்க கங்கைக்
கரைமிசை மேவுந் தெய்வக் கதிர்காமஞ் சென்ற டைந்தான். (கச)

அன்னதை யுணர்ந்து மாத ரஞ்சினர் நடுங்கிச் செவ்வேண்
மன்னிய தளியுட் சென்று மற்றவன் சரணம் புக்கார்
தன்னிகர் தானே யான தலத்தினை மிதித்த போதே
புன்னருஞ் சித்த சுத்தி யுதித்தது குமர னுக்கே. (க௫)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்றெனச் சித்த சுத்தி சேர்தலுந் தூய னாகி
மற்றவன் றலத்துட் சென்று முருகனைக் காணு மாசை
பற்றிமே லோங்க முன்னர்ப் பொதிதரு குணங்க ளோட
வெற்றிவேற் பிரானைக் கண்டு வணங்கினன் றுதித்தா னன்றே. ()

ஆண்டவற் புகழ்ந்து பாடி யப்பதி யகன்று தன்னூர்
மீண்டனன் சின்னாள் வாழ்ந்து மரித்தனன் பாவ தீபன்
மாண்டவ னுயிரைப் பற்ற மறலியின் றூதர் சென்றார்
காண்டகு குகனார் தூதர் கனன்றவர் தம்மை நீக்கி. (கஎ)

பொங்கிய மகிழ்ச்சி கொண்டு பொலிவுறு விமான மீதே
யங்கவ னுயிரை யேற்றி யாயிடை யகன்று சென்று
பங்கயன் முதலோர் போற்றும் பரன்மகன் வீற்றி ருக்குந்
துங்கமார் கந்த லோகஞ் சேர்ந்தன ரிருந்தா ரன்றே. (கஅ)

இழிகுண முடைய ரேனு மித்தலத் தடைவா ரென்னிற்
பழிமலி குணங்க ணீங்கிப் பரமனுக் கடிமை யாகி
யழிவில ரெங்கே சென்று மரிப்பினும் யாங்குச் சென்று
தழுவிவாழ் வுறினுஞ் செவ்வே ளுலகினிற் றிகழ்ந்து வாழ்வார்.

மருவுநற் சோதி காம வளநகர் கண்ட பேற்றாற்
திருவமர் பாவதீப னருள்பெறு சரிதஞ் சொன்னோம்
பிரமனே முதலாந் தேவர் கதிரையம் பதியிற் சேர்ந்து
வருகலி வலிமை வென்ற வண்கதை யியம்பி வாழ்வாம். (உ௦)

பாவதீபன் அருள்பெறுபடலமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 677.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவர் கலிவலிவென்றபடலம்.

கலிவலி வெல்லு மாறு கடவுளர் வசித்துப் போற்றப்
புலியொடு பசுவே புல்வாய் பொருபகை யின்றி வாழக்
கலிவலி யனுக லாகாக் கதிர்காம தலத்தின் மேவுங்
கலியுக வரதன் பொற்றாள் கருத்தினி லிருத்தி வாழ்வாம். (க)

வண்டமர் கமலபீட மன்னிய பிரம னென்போன்
தண்டுசக் கரமும் வாளுஞ் சிலையொடு சங்குங் கொண்டோ
னண்டிய பதத்தின் றூறற மிறுதியு மனந்த மாகக்
கண்டுநிற் பதாகு மேலாங் கண்ணுதல் வெள்ளி வெற்பு. (உ)

நான்மறை பயிலு மோதை நற்றவர் துதிக்கு மோதை
மேன்மைவிஞ் சையர்தா மாற்றும் வீணையி னோதை யோடு
தானவ ரியக்கர் சித்தர் தோத்திர மொருபா லோங்குந்
தானமா முழக்கி னோடு சீமூத முழக்கு மோர்பால். (௩)

அன்னதோர் சிறப்பு வாய்ந்த வருங்கிரி தன்னி லேகி
முன்னொரு காலந் தன்னின் மேதினி படைத்த வேதன்
பன்னெடுந் தேவர் யாரும் பனிவரை பயந்த மாது
தன்னுடன் பரமன் றன்னைத் தாழ்ந்தனர் நவில லுற்றார். (ச)

தண்ணிலா முடித்த வேணித் தற்பரப் பொருளே யாங்க
ளெண்ணரிய யுகங்கள் மூன்று மிருந்தன மூலக மூன்று
நண்ணினம் வாசஞ் செய்தோ நாதனே யிந்த நாளிற்
கண்ணிலாக் கலியின் மன்னன் கவின்முடி தரித்து வந்தான். (ரு)

தன்மனைக் கிழத்தி முன்னே செல்லவுந் தன்னை யீன்ற
வன்னையுஞ் சுமையைத் தாங்கி யரிதினிற் பின்னே வந்தா
னின்னதே யுணர்த்து மம்மா விச்செயல் கலியா லன்றோ
பன்னுவ தினியென் யாங்கள் பிருதிவி வீர மற்றார். (சு)

ஓங்கிய மூவி யெல்லா மொழிந்தது வலியு மின்றி
நீங்கினர் மகான்க ளெல்லா நீசரே மகிமை பெற்றார்
தேங்கிய குடிகண் மாட்டுத் திரவியம் பறிப்பர் வேந்தர்
ஊங்கிய பொருளைக் கொள்ளு மொன்றையே கருதி நாளும். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணர் வேத மோதா ருருமகஞ் செய்தல் விட்டார்
மந்திர செபந் தியான மறந்தனர் மனைவி தானுஞ்
சிந்தையில் வைரங் கொண்டு தொழுதகு கணவற் பேணாள்
மைந்தரும் பிதாவைப் பேணார் மற்றினி யாது சொல்வேம். (அ)

பலவகை வேறு பாடு பாரினில் விளங்க லாலே
குலியுக மிதனி லெல்லாத் தருமமுங் காடு சேர்ந்து
தலையெடுப் பின்றி முற்றுந் தணத்தலா லெங்குச் செல்வேங்
கலிசெலாத் தலமு முண்டோ காசினி மீது மாதோ. (கூ)

வெங்கலி ராசன் செங்கோல் வழங்குத லில்ல தாகத்
தங்குதற் குரிய தான தானமொன் றருடி யென்றார்
நங்கும ரனைருஞ் செவ்வே ணுடிய தலங்க டம்முட்
பங்கமில் கதிரை யென்னும் பழம்பதி மேன்மை வாய்ந்து. (க0)

கந்தனுக் குவந்த தாகிக் காசினி புகழ்வ தாகிச்
சுந்தரச் சோதி காமக் கொன்மலைப் பக்கமாகி
மந்திர மறையுங் காணா மாட்சிமை யுடைய தாகிச்
சிந்துவுக் கணிய தாகித் திகழ்வுறு மென்ப மாதோ. (கக)

நலிவுசெய் கலியின் றூனு நாடுவ தில்லை யங்கு
மெலிவுசெய் கொடிய நோயு மேவுவ தில்லை நாளோ
யுலைவுசெய் தருமன் றூத ரெட்டியும் பார்க்க மாட்டார்
மலையென வளர்ந்த பாவ மாண்டிடு முடனே யென்பர். (கஉ)

பாவிக ளெந்த நாளும் பார்க்கவு மியலா தாகு
மேவியே வசிப்போர் தாமும் புண்ணிய மிகவுஞ் செய்தார்
நீவிரு மாங்கட் சென்று நேயராய் வாசஞ் செய்மின்
தேவரே யென்று நாதன் றிருவுள மகிழ்ந்து செப்ப. (கந)

நாதனு ரருளிச் செய்த நல்லருள் வாக்கைக் கேட்டு
மேதகு விரிஞ்ச னாதி விண்ணவர் மகிழ்ந்து மேலா
யோதிய கதிரை யென்னு மொப்பிலாப் பதியை நண்ணி
யாதரஞ் செய்து வாழ்வா ரருங்கலி தீர்ந்து மன்னோ. (கச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிகளுங் குரவு மோங்குங் கதிரையம் பதியிற் றேவர்
திணிகலி வென்ற காதை செப்பினோ மினிமேற் செவ்வே
ளணிகிளர் மாடக் கூட லாலவாய்ப் பதியில் வாழும்
வணிகர்கள் செல்வம் பெற்ற வண்கதை செப்பு வேமால். (கஞ)

தேவர் கலிவலிவென்றபடலமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 692.

# வணிகர் தனம்பெறுபடலம்.

மணியொடு தூசும் பட்டு மற்றுள பொருளுங் கள்வ
ரணிகிள ரில்லிற் சென்றா ரள்ளியே கொள்ளை கொள்ளப்
பணிவுறு கூலி யாளாம் பாமனால் விடுக்கப் பட்ட
வணிகர்க்குத் தனத்தை யீந்த வள்ளலைப் பணிதல் செய்வாம். (க)

சீரினாற் றிகழுஞ் செல்வச் செழுங்குடி மல்கி யோங்குங்
காரினாற் கவின்கொள் சென்னிக் கதிர்மணி மாட வைப்பு
தாரினாற் பொலியு மார்பத் தண்ணளி மாந்தர் போற்றும்
பாரினில் விளங்கு மேன்மை பூண்டது பாண்டி நாடு. (உ)

அங்கயற் கண்ணி பங்க னருட்டிரு விளையா டல்க
ளங்கண்மா ஞால முய்ய வறுபது நான்குஞ் செய்த
பங்கமில் பாண்டி நாட்டிற் பார்வளர் புகழின் மிக்க
துங்கநற் பதியா தென்னிற் றொன்மைசான் மதுரை யாகும். (ங)

அந்நகர் தன்னில் வாழ்வா னருநிதி வணிகர் செம்ம
னன்மனை மைந்தர் சுற்ற நட்பினர் பெரிது முள்ளான்
பொன்னொடு மணியு முள்ளான் புவியினர் போற்ற வாழ்வான்
நன்னெடும் வாணி கத்தா னற்பொரு ளீட்டி னானே. (ச)

வணிகனும் பொருள்க ளீட்டி வளம்பதி யதனி லுள்ள
வணிகருட் டலைமை வாய்ந்து வளர்நிதிக் குபேர னென்ன
வணிபெறு திருவின் மிக்கா னடியார்பா னேசம் வைத்துத்
தணிவருங் காத லோங்கத் தன்னிக ரின்றி வாழ்ந்தான். (ரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழொடு பன்னாள் வாழ்ந்து புண்ணியம் பலவுஞ் செய்து
மகிழ்வுறு மக்கட் பேறு மேதினி வியப்ப வெய்தி
யிகழ்ச்சியொன் றானு மின்றி யெய்தினன் முதுமை தன்னை
முகிழ்மதி பணிந்த வேணி முன்னவ னுலகஞ் சேர்ந்தான். (௬)

வேறு.

சீர்திகழு மௌமேகசன் சந்திமானே நாகவல்லி
யேர்திகழு மேமவல்லி யிரத்தினமா வல்லிமாது
பார்திகழும் வணிகனுக்குப் பாங்கான மக்களின்னோர்
கார்திகழு மணிமாடக் கடிமனையில் வசிக்குநாள். (௭)

மின்னுமணி மாளிகையின் மொய்யிருள்சேர் நள்ளிரவிற்
கன்னமிட்டுப் பொருளெல்லாம் கள்வர்கள் கொண்டகல
மன்னவன்பால் வணிகமைந்தர் முறையிடவே யதுகேட்டுத்
தென்னவனுங் களவுசெய்த தீயவரைத் தேடினனே. (௮)

வேறு.

தேடியே கள்வர்க் காணான் றென்னவன் செய்வ தென்னே,
கூடிய கவலை யோங்கக் கோப்பெரு வணிக மைந்தர்
நீடிய வால வாயி னிமலன்சந் நிதிமுன் சென்று
சூடிய மதியோய் சோம சுந்தர வள்ளல் கேண்மோ. (௯)

பொருளெலாங் கள்வர் கொண்டார் புகலிடம் வேறு காணேம்
மருளுலா மனத்த ராணோ மாற்றுதி கவலை தன்னைப்
பொருளினை யளித்துக் காப்பாய் புண்ணியப் பொருளே நீதா
னருளினைப் புரியா யாயின் யாரினி யெம்மைக் காப்பார். (௧௦)

என்றவ ரிரந்து வேண்ட விறையவ னவரை நோக்கி
நன்றருட் பார்வை நல்கி நலநிறை யீழ நாட்டில்
வென்றிவேன் முருகன் மேவும் வியன்பெருந் தலமொன் றுண்டு
குன்றமு மொன்றுண் டாங்கே குவலய மதன்சீர் போற்றும். ()

அத்தல மகிமை தன்னை யறிந்துரை செய்வோர் யாவ
ருத்தம தலங்க டம்மு ளுத்தம மதுவே யாகு
மெத்தலங் களினு மேலா மிதுநிகர் தலமொன் றில்லை
நித்தமு மகலா னாகி நங்குக னுறைவ னாங்கே. (௧௨)

அனையமா தலத்தின் பேரு மஞ்சுகா மமென்று சொல்வார்
புனிதமாஞ் சோதி காமப் பெயருமாம் புகலி னின்னுங்
கனைகட லுலகந் தானுங் கதிர்காம மெனவுங் கூறும்
நினைப்பினு மன்பு தோன்றி நெக்குவிட் டுருகு மன்றே. (௧௩)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைகளுந் துதிக்கு மந்த மாதலத் தேகிச் செவ்வே
னிறைவனை வணங்கிப் போற்றி யியம்புமின் குறைக ளெல்லா
நிறையவே விரும்பி யாங்கு நல்குவன் செல்மி னென்றான்
கறையினை மிடற்றில் வைத்த கருணையங் கடலா மீசன். (௧௪)

நாயக னருளிச் செய்ய நற்குல வணிகர் கேட்டுத்
தூயமா தலத்திற் சேருஞ் சிந்தைய ராகித் தாங்கள்
மேயதோர் மதுரை நீங்கி விளங்குதென் றிசையிற் சென்று
பாய்திரை சுருட்டிச் செல்லும் பெரியதோ ரளக்கர் கண்டார். ()

வங்கமீ தேறிச் சென்று வாரிதி கடந்தே யீழத்
தங்கமு மணியு முண்டாந் தகைமைசேர் நாடு சேர்ந்து
துங்கமார் கரையி றங்கித் தோமிலா வளங்கள் கண்டு
மங்குல்கண் படுக்குஞ் சோலை மலைகளுங் காடு நீங்கி. (௧௬)

கறையடித் தொகுதி சூழுங் கதிர்காம தலத்தைச் சேர்ந்து
நறைகமழ் மலர்கள் போர்த்த மாணிக்க நதிநீ ராடி
நிறைதரு மாடி மாச நல்விழாக் காலந் தன்னி
லிறைவனைத் தரிசித் தேத்தி யிறைஞ்சினர் வணிக மைந்தர். ()

திங்கள்வெண் கவிகை நீழற் றிருவளர் கோயி னின்று
மங்குலோய் மாட வீதி மதகய வெருத்த மீது
கொங்கலர் கடப்ப மாலைக் காமேச னடியார் சூழப்
பொங்குகற் பூர தீபம் பொலிவுறப் பவனி போந்தான். (௧௮)

அத்தகு விழாவின் சீர்கண் டானந்தங் கொண்டு போற்றிப்
பத்தியின் வயத்த ராகிப் பார்மிசை வணங்கி வீழ்ந்து
மெத்திய பிறவி வித்தாம் வெப்பவ மகல மைந்த
ரத்தன்மெய் யருளி னாலே யருநிதி பெற்றா ரன்றே. (௧௯)

மணியொடு பொன்னும் பெற்று மெய்தரு ஞானம் பெற்றுப்
பணிந்தனர் விடையும் பெற்றுப் பழம்பதி யதனி னீங்கி
யணிகெழு மாட மூதூ ராலவாய் நகரில் வந்து
தணிவீறு செல்வ மோங்கித் தங்கிளை தழுவி வாழ்ந்தார். (௨௦)

மும்மைசே ருலகு மேத்து முருகவே ளருளி னாலே
யிம்மையை நல்குஞ் செல்வம் யாவையும் பெற்று மேலா
மம்மையை நல்கு ஞான மனைத்தையும் பெற்றா ரென்று
செம்மைசேர் மனத்த னான சூதனுஞ் செப்பி னானே. (௨௧)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிய பதுளை வாழும் வணிகநன் மைந்தர் தாமும்
பொன்னொடு தனமும் பெற்ற புதுமையைச் சொன்னோ மிப்பாற்
கின்னரம் பயிலுஞ் சோலைக் கதிர்காம வேலன் றன்பா
லன்னமென் னடைசேர் மாதரருள்பெறு கதையுஞ் சொல்வாம்.

வணிகர் தனம்பெறுபடலமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 714.

---

# மாதர் அருள்பெறுபடலம்.

சீர்மருவு சோதிகாம சைலமீதுந் தண்மைவாய்ந்த
நீர்மருவு மாணிக்கமா நதிக்கரைப்பா சறையகத்துங்
கார்மருவு மெழிற்செல்வக் கதிர்காம தலத்துமுறை
கூர்மருவு வேலேந்துங் குமரவேள் பதம்போற்றி. (க)

வேறு.

வானளக்கு முயர்சிகர வரைக்குலங்கண் மிகநெருங்கி யருவி வாய்ந்து, கானளக்கு மலர்முல்லைக் காட்டிடங்கள் பலசெறிந்து ஆகனம் பூத்த, மீனளக்குந் தடஞ்சோலைப் பழனங்கள் விரவி நெய்தல் மிக்குச் சேடன், தானளக்க வரியவள நிறையவுள்ள விழுமெனுந் தீகைகூல் நாட்டில். (உ)

வேறு.

ஓங்கிய தருமதான மொழுக்கமே யன்பு வாய்மை
தேங்கிய கல்வி கேள்விச் சிறப்பெலா நிறைந்த சான்றோர்
பாங்குட னமர்வ தாகும் பழம்பதி நிலவி யோங்கு
மாங்கதன் பெயரும் யூக புரமென வறைவர் மேலோர். (ங)

அக்குலப் பதியில் வாழு மாயிழை யொருத்தி நன்மை
மிக்கதோர் கற்பு நீங்கி வியபிசா ரியாகிச் சூழ்ந்த
வொக்கலா யுள்ளோர் தாமு முலகமும் பழிக்க நாளுந்
திக்கற்ற பாவி யாகித் திரிந்தன ளூர்க டோறும். (ச)

பாடக மணிந்த செய்ய பதுமமெல் லடியி னாளும்
பீடகம் பொதிந்த நாணம் பயிர்ப்பச்ச மடமு நீங்க
நாடகக் கணிகை போல நலத்தினைக் கூறி விற்பாள்
வாடலில் வதுவை செய்த மணமகற் றுறந்து சென்றாள். (ரு)

கூர்பெறு வடிவேற் கண்ணாள் கொடுமைகள் பலவுஞ் செய்தே
யேர்பெறு காளை யானார்க் கின்பமே விளைக்கு நல்லா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளூர்தொறுந் திரிந்து முன்செய் யூழ்வினை நலத்தி னாலே
பார்புகழ் கதிரை யென்னும் பழம்பதி யடைந்தாள் மன்னோ. ()

ஆடினள் கங்கை நீரி லாண்டவன் றிருமுன் சென்று
பாடினள் பணிந்து போற்றிப் பத்தியின் வசத்த ளாகிக்
கூடினள் ஞானம் பொல்லாக் குணங்களுந் தாமே நீங்க
நீடிய காலஞ் செய்த பாவத்தை நினைந்து நைவாள். (எ)

பழியொடு பாவ மெல்லாம் பன்னெடுங் காலஞ் செய்தே
னிழிவுறு பாத்தை மார்போ லின்பமே விற்று வாழ்ந்தேன் [னே
கழிந்தன கொன்னே வாணாள் கடைப்பட்டேன் செய்கை யென்
குழிதனில் வீழ்ந்த கண்ணில் குருடனை நிகர்த்தே னந்தோ. ()

என்றன ளன்று கூறு மியற்றிய பாவ மெல்லா
மொன்றுமே விடாது தானே யுள்ளவா நினைந்து கூறித்
துன்றிய கவலை வேலைத் தொடக்கினிற் பட்டு மூழ்கி
வென்றிவேற் பெருமான் றன்னை வழுத்துவாள் வேற்கண் மாது.

தன்னிகர் தானே யான தலைவனே போற்றி போற்றி
மின்னிடைத் தெய்வ யானை வள்ளிதன் மணாள போற்றி
பன்னிரு தடந்தோள் கொண்ட பகவனேபோற்றி பொல்லா
வென்னையு மடிமை கொண்ட விறைவனே போற்றி போற்றி. ()

புண்ணிய முதலே போற்றி புங்கவர் தலைவா போற்றி
பண்ணியன் மறைக ளேத்தும் பரமனே போற்றி போற்றி
புண்ணியல் வடிவேற் கையாய் பொறிமயிற் குகந்தாய் போற்றி
மண்ணுயி ரனைத்துங் காக்கு மைந்தனே போற்றி போற்றி. (கக)

பாரிகை யிந்த வாறு கடவுளைத் துதித்துப் பின்னும்
பாரினர் வெறுக்கும் பொல்லாப் பாவிநான் செய்த பாவம்
பேரறி யாமை தன்னாற் புரிந்தன பொறுத்தல் வேண்டு
மாரியர் போற்று மையா வடைக்கல முனக்கே யென்றாள். (கஉ)

கண்ணினீர் சொரியத் தேம்பிக் கதறியே யழுதாண் மீது
புண்ணியச் சோதி காமப் புங்கவ னிரங்கி யன்னாள்
பண்ணிய பாவ நீக்கிப் பரமமெய்ஞ் ஞான மீய
வெண்ணிய நிட்டை கூடி யிருங்கதி யடைந்தாண் மன்னோ. (கந)

கூறுது மின்னுங் கேண்மின் குவிமுலைக் கன்னி மாது
நாறுபூங் கோதை நல்லாள் புத்தள நகரி னுள்ளாள்
வேறுசிற் சிலர்தா மாதர் நிகும்பலை வசிப்போர் தாமும்
வீறுடன் கதிரை நண்ணி வெற்றிவேற் பிரானைப் போற்றி. (கச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனருள் வழங்கப் பெற்றோ பாவர்க்கு மரிய தான
பவமுதலகற்றி மேலாம் பரஞான மெய்தி யின்பச்
சிவகதி யடைந்தார் மேன்மை செப்புத லெளிதோவென்று
தவமுதல் வளர்க்குஞ் சூதன் சாற்றினன் மகிழ்ந்து மன்னோ. ()

பாவமே செய்தா ரேனும் புண்ணியம் புரிந்தா ரேனும்
யாவருஞ் சோதி காம வியன்பதி யடைவ ராயிற்
சேவலைக் கொடியிற் கொண்ட சேவக னருளி னாலே
மேவரும் போக மெய்தி முத்தியும் பெறுவ ரன்றே. (கசு)

யார்சிலர் கதிரை தன்னை யிதபத்தி லெண்ணி யில்லைச்
சீரிதி னகன்று செவ்வே டிருவடித் தியானத் தோடு
பார்புகழ் கணேசன் வாழும் பருப்பத மடைந்தே யாங்கு
நேர்படு தீர்த்த மூழ்கி நித்திய கன்மஞ் செய்து. (கஎ)

மகிழ்ச்சியை யடைந்து தூய மாணிக்கப் பிள்ளை யாரை
நிகழ்த்திய பத்து மாறு நேர்படு முபசா ரத்தோ
டிகழ்ச்சியில் பூசை செய்தே யிறையமர் மலைமே லேறிப்
புகழ்ச்சிசேர் தீர்த்த மாகு நவகங்கை புரிந்து மூழ்கி. (கஅ)

குலமலை விளங்குஞ் சிந்தா மணியெனுங் கோயி றன்னி
னலமலி காமே சன்ற னற்பதம் வணங்கு வாரேற்
றலமிதிற் சுகமாய் வாழ்ந்து தற்பர னுலகஞ் சார்ந்து
நிலவுவ ரன்னோர் தன்மை நாம்புக லரிதே யம்மா. (கசு)

வேறு.

திரையெறி மாணிக்கத் தெய்வநதி தனின்மூழ்கித்
தரைபுகழுங் கதிர்காம தலத்துறையுஞ் சண்முகனைத்
தரிசனமுஞ் செயப்பெறுவோர் தக்கோராய் வாழ்ந்துபின
ருரைபெறுநற் போகமூழ்கி யுயர்முத்தி யடைகுவரே. (உ0)

வேறு.

திருப்பயிலு நவகங்கைத் தீர்த்தமாடிச் செவ்வேள்பாதம்
விருப்பமுடன் வணங்கியேத்தி வேதியர்க்குத் தருமதானம்
பொருப்பதனி விருந்துசெய்வோர் புண்ணியரா யினிதுவாழ்ந்து
கருப்பயிலார் காமேசன் கழலடியிற் கலந்துவாழ்வார். (உக)

வேறு.

பற்புல வுரைப்ப தென்னை பாரினிற் கதிரை போல
வற்புதம் பயவா நிற்கு மருந்தலம் பிறிதொன் றில்லை
பொற்புறு பதியிற் சென்று புகன்றவை யனைத்துங் காண்பீர்
கற்பனை யன்றீ துண்மை கரிசறுத் துயர்ந்த சான்றீர். (உஉ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகு புராணத் தாங்காங் கிசைத்தன பணைய தானத்
துத்தம மகிமை யெல்லா முரைத்திட முடியுங் கொல்லோ
சத்தறி வின்ப ரூபத் தற்பர னடியைச் சார்ந்த
சுத்தமெய்த் தவத்தீ தென்று சொற்றனன் சூதன் மன்னோ. ()

சாற்றரு மகிழ்ச்சி யோங்கச் சவுனகன் முதலா னோர்கண்
மாற்றருந் தவத்துச் சூத மாமுனி பாதம் போற்றி
யாற்றரு மகமு முற்றி யாயிடை யெழுந்து போந்து
போற்றருஞ் சோதி காமப் பெரும்பதி யடைந்தார் மன்னோ. ()

தெளிதரு நன்னீ ராய மாணிக்கத் தீர்த்த மூழ்கி
யொளிதரு மேம கூடத் தொப்பில்கா பேசற் போற்றிக்
களிதரு சிறப்பிற் செல்வக் கதிர்காமந் தரிசித் தேத்தி
நளிதரு மலையைப் போற்றி நைமிச மடைந்து வாழ்ந்தார். (உரு)

பழுதகல் சோதி காம புராணத்தைப் படிப்போர் கேட்போர்
பிழையறப் பயனைச் சொல்வோர் பெரும்பொரு ளாய்வோர் தாமு
முழுதமை செல்வத் தாழ்ந்து முனிவிலாப் போக மூழ்கிப்
பொழுதுபற் பலதீர்ந் தீற்றிற் புங்கவ னடியே சேர்வார். (உசு)

வேறு.

சீர்பூத்த வஞ்சுகாமஞ் சோதிகாம மெனுங்கதிர் காமம் வாழ்க
கார்பூத்த குழற்றெய்வ யானைவாழ்க குறவள்ளி கருணை வாழ்க
பேர்பூத்த சோதிமலைக் காமேசன் பொதுநடன மென்றும் வாழ்க
பார்பூத்த வெழிற்செல்வக் கதிர்காமப் பரம்பொருளு மன்னிவாழ்க.

வேறு.

மாறடு தனிவேல் வாழ்க மயிலொடு சேவல் வாழ்க
கூறுசீர்க் குகன்மெய்த் தொண்டர் குவலய மீதுவாழ்க
மாறிலாக் கதிரை தன்னின் மடங்கட்டி யன்ன தானம்
வீறுடன் செய்யு மன்பர் பூமிசை விளங்கி வாழ்க. (உஅ)

மாதர் அருள்பெறுபடலமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 742.

---

கதிர்காமபுராணமுற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org